www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 JUDE

ஒக்.12–18,1997

11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 226

## மறுபடியும் முடக்கம்

## தற்காப்பா? தாக்குதலா?

## சவாலான உத்திகள்



சாவை அணைத்த சாவித்திரி

## வை.கோ.வந்தார் வன்னிக்கு



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மறுபடியும் அதே வரலாறு?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"மன்னிப்புக் கேட்க வேண்டும்
மனோகரன்-
அதுவும் ஒரு நொடியில்!"
'மனோகரா' படத்தில்
இடம்பெற்ற காட்சி அது!
கிட்டத்தட்ட அதேபோலவே
ஒரு காட்சி
நாட்டில் அரங்கேறியிருந்தது!
"மன்னிப்புக் கேட்கவேண்டும்
மந்திரி மங்கள சமரவீர-
அதுவும் 72 மணிநேரத்தில்!"
கோரிக்கை விடுத்தவர்கள்
சில பௌத்த மத குருமார்கள்!
'கருத்துச் சுதந்திரம்'
என்ற பெயரில்
சிங்களக் கமிஷன் இயங்கவும்
இனவாதக் கருத்துக்களைக் கொட்டவும்
அரசாங்கம் அனுமதித்திருந்தது!
இப்போது வளர்த்த கடா
மார்பிலேயே பாய்ந்திருக்கிறது!
மந்திரிக்குள்ள கருத்துச் சுதந்திரத்தை
சிங்களக் கமிஷன் ஆதரவாளர்களால்
சகித்துக் கொள்ள முடியவில்லை!
சிங்களக் கமிஷன் அறிக்கையை
கோபுரத்தில் வைக்கலாம்
என்பது இனவாதிகளின் கருத்து!
அதனைச் சொல்ல
கருத்துச் சுதந்திரம் இருக்கும்போது
அந்த அறிக்கையை
"குப்பைக் கூடையில் போடலாம்!"
என்று சொல்லக்கூடிய
கருத்துச் சுதந்திரம் மட்டும்
ஏன் கசப்பாக இருக்கிறது?
மந்திரி மங்கள சமரவீரவை
மனதாரப் பாராட்டலாம்!
மந்திரிகள் பலர் இருந்தும்
இனவாதத்தை எதிர்க்கத் துணிந்த
ஒரே மந்திரி அவர்தானே!
நமக்கேன் வம்பு என்று
ஒதுங்கிப் போகாமல்,
ஓடி ஒளிக்காமல்
மனதில் பட்டதைச் சொல்லியிருக்கிறார்.
மிக முக்கியமான
விடயம் யாதெனில்,
தன் கருத்துக்கு
எதிர்ப்புக் கிளம்பிய போதும்-
பணிந்து போகாமல்-
தனித்து நின்று முகம் கொடுத்தார்!
அந்தத் துணிச்சல்
ஆளும் தரப்பார் அனைவருக்கும்
இருந்திருக்குமானால்
இனவாதிகளுக்கு இத்தனை
துணிச்சல் தோன்றியிருக்காது!
"நான் மன்னிப்புக்
கேட்பது இருக்கட்டும்
முதலில் நாட்டு மக்களிடம்
நீங்கள் கேளுங்கள் மன்னிப்பு!"
என்று போட்டாரே போடு!
அந்தத் துணிச்சல்தான்
அரசியல்வாதிகளுக்கு தேவையானது!
பாவம் மங்கள!
அவரது சகாக்களே அவரை
பொறுத்த தருணத்தில்
கைவிட்டு விட்டனர்!
இனவாத சக்திகள்
நாற்புறமும் சூழ்ந்துகொண்டு
"மன்னிப்புக் கேட்கவேண்டும்"
என்று கூச்சலிட்டபோது
தனித்து நின்றுதான் அவர்
தன்னிலை விளக்கம்
கொடுக்க வேண்டியிருந்தது!
மங்களவுக்கு எதிரான
உண்ணாவிரதம்
நடந்து முடியும்வரை
ஒரு அமைச்சர்கூட
தங்கள் சகாவுக்காக
வாயே திறக்கவில்லையே!
இந்த விடயத்தில்
எதிர்க்கட்சி நடந்து கொண்ட முறையும்
மிகவும் அநாகரிகமானது!
மங்களவுக்கு எதிரான
உண்ணாவிரதத்தில்
எதிர்க்கட்சியின் முக்கிய பிரமுகர்
சுசில் முனசிங்க பங்கேற்றிருக்கிறார்!
அநாகரிகங்களை
அரசியலாக்கப் பார்க்கிறார்கள்
ஐக்கிய தேசியக் கட்சியினர்
என்பதற்கு
வேறென்ன சான்று வேண்டும்?
பேரினவாத சக்திகளிடம்
உடைந்த வாள்களும்
துருப்பிடித்த அம்புகளும்தான்
இருக்கின்றன!
ஆனால், அவர்களை எதிர்த்துப்
போராட வேண்டியவர்களிடம்
நெஞ்சுரமும், நேர்மையும்
இல்லாதிருப்பதால்
பேரினவாதிகள்தான்
வெற்றி பெற்று விடுகிறார்கள்!
இதுதான் வரலாறாக
இருந்து வந்திருக்கிறது!
மறுபடியும் ஒருமுறை
அந்த வரலாறுதான்
புதுப்பித்து எழுதப்படப்போகிறதா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## தேவ சிநேகமும் பிறர் சிநேகமும்!



நம்மைக் காப்பாற்றும் தேவன் என்றும் அன்பாகவே இருக்கிறார். ஏன்? அன்பின் மறு உருவமே தேவன். தாயின் அன்பின் சாரமாக இருப்பவர் அவரே!

எவனொருவன் அன்பில் நிலைத்திருக்கிறானோ, அவன் தேவனில் நிலைத்திருக்கிறான். ஆக, தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். ஆம். அன்பு தேவனின் ஆதார குணம். எனவே, அதுவே மனிதனின் அத்திவாரக் குணமாக இருத்தல் வேண்டும்.

"எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை நேசி! உன்னை நேசிக்குமாப்போலே உன் அயலவனையும் நேசி! அயலவனை மட்டுமல்ல உன் பகைவனையும் நேசி!"- இதுவே இயேசுநாதர் படிப்பித்தவைகளின் ஆதார சுருதி. பத்துக் கற்பனைகளும் இந்த இரண்டு கற்பனைகளுக்குள்ளே அடங்கும்.

"எல்லாவற்றிற்கும் மேலாக தேவ சிநேகம்- அடுத்து இரண்டாவது பிறர் சினேகம். எல்லார் மனதிலும் இவை இரண்டும் வாழ்ந்தால், நல்லாரே இவ்வுலகில் வாழ்வர். பகைவர்கள் மறைந்து விடுவார்கள். பாசமுள்ள மனிதர்களே வாழ்வார்கள்!" எனவே-

"என் ஆயன் ஆண்டவர்- எனக்கென்ன குறைவு?
பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கிறார்.
என் களைப்பை ஆற்ற நீர் அருவிக்கு என்னை
அழைத்துச் செல்கிறார். எனக்குப் புத்துயிர் ஊட்டுகிறார்." (சங்கீதம் 22:1-3)

ஏ.பி.வி. கோமஸ்.

## கணவனின் கடமை!

கணவன் மனைவியிடம் இன்பம் துய்க்க உரிமை பெற்றுள்ளது போன்றே, அவளின் உரிமைகளைப் பேணிக் காக்கவும் அவன் கடமைப்பட்டவனாவான்.

காம இச்சையைத் தணித்துக் கொள்ளவும், குழந்தைகள் பெற்றுத் தரவும், அவனின் குழந்தைகளைப் பேணி வளர்க்கவும் அவனின் உடமைகளை பாதுகாக்கவும் மட்டுமே மனைவி என்று கருதுவதும், அவள் வயிறார உண்கிறாளா, என்று அக்கறை கொள்ளாதிருப்பதும் பெரும் பாவமாகும்.

ஒரு மனிதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! ஒரு மனைவி தன் கணவனிடம் எவ்விதமான உரிமைகளைப் பெற முடியும்?" என்று வினவினார்.

அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் "அதாவது நீர் எதனை உண்கின்றீரோ, அதனையே (அதே தரமுள்ளதை) நீர் அவளுக்கும் அளிக்க வேண்டும்: நீர் அணியும் ஆடை போன்றே அவளுக்கும் அணிவிக்க வேண்டும்: அவளின் முகத்தில் அடிப்பதோ அல்லது தள்ளி விடுவதோ கூடாது. அல்லது உம்மை விட்டும் அவளைத் துண்டித்துக் கொள்ளவும்கூடாது."

ஆதாரம்: அபூதாவூத் இப்னு ஹிப்பான் (ஸஹீஹ்).

ஐ. மர்ஜானா, மருதமுனை-02.

## கவிதைப் போட்டி இல.223

பரிசுக்குரிய கவிதை



### திரை

முகத்தின் திரை எல்லாம் உன்
முதுமையால் வந்ததல்ல; -அவை
உலகத்தில் உழலுகின்ற
உதவியற்றோர் வறுமைக் கோடு!

சதா கணபதி-அதிகாரவத்தை, உடபுஸ்ஸலாவ.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**பணி என்றும் வாழும்**

காந்தி பிறந்த மண்ணில்
கண்ணுறங்கிப் போனாலும்,
ஏந்தி நீ செய்தபணி
எம்மனதில் வாழ்ந்திடுமே!
சாந்தி அடைக உந்தன்
சத்தியத்தின் ஆத்மாவே!

ஆர்.பி.ரதன்-நீர்கொழும்பு.

**தெரேசா!**

அக
அழகின்
அகராதி!

ரேணுகா
நிபாய்தீன்-
ஏறாவூர்-2.

**எங்கள் அன்னையை ஏன் பறித்தாய்?**

அல்லலுற்ற ஏழைகளை
அரவணைக்கும் கரங்களெங்கே?
தொல்லைகளைத் துடைக்கவரும்
தூயமணிக் கால்களெங்கே?
எல்லையில்லா அன்பளிக்கும்
எங்களது இதயமெங்கே?
சொல்லிறைவா எங்களன்னை
தெரேசாவை ஏன் பறித்தாய்?

கு.திருமால்- அமிர்தகழி, மட்டக்களப்பு.

**முத்து**

நிரந்த ஜோதி மறைந்தாயோ?
நிரந்தரம் உன்பெயர் பதித்தாயோ?
முத்திரை பதித்த முத்தழகே
இத்தரையில் நீர் ஓர் அரியமுத்தே!

அ.யூடிட்-கல்கிசை.

**மெழுகுவர்த்தி**

தன்னலமின்றி
பிறர் நலங்கருதி
ஏழைகள் வாழ்வில்
ஏற்றிய தீபம்
என்றும் பேசும்
இவர் நாமம்.

செல்வி நிஹாறா
ஏ.முத்தலிப்- அநுராதபுரம்

**என்றென்றும்....**

உருவமதில் முதுமை;
உள்ளமதில் இளமை;
கண்கள் இரண்டும்
பொழிவது கருணை;
பாரில் என்றும்
நிலைத்திருக்கும்
அன்னையிவள் பெருமை!

நெ.ஜெனட் நிக்ஷலா-
உடப்பு-02.

**ஏன் மௌனம்?**

ஆசை ரோஜா அழிந்த போது
அலறித் துடித்த மானிடனே-இம்
மாசிலா ரோஜா மறைந்த போது
மௌனம் சாதித் ததுமேனோ?

ஏ.எச்.ஸொஹாரா சத்தார்-பெரியமுல்லை.

**மலை முகடு**

ஆழியென மக்கள்
அலைபுரண்டு பரிதவிக்க
நாளிகையில் நற்கதிக்கு
நடைபயின்ற தேனம்மா?
ஈகையின் தாயே!
என்றும் நீ எம்முடனே
சாகாமல் வாழ்ந்திடுவாய்
சாதனையின் மலை முகடே!

தர்ஷிக்கா கனகசிங்கம்-
"கடாட்சம்", மட்டக்களப்பு.

**அழவைத்த தேவதையே!**

அழகென்று ஒன்றில்லை;
அன்பொன்றே அழகென்று
கூறிமறைந்த தேவதையே!
பாரம்மா பாரினில் நாம்
அன்பின்றித் தவிக்கின்றோம்!

ஷைலஜா ஜேசுதாஸன்-
இறம்பைக்குளம்,
வவுனியா.

**நீதான் அன்னையே!**

தெளிந்த உள்ளம்..
ரேகை தெரியும் மேனி..
சாந்த முகம்!

ஆர்.அஞ்சனா-கொட்டாஞ்சேனை.

**பெருக்கம்**

இவளின் அன்பிற்கு
ஆண்டவன் விதித்த
வரிகள்!

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல.226



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 18.10.1997

**முகவரி:** கவிதைப் போட்டி இல.226
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

"நாம் அறிந்தவரை, நமது சிற்றறிவுக்கு எட்டியவரை, தீர்வு யோசனைகள் என்றால் என்ன என்பது கூட பெரும்பாலான மக்களுக்கு தெரியவே இல்லை," என்று 'முரசம்' கூறியது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையே. ஏனெனில் கொழும்பில் இருக்கும் என்னைப் போன்ற பலருக்குக்கூட இதன் அடியும் விளங்கவில்லை, நுனியும் விளங்கவில்லை. அப்படியிருக்கும் போது சமாதான ஊர்திப்பவனிகள் வைத்தும், தெருக்கூத்துக்கள் ஆடியும் காணப்போகும் பலன் என்னதானோ?

ஆ.முகுந்தன், வெள்ளவத்தை.



'அரண்மனை இரகசியம்' என்ற தலைப்பில் புவனா எழுதிவரும் டயானா பற்றிய கட்டுரையைப் படித்தேன். நன்று. காதிலே பூ கந்தசாமியார் கற்பனையில் எழுதிய 'அணில் அண்ணாவும், மகாராணியும்' என்ற ஆக்கம் அபாரம்.

முஹம்மது ஹஸனி, கல்முனை-7.

○▬

காதிலை பூ கந்தசாமியாரின் 'அணில் அண்ணாவும் மகாராணியும்' சூப்பர். அவருக்கு நன்றி. அதை எமக்காக தந்ததற்கு என் இனிய முரசுக்கு அன்பான வாழ்த்துக்கள்.

தாமோதரம் பிரதீவன், பாண்டிருப்பு-01.

○▬

இளவரசி டயானாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளைப் பார்க்கும் போது, அவர் தவறான வழிகளில் செல்வதற்கு ஏதுவாக அவரது கணவரே அமைந்துள்ளார். ஆசாபாசங்களுக்கு மதிப்புக் கொடுக்காத ஒரு துணைவனை அடைந்த அந்த ரோஜா, அரண்மனையின் கூண்டுக்கிளியாகவே வாழ்ந்துள்ளார். எத்தனை சொகுசு வாழ்க்கை வாழ்ந்தாலும், அன்பும் ஆறுதலும் இல்லையாயின் அங்கு அதில் பயனில்லையல்லவா? வாழ்வும் சீரழிந்து வாழ்க்கையும் முடிந்தது.

பூலானும், பிக்குவும் பிரிந்து செல்லும் கட்டத்தினை வாசித்தபோது, என் கண்களும் பனித்தன.

திருமதி திலகரத்தினம், அவிசாவளை.

○▬

தகவல் பெட்டியும், 20ம் பக்க தகவல்களும் பிரமாதப்படுத்துகின்றன. 'குண்டோதரர்கள்' அசத்தல். வன்னியில் சைக்கிள் டைனமோவில் இருந்து வானொலி கேட்க மின்சாரம் பெறும் காட்சியை பிரசுரித்திருந்தீர்கள். அதற்கு கொடுக்கப்பட்டிருந்த விளக்கம் அருமை. முரசு முரசுதான்.

எம்.பர்ஸான், மன்னார்.

○▬

'அரசியல் தொடர்' பலத்த வரவேற்பைப் பெற்றுவிட்டது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சிலர்தான் புறுபுறுக்கிறார்கள். அவர்கள் முகச் சுழிப்பில் இருந்தே உண்மை சுடும் என்ற உண்மை தெரிகிறது.

கி.முருகானந்தன், கனடா.

○▬

'அன்னையின் கருணை' என்ற தலைப்பில் அன்னை தெரேசாவைப் பற்றி நீ சுமந்து வந்த செய்தி என் கண்களில் நீரை வரவழைத்துவிட்டது. அந்த உன்னதத்தின் செய்தி தந்த நீயும் என் உள்ளத்தில் உயர்ந்து நிற்கிறாய். டயானாவைப்பற்றி நீ தரும் தொடர் சுதந்திரமாய், வானில் சிறகடித்துப் பறக்கவேண்டிய ஒரு பறவையின் சிறகுகள் அரண்மனை என்னும் கூட்டுக்குள் எவ்வாறெல்லாம் உடைக்கப்பட்டது என்பதை அறியத் தருகிறது. டயானாவைப் பற்றித் தருவதைப்போல் அன்னை தெரேசாவைப்பற்றியும் இனிய செய்திகளை என் இனிய முரசு தரும் என ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

எஸ்.சுரேஸ், மட்டக்களப்பு.

○▬

இனிய முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் என்னை கவர்ந்தவை. அதிலும் 'உடைந்த இரவு', 'கனவு மெய்ப்படவேண்டும்', 'இராமாயணம்', பூலானின் சோகக்கதை சூப்பர் சூப்பர்.

செ.தவரூபன், தேத்தாத்தீவு-01.

○▬

அன்பின் முரசே!

சிறிய எழுத்துக்களில் நிறைந்த சுவையான விடயங்களைத் தரும் உமது தரத்திற்கு நிகர் நீரே! "கடுகு சிறிது காரம் பெரிது" குறுங்கதைகளில், 217வது முரசில் கனடா கலைவாணி இராஜகுமாரன் எழுதிய 'அக்கரையில் கரைபவர்கள்' யதார்த்தமானது. எல்லோரையும் சிந்திக்க வைப்பது. அக்கரைகள் பச்சையில்லையென்று இதைத்தான் சொன்னார்களோ?

ஆறுமுகம் வேல்முருகன், சூரிஜ், சுவிற்ஸர்லாந்து.

○▬

என் இனிய முரசே...!

நீ வாரந்தோறும் உன் இதழில் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் தெவிட்டாத இனிய சுவையே... உன் இதழில் வாரந்தோறும் வலம் வரும் 'உடைந்த இரவு' தொடர் படு சூப்பர்...

'இலக்கிய நயம்' இதயத்தைக் கிள்ளிக்கொண்டு போகின்றது. மொத்தத்தில் நீ பல இதயங்களில் மலர்ந்தவோர் வாடா மலர். வாழ்க... முரசே.. வாழ்க....!

திருமதி கொன்சி நித்தியானந்தன், கண்டி.

## என்ன கிடைக்கும்!

தீர்வு யோசனைகளைப் பற்றி ஆளாளுக்கு ஒன்று பேசுகிறார்கள். இன்று வருகிறது, நாளை வருகிறது என்கிறார்கள். பின்னர் யோசனைகளை "மக்கள் ஏற்றுவிட்டனர்" என்றும் உரைக்கிறார்கள். மொத்தத்தில் நம்மையெல்லாம் குழப்புகிறார்கள். 'முரசு' சொல்வது கச்சிதம்: 'வெறுங்கையால் முழம் போடுகிறார்கள்'! இறுதியில் நமக்கு ஒரு முழம் துணிதானும் கிடைக்குமா?

என்.பிரகாசம், யாழ்ப்பாணம்.

## துணிச்சல் எங்கே?

ஆட்சியாளரின் இழுத்தடிப்பும், தயக்கங்களும்தான் 'சிங்களக் கமிஷன்' போன்ற இனவாத சக்திகள் மீண்டும் தலைதூக்குவதற்குக் காரணம் என்பதை இராஜதந்திரி விளக்கியிருந்தார். அது மிக்க உண்மையான கூற்றாகும். இலங்கை-இந்திய ஒப்பந்த நேரத்திலும் இனவாத சக்திகளும், சுயநல அரசியலாளர்களும் துள்ளினார்கள். அவர்களிடம் யோசனை கேட்டுக்கொண்டிருந்தால் ஜே.ஆர். அந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் போட்டிருக்க முடியுமா? அத்தகைய துணிச்சல் இன்றைய ஆட்சியாளர்களுக்கு இல்லாமல் போனது ஏன்?

ஆ.தயாசேகரம், திருக்கோணமலை.

## பூஜிக்க வேண்டாம்

நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும் கோயில் கட்டும் காலம் இது. நடிப்பை இரசிக்கலாம். பாராட்டலாம். நடிக, நடிகைகளை பூஜிக்கலாமா? அவ்வாறு பூஜிப்பவர்களின் கண்களைத் திறக்கவைக்கும்- மித்ரவாசு எழுதிவரும் திரையுலக 'மறுபக்கம்'. ஆண், பெண் நட்புகள் கூடாது என்பதல்ல. ஆனால் நடிகைகளை தங்கள் செல்வாக்கால் பணியவைத்த நடிகர்களும் இருக்கிறார்கள். அதன் பெயர் நட்பல்ல. 'ஓசியில் அனுபவித்தல்'. சினிமா செய்திகளை சுடச்சுட தரும் முரசு, சினிமா உலக வண்டவாளங்களையும் அம்பலமாக்கும் தொடரையும் பிரசுரிப்பது பாராட்டுக்குரியது.

இ.செல்வேந்திரன், கொழும்பு-08.



படிப்பகம்

www.padippakam.com

# அம்பாறையைப் பிரிக்க கூட்டணி இணக்கம்

## தமிழ்க் கட்சிகள் இடையே இருவித நிலைப்பாடுகள்

அரசின் புதிய யோசனைகள் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் மத்தியில் இரண்டு விதமான நிலைப்பாடுகள் தோன்றியுள்ளன.

வடக்கு-கிழக்கு தொடர்ந்தும் தற்போதுள்ளதுபோல இணைந்திருப்பதா இல்லையா? என்பதை தீர்மானிக்க கருத்துக் கணிப்பு நடத்துவதை சகல தமிழ்க்கட்சிகளும் எதிர்க்கின்றன.

ஆனால் கருத்துக் கணிப்பு நடத்துவதைத் தவிர, அரசின் புதிய யோசனையில் கூறப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ள கூட்டணி சம்மதம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணமும் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் இணைந்ததாக வடக்கு- கிழக்கு நிர்வாக அலகாக இருக்க வேண்டும். அம்பாறைத் தொகுதியை விட்டுக் கொடுக்கலாம். தனி ஒரு முஸ்லிம் அலகாக தென்கிழக்கு மாகாணசபை பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாக உருவாக்கப்படலாம் என்பது கூட்டணியின் நிலைப்பாடு. புளொட் அமைப்பினரும் மேற்கண்ட நிலைப்பாட்டுக்கு ஆதரவான நிலையிலேயே உள்ளனர்.

### ஏற்கமுடியாது

ஈ.பி.டி.பி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், தமிழ்க் காங்கிரஸ் ஆகிய அமைப்புக்கள் வடக்கு-கிழக்கில் எந்தவொரு பகுதியையும் விட்டுக்கொடுக்க இயலாது என்று கூறியுள்ளன.

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வடக்கு-கிழக்கு பிராந்திய சபைக்குள் விசேஷ ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட பிராந்திய சபைகளுக்குள் தமிழ் முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளை வடக்கு-கிழக்கில் உள்ள சிங்கள மக்களும் அனுபவிப்பர். அம்பாறையை பிரிக்க வேண்டிய அவசியமில்லை என்று ஈ.பி.டி.பி. கூறியுள்ளது.

அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசும்போது வடக்கு-கிழக்குக்கு விசேஷ அதிகாரங்கள் வழங்கமுடியாது என்று அரசாங்கம் கூறுகிறது. நாட்டின் சகல பிராந்திய சபைகளுக்கும் ஒரே விதமான அதிகாரங்களே வழங்கப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் வடக்கு-கிழக்கை பிரிப்பதற்காக அங்குள்ள சிங்கள மக்களின் பகுதிகளை தனியாக பிரிக்கவும், முஸ்லிம் தனி அலகை உருவாக்கவும் விசேஷ ஏற்பாடு செய்யப்படுகிறது. மலையகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கோ, நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்களுக்கோ அவ்வாறு தனி அலகை வழங்க அரசாங்கம் முன்வரவில்லை. எனவே பிரிப்புக்கு சாதகமான விசேஷ ஏற்பாடுகளை மட்டுமே முன்வைப்பதை ஏற்கமுடியாது என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

### உரிமை இல்லை

முஸ்லிம்களுக்கு கிழக்கில் ஒருதனி அலகு அமைக்கப்பட வேண்டுமானால், வடக்கு-கிழக்கு பிரச்சனை நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் உள்ளது போன்ற பிரச்சனையல்ல என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிகாரப் பகிர்வு விடயத்திலும் ஏனைய பிராந்தியங்களுக்கு வழங்கப்படுவது போல் அல்லாமல், இனப்பிரச்சனைக்கு நிரந்தரதீர்வு காணக்கூடிய அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்படவேண்டும்.

நில அதிகார அளவு, பிராந்திய சபைகளை நினைத்த நேரத்தில் கலைக்கும் அதிகாரம் போன்றவற்றில் இன்னமும் இறுதி முடிவு காணப்படவில்லை. இந்த நேரத்தில் நாம் மட்டும் விட்டுக்கொடுப்புக்களை செய்ய வேண்டும் என்று கோர யாருக்கும் தார்மீக உரிமை கிடையாது என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"அம்பாறை உட்பட வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயக பிரதேசங்களாகும் அவற்றை விட்டுக் கொடுப்பது என்பதை ஏற்கமுடியாது. புதிய யோசனைகளை முழுமையாக நிராகரிக்கிறோம்." என்று ரெலோ இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

### வேண்டுகோள்

இதேவேளை 07.10.97 அன்று ஈ.பி.டி.பி., புளொட், கூட்டணி, இ.தொ.கா. ஆகிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அரசின் புதிய யோசனை பற்றி கூடி ஆராய்ந்தன.

அக் கூட்டத்தில் தமது நிலைப்பாடுக்கு சாதகமான நிலையை எடுக்குமாறு ஏனைய மூன்று கட்சிகளிடமும் கூட்டணி சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. கூட்டணியின் சார்பாக நீலன் திருச்செல்வம், இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு-கிழக்காக தொடர்ந்து இணைந்திருக்க திருமலை, மட்டக்களப்பில் கருத்துக் கணிப்பு நடத்துவதை மட்டுமே எதிர்க்கிறோம். கருத்துக் கணிப்பு நடத்தாமல் அரசின் புதிய யோசனையில் கூறப்பட்டிருக்கும் ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்ளலாம் என்பதே தமது நிலைப்பாடு என்று கூட்டணியினர் தெரிவித்தனர். ■

# ஐந்தாண்டுகள் தள்ளிவைக்க கோரிக்கை

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் அஷ்ரப்

வடக்கு-கிழக்கில் நடத்துவதற்கு அரசு யோசனை தெரிவித்துள்ள கருத்துக் கணிப்புக்களை மேலும் ஐந்தாண்டுகளுக்கு தள்ளி வைக்குமாறு ஜனாதிபதியிடம் அமைச்சர் அஷ்ரப் கோரிக்கை விடுத்ததாகத் தெரிகிறது.

ஜனாதிபதி சந்திரிக்காவை தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவும் கூட்டாகச் சென்று சந்தித்திருந்தனர். 5.10.97 அன்று இச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

அமைச்சர் அஷ்ரப்பின் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி திட்டவட்டமான பதில் எதனையும் தெரிக்கவில்லை என்று தெரிகிறது.

கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டால் புலிகள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவிப்பர்.ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளும் கருத்துக் கணிப்பை எதிர்க்கின்றன என்று அமைச்சர் அஷ்ரப் அவர்கள் எடுத்துக்கூறியதாக தெரிகிறது.

வாக்கெடுப்பு நடத்தாமல் தனது புதிய யோசனையை அரசு செயற்படுத்தலாம் என்பதை கூட்டணியினர் வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.

கூட்டணியும், முஸ்லிம் காங்கிரசும் அம்பாறை தொகுதியை ஊவா மாகாணத்துடன் இணைப்பது, கிழக்கில் தனி முஸ்லிம் அலகை உருவாக்குவது என்பதில் தமக்கிடையே உடன்பாட்டுக்கு வந்துள்ள கட்சிகளாகும். அந்த அடிப்படையிலேயே கூட்டாக ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

# தாயகப் பிரதேசத்தை தாரை வார்ப்பதா?

## குமார் பொன்னம்பலம் கண்டனம்

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக அரசின் புதிய யோசனைகளை தமிழ்க்காங்கிரஸ் முழுமையாக எதிர்க்கும் என்று அக் கட்சியின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் (குமார்) 'முரசு'க்கு தெரிவித்தார்.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டை கொண்டிருந்தன. வடக்கு-கிழக்கை பிரிக்கக்கூடிய சர்வஜன வாக்கெடுப்பை எக் கட்டத்திலும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதே அந்த நிலைப்பாடாகும்.

அதன் பின்னர் ஜனநாயக மக்கள் கூட்டமைப்பில் (டி.பி.ஐ) தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டிலும் வடக்கு-கிழக்கை ஒரே நிர்வாக அலகாகக் கொண்டு, அதற்குட்பட்ட வகையில் தான் முஸ்லிம்களுக்கும் ஒரு தீர்வு வழங்க முடிவு செய்யப்பட்டது என்றும் குமார் பொன்னம்பலம் கூறினார்.

"எக்கட்டத்திலும் தமிழ் பேசும்மக்களின் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கின் ஒரு பரப்பைக்கூட தாரைவார்க்கும் முடிவுக்கு இணங்கமுடியாது என்பதே தமிழ்க் காங்கிரசின் உறுதியான நிலைப்பாடாகும். இதிலிருந்து இம்மியளவும் நாம் விலகவில்லை" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ■

# தொடர் மோதல்கள்

கடந்த 4.10.97 சனிக்கிழமை முதல் புளியங்குளம் பகுதியிலும், புளியங்குளத்துக்கு கிழக்கே உள்ள நெடுங்கேணி நயினாமடுப் பகுதிகளிலும் கடும் சமர் தொடர்ந்து வருகிறது.

நயினாமடுப் பகுதியில் நிலைகொண்டு தமது அரண்களை பலப்படுத்த முனையும் படையினரை நோக்கி புலிகள் பலத்த தாக்குதல் தொடுத்து வருகின்றனர். இவையே ஒட்டிசுட்டான் மோதல்கள் என்று செய்திகளில் கூறப்படுகின்றன. படையினரின் நிலைகளை அண்டிய பகுதிகளில் உள்ள புலிகளின் நிலைகளை தாக்க முற்பட்ட ஹெலிகள் புலிகளின் விமான எதிர்ப்பு படையணியால் அடுத்தடுத்து சுடப்பட்டுள்ளன. இதனால் நயினாமடு நோக்கி முன்னேறித் தாக்கிய புலிகளின் அணிகளை பின்னடையச் செய்யும் முயற்சிகள் தடைப்பட்டன.

சனி முதல் புதன் வரையான மோதலில் படையினர் தரப்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என்று உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன. புலிகள் தரப்பில் 26 பேர்வரை பலியானதாக கூறப்பட்டுள்ளது. முன்னுக்கு பின் முரணான தகவல்களே வெளியாகியுள்ளன. ஏனைய தகவல்கள் அடுத்தவாரம்.

# புதிய யோசனைக்கு அடையாள எதிர்ப்பு?

## அம்பாறை மாவட்டத்தில் புலிகள் தாக்குதல்!

வடக்கு-கிழக்கு பிரிவதா இல்லையா என்பதை தீர்மானிக்க மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் கருத்துக் கணிப்பு நடத்தப்படும். பிரியக்கூடாது என்று வாக்களிப்பில் முடிவானால், கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறை தொகுதி தனியாகப் பிரிக்கப்படும் என்று அரசாங்கத்தின் புதிய யோசனை வெளியாகி இருந்தது.

இந்த யோசனை வெளியானதின் பின்னர் 6.10.97 அன்று அம்பாறை மாவட்டத்தில் புலிகள் ஒரு பாரிய தாக்குதலை நடத்தியுள்ளனர். அரசின் புதிய யோசனைக்கு கிழக்கில் உள்ள புலிகள் காட்டியுள்ள அடையாள எதிர்ப்பாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக கருதப்படுகிறது.

நாற்பதுக்கு மேற்பட்ட பொலிசார் பணியில் இருந்த மேற்படி பொலிஸ் முகாம் தாக்குதலில் 8 பொலிசார் பலியாகினர். மூவரைக் காணவில்லை.

புலிகளின் தாக்குதலால் பொலிசார் முகாமை விட்டு அகன்றதின் பின்னர் அங்கிருந்த ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ■

# பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு

## ஊர்வலங்கள் நடத்த ஏற்பாடுகள்!

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, இம்மாதம் 24ம் திகதி முதல் நான்கு நாட்களுக்கு ஸ்கொத்லாந்தின் எடின்பேர்க் நகரில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாட்டுத்தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறார்.

இக்கால கட்டத்தில் எடின்பேர்க் நகரில் எல்.ரி.ரி.ஈ.யினர் மிகப் பிரமாண்டமான அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பிரதானமாக ஒக்டோபர் 25ம் திகதியன்று இலண்டன் மாநகரிலிருந்து எடின்பேர்க் நகருக்கு 'ஈழம்-ஸ்கொத்லாந்து நட்புறவு ரயில்' ஒன்று செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் 600 ஈழவிடுதலை இயக்க ஆதரவாளர்கள் பயணம் செய்யவிருக்கின்றனர்.

எடின்பேர்க் வேவர்லே ரயில் நிலயத்தில் ஏற்கனவே வந்து சேர்ந்திருக்கும் குழுவினர் ரயிலில் வந்து சேருவோருடன் இணைந்து எடின்பேர்க் நகர வீதிகளினூடாக ஊர்வலமாகச் செல்வர். ஊர்வலத்தின் முன்னால் நாதஸ்வர வித்வான்கள் இசை வழங்கிக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட திறந்த வண்டியில் செல்வார்கள்.

எடின்பேர்க்-பிரின்சஸ் வீதியிலுள்ள அங்காடி வளாகத்தின் மேல் தளத்தை ஊர்வலம் சென்றடைந்ததும், பிரிட்டனின் யூனியன் ஜாக் தேசியக்கொடி, ஸ்கொத்லாந்தின் கொடி ஆகியவற்றுடன் புலிகள் இயக்கக் கொடியும் ஏற்றிவைக்கப்படும். ஸ்கொத்லாந்தின் தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இக்கொடிகளை ஏற்றுவதைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது. கூட்டத்தின் முடிவில் ஈழத்தமிழர்களின் பண்பாட்டுடன் ஒட்டிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

ஸ்கொத்லாந்தில் அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் அம்மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. அம்மக்கள் சுயநிர்ணய உரிமை பெறவிருக்கின்றனர். இலங்கையிலும் இத்தகைய சுயாட்சிக்காகப் போராட்டங்கள் தொடர்ந்து பல தசாப்தங்கள் நடைபெற்று வருகின்றன. இலங்கையில் சுயாட்சி உரிமைக்காக போராடி வருவோர், அவ்வாறு ஆட்சி அதிகாரங்களைப் பெற்ற ஸ்கொத்லாந்து மக்களுக்கு தமது ஆதரவையும் பாராட்டையும் தெரிவிப்பதற்காகவே இத்தகைய ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்பவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வரும் தலைவர்களுக்கு, இலங்கையில் இடம்பெறும் போராட்டங்கள் பற்றியும் அரசின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்கொத்லாந்து மக்களை ஒரு காலத்தில் ஈழத் தமிழர்களுடன் ஒப்பிடுவது வழக்கமாக இருந்து வந்தது. ஸ்கொத்லாந்து மக்கள் கடும் உழைப்பாளிகள்: நம்பிக்கையும் நாணயமுமுடையவர்கள்: ஆகவே இவ்விரு இனமக்களும் ஒரே மனப்பாங்குடையவர்கள் என்பதனால் யாழ்ப்பாணத்தை 'தென் ஆசியாவின் ஸ்கொத்லாந்து' என்று வர்ணித்தனர். இதனால் ஈழ ஆதரவாளர்களான இங்கிலாந்தில் வாழும் ஆசிய மக்களும் ஸ்கொத்லாந்து மக்களும் இந்நிகழ்ச்சிகளுக்குப் பேராதவு வழங்குவதாகத் தெரிகிறது.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளும் சகல பிரதிநிதிகளுக்கும், முழு விபரங்களும் அடங்கிய ஆவணங்கள் விநியோகிக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது. எடின்பேர்க் நகர மக்களுக்கும் ஈழமக்கள் போராட்டங்கள் பற்றிய விபரக்குறிப்புக்களடங்கிய கையேடுகளும் ஏற்கனவே வழங்கப்பட ஆரம்பித்துவிட்டன. ■

# வதந்திகள் பரவியது எப்படி?

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு அரசு தயார் என்றும், அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சுக்கான முயற்சிகள் நடந்து வருவதாகவும் சில வாரங்களுக்கு முன்னால் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

அரசின் புதிய யோசனைகள் வெளியாக முன்னரே இவ்வாறான வதந்திகள் கிளப்பிவிடப்பட்டன. அரசின் புதிய யோசனைகளை முன்கூட்டியே அறிந்து, இரகசிய சம்மதம் வழங்கிய தமிழ்க் கட்சி ஒன்றின் வட்டாரமே மேற்படி புரளியைக் கிளப்பியதாக கூறப்படுகிறது. ■

# மூன்று ஹெலிகளுக்குச் சேதம்!

புளியங்குளத்துக்கு வடக்கே புலிகளின் அரண்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்துவதற்காகச் சென்ற இரு ஹெலிக்கொப்டர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருப்பதாக எயார் மார்ஷல் ஒலிவர் ரணதுங்க தெரிவித்ததாக 'தி ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்கத் தயாரிப்பான பெல் 212 ரக ஹெலியும் ரஷ்யத் தயாரிப்பான எம்.ஐ-24 ரக ஹெலியும்தான் தாக்குதலுக்குள்ளாயின.

எம்.ஐ-24 ஹெலியின் விமானி குண்டு பட்டு மாண்டார். உதவி விமானியும் காயமடைந்தார். இருப்பினும் புலிகளின் இலக்குகளைத் தாக்கிப் பெரும் சேதத்தை விளைவித்ததாக படைத்தரப்பினர் கூறியுள்ளனர். புலிகளுக்கு ஏற்பட்ட சேதம்பற்றி விபரங்கள் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

06.10.97 அன்றும் ஹெலி ஒன்று புலிகளால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. ■

# சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சுட்டுக் கொலை!

## புட்டுச்சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது சுட்டனர்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் (57) யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர், கிட்டத்தட்ட 16 வருடங்களின் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராகவும், லேக் ஹவுஸ் பத்திரிகைகளின் முகவராகவும் தர்மலிங்கம் செயற்பட்டு வந்தார்.

சமீபத்தில் முன்னாள் யாழ் மேயரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் யாழ்மாவட்ட அமைப்பாளருமான அல்பிறட் துரையப்பாவின் உருவப்படத்தை தர்மலிங்கம் திறந்துவைத்தார். யாழ் நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் உருவப் படத்திறப்பு விழா இடம்பெற்றது.

தர்மலிங்கம் யாழ்ப்பாணம் கொழும்புத் துறையில் உள்ள கணக்கர் வீதிக்கு அருகில் உள்ள வீட்டில் வசித்து வந்தார். குறிப்பிட்ட வீட்டுக்கு அருகே இராணுவத்தினரின் காவல் அரண் அமைந்திருந்தது.

4.10.97 அன்று இரவு 8.30 மணியளவில் தனது வீட்டில் தர்மலிங்கம் புட்டுச்சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அருகிலுள்ள ஜன்னல் ஊடாக துப்பாக்கியை நீட்டி சுட்டுள்ளனர். சுட்டவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். ■

# 'அநியாயம்' பலியானார்

வடமராட்சியில் உள்ள கரணவாய் பகுதியைச் சேர்ந்தவர் ஒருவர் 5.10.97 அன்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கரணவாய் காவல் அரணுக்கு அருகே இவர் சிறு கடை ஒன்று வைத்திருந்தார்.

தன்னுடன் விரோதமான ஆட்களை ஆண், பெண் என்ற பேதமில்லாமல் புலி என்று முத்திரை குத்தி பிடித்துக் கொடுப்பவர் என்று மக்கள் கூறிவந்தனர். இவரை 'அநியாயம்' என்று பெயர்சூட்டியே மக்கள் அழைத்தனர்.

5.10.97 அன்று இரண்டு இளைஞர்கள் இவரது கடைக்கு சென்றுள்ளனர். 'டொபி' தருமாறு கேட்டனராம். அவர் 'டொபி' எடுத்துக் கொண்டிருந்தபோது இளைஞர்களில் ஒருவர் தன் காற்சட்டை பையில் இருந்த பிஸ்டலை எடுத்து சுட்டியிருக்கிறார். துப்பாக்கிச் சூட்டில் அவர் பலியானார்.

முன்னர் ஒருமுறை புலிகளால் சுடப்பட்டு தப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதும் புலிகளே அவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். ■

# சாராய வேட்டையில் மேலும் பல கசிப்பு நிலையங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலப்படம் செய்த விஷ சாராயத்தைப் பருகியதால் பலர் இறந்த சம்பவங்களைத் தொடர்ந்து சட்ட விரோதமாக கள்ளச் சாராயம் காய்ச்சி வடிப்போரைக் கண்டுபிடிப்பதற்காகப் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் உள்ளூர் மக்களினதும் அதிருப்தி ஆதரவுடன் ஊர் ஊராகத் தேடுதல் வேட்டை நடாத்தப்படுகின்றன. பல உள்ளூர் வடிசாலைகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் நடாத்தப்பட்ட கசிப்பு, மற்றும் வடிசாராயத் தேடியழிப்பு நடவடிக்கையில் 20 ற்கு மேற்பட்ட வடிசாலைகள் பிடிக்கப்பட்டு அங்கிருந்த பெருந்தொகைக் கசிப்பு மற்றும் வடிசாராய உற்பத்திக்குரிய உபகரணங்கள் என்பனவற்றையும் கைப்பற்றிப் பிரதேச செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டிருப்பதாக பிரதேச செயலாளர் திரு.என். ஸ்ரீ சங்கர் தெரிவித்தார். வடிசாராயத்திற்குப் பாவிக்கப்பட்ட பொருட்களில் ஃபோமலின், நுளம்புச் சுருள் தூள், யூரியா உரம் என்பனவும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடிசாராயத் தடுப்பு விடயத்தில் புலிகள் இயக்கத்தினரின் பூரண ஆதரவு இருப்பதால் கசிப்பு மற்றும் வடி சாராயத்தடை விடயத்தில் மேலும் முன்னேற்றம் ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது. ■

# புலிகள் கோரும் உதவி

## படையினர் கூறும் காரணம்

கிழக்கில் தமது ஆளுகைக்குள் இல்லாது படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள நகரப் பகுதி மக்களிடம் புலிகள் இயக்கத்தினர் முடிந்த உதவிகளைக் கோரி வருகின்றனர்.

பொதுமக்கள் தாம் ஈடுபட்டுள்ள தொழிற்துறைகளில் தமக்குள்ள திறமைகளையும், வளங்களையும் தமிழீழப் போராட்டத்திற்காகப் பங்களிப்புச் செய்ய முன்வர வேண்டும் என்று புலிகள் இயக்கத்தினர் சமீப நாட்களாகக் கோரி வருகின்றனர். அவரவர் தமது வளங்களைப் பயன்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உதவ வேண்டும் என்று கேட்டு வருகின்றனர்.

படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ளோர், குறித்த சில விபரங்களைத் திரட்டித்தருமாறு கோரப்பட்டிருக்கிறார்களாம். பெரும்பாலானோர், இக்கோரிக்கைளைத் தாம் செய்ய முற்படும் பொழுது பல எதிர்விளைவுகளையும், நகரப்பகுதியில் தாம் வாழமுடியாத சூழ்நிலையும் எதிர்நோக்க வேண்டிவரும் என்று புலிகள் இயக்கத்தினரிடம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதியில் உள்ள சகல மக்களையும் தமது நடவடிக்கைகளுக்குள் இழுத்து விடுவதே புலிகள் இயக்கத்தினரின் இத்தகைய நோக்கம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இருவருக்கு மரண தண்டனை

## படை வீரருக்குச் சூடு!

வடமராட்சிப் பகுதியில் புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

27.09.97 அன்று மாலை ஆறு மணியளவில் இரு இளைஞர்கள் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுடப்பட்டனர்.

இவர்கள் இருவரும் முன்னர் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள். பின்னர் படையினருக்கு உதவி வந்தனர் என்று கூறியே புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முகிலன், ரமேஷ் என்பது அவர்களது இயக்கப் பெயர்களாகும்.

அதேதினம் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் இராணுவ சிப்பாய் ஒருவரும், இராணுவத்தினருக்கு உதவும் குலரூபன் என்ற இளைஞரும் சுடப்பட்டனர். இருவரும் பலியாகியுள்ளனர். ■



படிப்பகம்

# பஸ் பயணிகளுக்குப் பழுதடைந்த உணவுகள்
## சாரதி, நடத்துநர்களுக்கு மதுவும் பணமும்!

(நமது நிருபர்)

தொலை தூரப் பயணத்திலீடுபடும் பஸ் சாரதிகள் தங்களுக்கு வாடிக்கையான ஹோட்டல் ஒன்றில் பயணிகளை இறக்கி விடுவது தெரிந்ததே. அந்த வகையில் பஸ் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் குறித்த ஹோட்டல்காரர்களினால் இலவச உணவும், சன்மானமாகப் பணமும், மதுப்பிரியர்களான சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் மதுவும் வழங்கப்படுவது அறிந்த விசயம்.

இத்தகைய சலுகைகளைத் .தாம் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்காக பஸ்சாரதிகளும் நடத்துநர்களும் பயணிகளைப் பற்றிக் கவலை கொள்வதே இல்லை. இந்த ஹோட்டல்களில் சுகாதாரக் கேடான முறையில், நீண்ட நாள் பழுதுபட்ட உணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றது என்று பயணிகள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

காத்தான்குடியிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு இந்த அனுபவம் ஏற்பட்டு வருகிறது. காத்தான்குடி பஸ் டிப்போவினால் நடாத்தப்படும் கொழும்பு கடுகதி பஸ் சாரதிகள் பொல்கஹவெலயிலுள்ள, தமக்குச் சலுகை வழங்கும் ஹோட்டல் ஒன்றில் நீண்ட தூரப் பயணத்திலீடுபட்டு களைத்துப்போய் வரும் பயணிகளை போசனத்திற்காக இறக்கி விடுகிறார்கள். அங்கு நீண்ட நாள் பழுதுபட்ட, சுகாதாரச் சீர் கேடான, உடலுக்குத் தீமை பயக்கும் உணவுகள் வழங்கப்படுவதோடு பன்மடங்கு கொள்ளை இலாபத்திலும் விற்கப்பட்டு வருவதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கிறார்கள். பஸ்சாரதிகளினதும், டிப்போ அதிகாரிகளினதும் கரிசனையற்ற இந்த நடத்தையினால் வேறு வழியின்றித் தாம் தொடர்ந்து இத்தகைய நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாகவும் பயணிகள் மேலும் தெரிவிக்கிறார்கள்.

இந்த விடயம் தொடர்பாக டிப்போ அதிகாரிகளின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டுவந்தும் அவர்கள் அசட்டையாக இருப்பதனால் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்வதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

# திருத்தப்பட்ட விமானத்தின் வெள்ளோட்டம்
## ஆசிய நாட்டுக்கு அன்னாசிப் பயணம்

விமானப் படைக்குச் சொந்தமான வை-8 விமானம் அண்மையில்தான் முழுமையான பழுது பார்க்கும் சேவையினை முடித்துக் கொண்டு நாடு திரும்பியது.

உடனடியாக இவ்விமானம் ஓர் ஆசிய நாட்டின் தலைநகருக்கு இரு தடவைகள் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விமானம் பயணிகளோ அல்லது பொதிகளோ கொண்டு செல்லாமல் வெறுமனே செல்வது சரியில்லை என்று கருதப்பட்டதோ என்னவோ, இதில் சில பொருட்களை அதிகாரிகள் ஏற்றி அனுப்பினார்களாம்.

2000 தேங்காய்களும் பெருந்தொகையான அன்னாசிப் பழங்களும்தான் விமானத்தில் ஏற்றப்பட்டுள்ளன. விமானப்படை அதிகாரிகள் இவற்றை அந்த நாட்டுக்கு எதற்காக-யாருக்காகக் கொண்டு செல்கின்றனர் என்று தெரியாமல் விமானப் படையினர் திகைத்தனர். இப்பொழுதுதான் அவர்களுக்கு உண்மை தெரியவந்திருக்கிறது. அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படுவதற்காகத்தான் இவை கொண்டு செல்லப்பட்டனவாம்.

தேங்காய்கள் விமானப்படைக்குச் சொந்தமான வளவிலுள்ள மரங்களில் பிடுங்கப்பட்டன; ஆனால் அன்னாசிப் பழங்கள் 50 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டு சந்தையில் கொள்முதல் செய்யப்பட்டன. இப்பணம் நிச்சயமாக அரசாங்கத்துக்குச் சொந்தமானதல்ல; விமானப்படையைச் சேர்ந்த ஊழியர்கள் அனைவரும் மாதாமாதம்- ஆக்க நலப் பணிகளுக்காகச் செலுத்தும் பணத்திலிருந்து எடுக்கப்பட்டதாம்.

குறிப்பிட்ட நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் மிகக் குறைவானவர்களே பணி புரிகின்றனராம். அவ்வாறிருக்க, இவ்வளவு பெருந்தொகையான தேங்காய்களையும் பழங்களையும் அவர்கள் என்ன செய்யப்போகிறார்களோ தெரியாது!

# காணாமல்போன பெண்

(திருமலை நிருபர்)

மூதூர் கங்குவேலிக் கிராமத்தைச் சேர்ந்த சிவலோகநாயகி பரஞ்சோதி என்ற 38 வயதுடைய கைம் பெண்ணொருத்தி கடந்த ஒரு மாத காலமாகக் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு பிள்ளைகளின் தாயாரான இந்தப் பெண்மணி தனியார் டிஸ்பென்சரி ஒன்றுக்கு மருந்து எடுக்கச் செல்வதாகக் கூறிச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை.

22.08.97 அன்று மூதூர் நகரப்பகுதியில் வைத்து காணாமற்போன இச்சம்பவம் தொடர்பாக அவரது உறவினர்களால் மூதூர் பொலிஸ் நிலையத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை புதிராகவே இருக்கிறது.

# நன்றி மறந்த நகரசபைத் தலைவர்
## ரெலோ இயக்கம் கண்டனம்

திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி ரெலோ- ஈரோஸ் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்றவர். அதற்கு முன்னர் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தில் இருந்தவர். தற்போது ரெலோவில் இருந்து விலகியிருக்கிறார் சூரியமூர்த்தி.

சூரியமூர்த்திக்கும், திருமலை நகரசபை உறுப்பினர்களான ரெலோ, ஈரோஸ் உறுப்பினர்களுக்கும் இடையே பிணக்குகள் தோன்றியுள்ளன.

திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்திக்கு திருமலை நகரசபை ரெலோ உறுப்பினர்கள் கையொப்பமிட்டு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தனர். அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நகரசபைத் தலைவர் அவர்களே,

01.03.94ல் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ரெலோ-ஈரோஸ் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட சுயேட்சைக்குழு 2ற்கு 8,200 வாக்குகள் கிடைத்தன. 7 பிரதிநிதிகளே தெரிவு செய்யப்பட்டனர்.

எமது கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட உறுப்பினர் எஸ். நந்தகுமார்-4664 வாக்குகள், கே. தேவராசா-2918 வாக்குகள், கே. லிங்கராசா-1918 வாக்குகள், எஸ். கமலநாதன் 1596 வாக்குகள், தலைவராகிய நீங்கள் பெற்ற வாக்குகள் 1421 மட்டுமே. வாக்குகள் அடிப்படையில் நகரசபைத் தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் நீங்கள் அல்ல. தலைவராக தமிழீழ விடுதலை இயக்கமே உங்களைத் தெரிவு செய்தது. இது மக்களின் முடிவல்ல; எமது கட்சியின் முடிவே ஆகும். உங்களுக்கு பணமும், உண்ண உணவும், அந்தஸ்தும் தந்தது எமது கட்சியே! இன்று நன்றி மறந்து தான் தோன்றித்தனமாக பேசுவது கவலைக்குரியது. தேர்தலின்போது நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை என்ன? உங்களிடம் இருந்த சொத்துக்கள் என்ன? தற்போது நீங்கள் வாழும் வாழ்க்கை என்ன? உங்களிடம் உள்ள சொத்துக்கள் என்ன? என நாம் கேள்வி எழுப்பினால் உங்களால் பதிலளிக்க முடியாது.

உங்களது தலைமையை நம்பியே மக்கள் வாக்களித்ததாக எங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியுள்ளீர்கள். அதை நினைத்து சிரிப்பதா... அழுவதா என்று எமக்கு தெரியவில்லை.

உங்களது தலைமையை மக்கள் ஏற்று இருந்தால் நீங்கள் 1421 வாக்குகளை மட்டுமே பெறக் காரணம் என்ன? உங்களை அன்று மக்களுக்கு யார் என்று தெரியுமோ என்பதே கேள்விக்குறிதான்!" இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதேச சபைக்கு எதிராகத் தீர்ப்பு!

(காத்தான்குடி நிருபர்)

கடந்த 19.01.1995 அன்று காத்தான்குடி மெத்தைப் பள்ளிவாயிலுக்குச் சொந்தமான பிரதான வீதிக் கடை ஒன்று பிரதேசசபையினரால் உடைத்தெறியப்பட்டது. இது தொடர்பான செய்தியை முரசம் வெளியிட்டது ஞாபகமிருக்கலாம்.

அந்தச் சம்பவத்தை எதிர்த்து ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், மேற்படி பள்ளிவாயில் நம்பிக்கையாளருமான ஏ.எல்.எம் மர்சூக் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். சுமார் இரு ஆண்டுகள் நீடித்த இவ்வழக்கிற்கு கடந்த வாரம் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

பிரதேச சபையினர், மெத்தைப் பள்ளிவாயிலுக்கு 10 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்கவேண்டுமென்பதே நீதிமன்றத்தின் தீர்ப்பு. மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் ஜே.விஸ்வநாதன் இத் தீர்ப்பை வழங்கினார்.

"இப்போது இப்பணத்தைச் செலுத்த சபையிடம் பணமில்லை. அதற்காக வரியிறுப்பாளர் பணத்தில் பெறப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் வாகனங்களை விற்க சபை முற்பட்டால் நான் வரியிறுப்பாளர்களுடன் களத்தில் குதித்து ஆர்ப்பாட்டம் நடாத்துவேன்" என அமைப்பாளர் மர்சூக் முரசுக்குத் தெரிவித்தார். மேற்படி சபை ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரசின் ஆட்சியின் கீழ் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்.
விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:........................
விலாசம்:........................

BRIGHT BOOK CENTRE (PVT)LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL 434770

UNION
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks,
(English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி ராஜீகா ராஜன்**

வேலணை மேற்கைச் சேர்ந்த ராஜன்-நந்தினி தம்பதியினரின் செல்வப்புதல்வி ராஜீகா தனது முதலாவது பிறந்த தினத்தை 04.10.1997 அன்று Canada வில் Scarborough உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, இலங்கையிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, அன்ரிமார், பெரியமாமா, பெரியத்தை, மச்சான்மார், மச்சாள்மார், சுவிஸிலுள்ள மாமா, இலண்டனிலுள்ள சின்னத்தை, மாமா, மச்சான்மார், கனடாவிலுள்ள பெரியம்மா, பெரியப்பா, அன்னா, அக்கா, சித்தப்பா, சித்தி, தங்கை, ஜேர்மனியிலுள்ள அன்ரா, சித்தப்பா, அக்கா, தங்கை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்புஉனும் நீடூழிகாலம் சிறபனை முருகன் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.


## விளம்பரப் பகுதி

விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி

**அரிசி இடித்து உடன் கொடுக்கப்படும்**

நீங்கள் கழுவி, வடிய விட்டு கொண்டுவரும் அரிசியை உடனுக்குடன் இடித்து/இடித்து வறுத்துத் தருவோம். அத்துடன் ஆட்டா, கடலை, குரக்கன், உழுந்து மா, அரிசி மா முதலானவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. K.K.M. உற்பத்திகளும் கிடைக்கப்பெறும்

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

G. R. M. RICE FLOUR
GLOBAL RICE FLOUR MILL
No. 100A, St. Andrew's Road,
Colombo - 15. T.P. : 522759.
(Dockland Petrol Shed க்கு அருகாமையில்)
7.30 a.m. - 4.30 p.m. Daily
விடுமுறை நாட்களில் பகல் 12 மணி வரை

**பயிற்சி வகுப்புக்கள்**

Fabric Painting, தையல், ஐசிங் (Wilton flowers) கற்பிக்கப்படும். Chinese Cookery 12ம் திகதி ஒக்டோபர் ஆரம்பமாகும். தொடர்புகொள்ளவும்.
Zulfikah
Phone: 683005.

**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr. P. ஆறுமுகம் அவர்களை
கல்முனை ஒக்டோபர் 11, 12, 13, 14 ஆகிய தினங்களில்
T.M.M. பாமசியிலும் T.P. 065 - 29329
கொழும்பில் ஒக்டோபர் 19 முதல் 30 வரை
Dr. P. Arumugam, Ahamed Tourist Inn.
Bang Building No. 10, Reclamation Road,
(Entrance: Bankshall Street, Opposite Ranjanas)
COLOMBO - 11., T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078 - 71101
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யலாம்



**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவது ன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதா[illegible] இன் திருவனம் வரையறுக்கப்பட்ட திருவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்கா தேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, மே பீல்ட் ரோட், கொழும்பு–13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-3[illegible]

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பூகோள நிலைக்கு மாறான போர்க்களச் செய்திகள்

வன்னிக் கள நிலவரங்கள் பற்றி சமீப வாரங்களாக வெளியாகும் செய்திகள் பூகோள அமைப்பையே தலைகீழாக மாற்றிக் கொண்டிருக்கின்றன.

புளியங்குளப் பகுதியில் இருந்து முன்னேற முயலும் 'ஜயசிக்குறுய்' படையினருக்கு தோதாக பூகோள வரைபடம் புதிதாக தயாரிக்கப்பட்டுவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

வேறொன்றுமில்லை. புளியங்குளத்தில் சண்டை என்றே செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்தால் கேட்டு கேட்டு காதும் புளிக்கும். சொல்லிச் சொல்லி வாயும் புளிக்கும்.

அதனால் ஒட்டிசுட்டானில் மோதல், கனகராயன் குளத்தில் மோதல், மாங்குளம் நோக்கி முன்னேறும்போது நடந்த மோதல் என்றெல்லாம் பல்வேறுவிதமாக செய்திகள் சொல்லப்படுகின்றன.

உண்மையில் நடப்பது என்ன?

வவுனியா- யாழ் சாலையில் நிலை கொண்டுள்ள 'ஜயசிக்குறுய்' படையினர் அச் சாலை வழியாக நேராகச் சென்று புளியங்குளச் சந்தியை கைப்பற்றும் முயற்சிகள் பயன் அளிக்கவில்லை.

நன்கு அரண் செய்யப்பட்ட பாதுகாப்பு நிலைகளில் இருந்து முன்னேறும் படையினரின் மூக்குப் பகுதியிலும், புளியங்குளத்திற்கு வடமேற்கில் இருந்தும், கிழக்கில் இருந்தும் படையினரின் பக்கவாட்டுப் பகுதிகளை நெருங்கியும் புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இதனால் டாங்கிகள் உட்பட கனரக வாகனங்கள் பலவற்றையும் படையினர் இழந்தனர்.

**டாங்கிகளின் உதவியோடு முன்னேறும் முயற்சிகள், விமானப்படை உதவியுடன் முன்னேறும் பாதையை சுத்தம் செய்யும் முயற்சிகள் என்று சகல வழக்கமான உத்திகளும் புளியங்குள மோதலில் பயனற்றுப்போயின.**

படைபலத்திலும், படைக்கல பலத்திலும் தன் எதிரியைவிட பல மடங்கு அதிகமான மரபுப் படையால் புளியங் குளத்தை கைப்பற்ற முடியாமல் போனது. இன்னும் சில கிலோமீட்டர்கள் தூரம் சென்றால் புளியங்குளச் சந்தியை கைப் பற்றிவிடலாம் என்ற நிலையில் புளியங்குளம் வீழ்ச்சி என்று செய்திகளும் வெளியாகின.

ஆனால் பல கட்டமாக பல மாதங்கள் முயன்றும் அந்தச் சில கிலோமீட்டர் தூரத்தை படையினரால் கடந்து செல்ல முடியவில்லை.

மூன்று அல்லது நான்கு கிலோமீட்டர் தூரத்தை கடந்துவிட்டால் புளியங்குளம் முழுக்க படையினரின் கையில் வந்துவிடும்.

கிட்டத்தட்ட மூன்று மாதம் புளியங்குள மோதலில் ஈடுபட்டனர் 'ஜயசிக்குறுய்' படையினர்.

அடிமேல் அடி அடித்தும் அங்குலம் அங்குலமாகக்கூட நகரமுடியாத நிலையில், 'ஜயசிக்குறுய்' படையினர் புளியங்குளம் சந்தி நோக்கி நேராகச் செல்லும் முயற்சியைக் கைவிட்டுள்ளனர்.

**புளியங்குளப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையணி தற்போது புளியங்குளத்துக்கு வடமேற்காக நகர்ந்து புதூர் நோக்கிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. புளியங்குளத்துக்கு வடமேற்காக எட்டுக் கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது புதூர். வவுனியா-யாழ் சாலையின் மேற்குப் புறமாக இருக்கிறது.**

புதூர் நோக்கிய பாதையில் சில கிலோமீட்டர்கள் வரைதான் படையணிகள் முன்னேற முடிந்தது. புதூரை நோக்கிச் செல்வதே சிரமமான காரியமாக இருக்கிறது.

புளியங்குளத்தில் இருந்து நேராகச் சென்றால் 11 கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதுதான் கனகராயன்குளம். அங்கிருந்து மேலும் 10 கிலோமீட்டர் தூரத்தை கடந்தால்தான் மாங்குளம் வரும்.

புளியங்குளம் ஊடாகச் செல்லாமல் புதூர் வழியூடாக கனகராயன் குளத்தை சென்றடைய வேண்டுமானால் 15 கிலோமீட்டர் தூரத்தை கடந்தால்தான் கனகராயன் குளம் வரும்.

புதூர் நோக்கிய பாதையில் சில கிலோமீட்டர்கள் படையினர் முன்னேறியிருப்பதால் மேலும் குறைந்தது பத்து கிலேமீட்டர்களாவது கடந்தால்தான் கனகராயன் குளத்தை சென்றடைய முடியும்.

ஆனால் நீண்ட சாலையில் செல்வதற்கும் குறுக்குப் பாதையால் செல்வதற்கும் இடையே பாரிய வித்தியாசம் இருக்கிறது.

குறுக்குப் பாதைகளில் வயல்கள், காடு சார்ந்த பகுதிகள், சாதகமற்ற தரையமைப்பு என்பவை குறுக்கிடும்போது மேலும் மேலும் சுற்றிச் சுழன்று செல்லும்போது மேலும் சில கிலோமீட்டர்கள் தூரம் அதிகமாகும்.

எனவே புளியங்குளத்தில் இருந்து கனகராயன்குளத்துக்கு செல்வதைவிட, சுற்றுப் பாதையால் புதூர் தாண்டி கனகராயன் குளத்துக்கு செல்லுவது கடினமான காரியம்.

மறுபுறத்தில் நெடுங்கேணியில் இருந்தும் கனகராயன் குளத்துக்கு செல்லலாம்.

புளியங்குளத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடைப்பட்ட சாலையை ஒன்றிணைக்கும் படையினரின் முயற்சியும் பயனளிக்க வில்லை.

ஏனெனில் புளியங்குளம் சந்திக்கு படையினர் சென்றால்தான், அங்கிருந்து நெடுங்கேணியுடன் இணைப்பை ஏற்படுத்தும் நகர்வை மேற்கொள்ளலாம். அல்லது நெடுங்கேணியில் உள்ள படையினர் புளியங்குளம் சந்தி நோக்கி அந்தச் சாலை வழியாக முன்னேற வேண்டும்.

இரண்டுமே புலிகளின் எதிர்ப்பால் சாத்தியப்படவில்லை. அதனால் நெடுங்கேணியில் உள்ள படையினர் ஒரு காரியம் செய்தனர்.

நெடுங்கேணியை அண்மித்துள்ள சிங்களக் கிராமங்கள் ஊடாக நகர்ந்து நெடுங்கேணிக்கு முன்பாக உள்ள மதியாமடுவில் இருந்து நயினாமடு என்ற பகுதி நோக்கி முன்னேறினர்.

நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் 20 கிலோமீட்டர். நெடுங்கேணியில் இருந்து நயினாமடு 8 கிலோமீட்டர்.

**நெடுங்கேணியில் இருந்து சாலைவழியாக முன்னேறாமல் உள் வழியாக முன்னேறி மதியாமடுவை சென்றடைந்தனர். அங்கிருந்து நயினா மடுவுக்கு சென்று நிலைகொண்டால், அங்கிருந்து கனகராயன் குளத்துக்கு செல்ல குறுக்குப் பாதை இருக்கிறது. கிட்டத்தட்ட பத்துக் கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டும்.**

ஆனால் அது அத்தனை சுலபமல்ல. புலிகளின் பிரதான தளப்பிரதேசமான முல்லைத்தீவை ஒட்டியதாக அந்த குறுக்குப் பாதை செல்வதால், புலிகளின் தாக்குதல் உக்கிரமாக இருக்கும்.

அது தவிர அங்குள்ள தரையமைப்பு சமாந்தரம் இல்லாதது. மலைப்பகுதி போன்று ஏற்ற இறக்கம் கொண்டது. கெரில்லாக்கள் சுலபமாக நிலை எடுத்து தாக்க வசதியானது.

ஆனால் படையினரது உடனடி நோக்கம் கனகராயன் குளத்தை கைப்பற்றுவது அல்ல.

புளியங்குளச் சந்தியில் ஆரம்பித்து புலிகளின் பாரிய அரண்களும், பதுங்கு நிலைகளும் உள்ளன. சாலை வழியாக முன்னேறும் படைகளை பக்கவாட்டில் நெருங்கித் தாக்கும் காடு சார்ந்த பூகோள நிலையும் இருக்கிறது.

எனவே புளியங்குளத்துக்கு நேராகச் செல்லாமல் புதூர் பகுதி ஊடாக 55வது படையணியும், நெடுங்கேணி நயினாமடு ஊடாக 53வது படையணியும் சுற்றி வந்தால் புளியங்குளம் சந்தியில் உள்ள புலிகளின் நிலைகள் முற்றுகைக்கு உள்ளாகும்.

புலிகளின் அணிகள் முற்றுகைக்கு உள்ளாகாமல் பின்வாங்கிச் செல்லத் தொடங்க, வவுனியா.யாழ் சாலையில் முன்னேறி புளியங்குளச் சந்தியை கைப்பற்றி விடலாம். நெடுங்கேணியுடனும் இணைப்பை ஏற்படுத்தி விடலாம் என்று பார்க்கிறார்கள்.

அதாவது புளியங்குளத்தை கைப்பற்ற சக்கர வியூகம் ஒன்றை வகுக்க நினைக்கிறார்கள்.

வன்னியில் மழை மெல்ல மெல்ல பெய்யத் தொடங்கிவிட்டது. அடைமழை ஆரம்பிக்க முன்பாக 'ஜயசிக்குறுய்' படைகளை புலிகள் ஊடறுத்துத் தாக்கக்கூடிய வழிகளை தடை செய்ய வேண்டிய தேவையும் படையினருக்கு இருக்கிறது.

எனவே புலிகள் ஜயசிக்குறுய் படையினரின் இதயப் பகுதியில் ஊடறுக்காமல் தடுப்பதற்காக புளியங்குளத்தின் வடமேற்கு புறமாகவும், மறுபுறம் நெடுங்கேணியில் உள்ள படைநகர்வு மூலம் கிழக்குப் புறமாகவும் பாதுகாப்பு அரண்களை நிறுவ முயல்கிறார்கள்.

பருவமழை தொடங்க முன்பாக கீழ் வரும் இரண்டில் ஒன்றை செய்தாக வேண்டிய நிலையில் உள்ளனர் படையினர்.

**1. புளியங்குளத்தை கைப்பற்றி நெடுங்கேணியுடன் இணைப்பை ஏற்படுத்துவது.**

**2. அதனைச் செய்ய முடியாவிட்டால், புலிகளின் ஊடறுப்புத் தாக்குதலை தடுக்கும் வகையில் பாதுகாப்பு அரண்களை விரிவாக்கி பலப்படுத்திக்கொள்வது.**

படையினர் தமது அரண்களை பலப்படுத்தி பூரண தற்காப்பு நிலைக்கு உள்ளாக வேண்டிய கட்டத்தில்தான் இருக்கின்றனர். கனகராயன்குளத்தை கைப்பற்றுவதோ, மாங்குளத்தை கைப்பற்றுவதோ தற்போதைய நிலையில் நடக்கக்கூடிய காரியமல்ல.

தவிர்க்க முடியாமல் பாரிய படை முடக்கம் ஒன்று வன்னி யுத்தத்தில் ஏற்பட்டுள்ளது. தற்போதைய இரு புற நகர்வுக்காக நெடுங்கேணியிலும், புதூர் பகுதியிலும் மேலும் துருப்புக்கள் குவிக்கப்படவேண்டி இருந்தது.




அவ்வாறு புதிதாக குவிக்கப்பட்ட **படையினர் தற்போது நிலைகொண்டுள்ள படையினரின் அரண்களை மேலும் பலப்படுத்த போதுமானவர்களாக இருப்பர். தொடர்ந்து முன்னேறி மாங்குளம் வரை சுற்றுப் பாதையால் 25 கிலோ மீட்டர் தூரத்தை கடக்கவும், அத்தனை தூரத்துக்கு நிலைகொள்ளவும் போதுமானவர்களல்ல.**

கனகராயன்குளமும், மாங்குளமும் படையினரின் எட்டாத தூரத்தில் இருக்கிறது.

புளியங்குளத்துக்கு அருகில் நடைபெறும் மோதல்களையே கனகராயன் குளத்தில் மோதல் என்று கூறுகிறார்கள்.

இதற்கிடையே கனகராயன் ஆற்றுப் பகுதியில் நடக்கும் மோதல்களும் கனகராயன் குளத்தில் நடக்கும் மோதல்களாகி விடுகிறதோ தெரியவில்லை.

**கனகராயன் குளமும், கனகராயன் ஆறும் ஒன்றல்ல. கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து புறப்படும் ஒரு ஆற்றுக் கிளையானது, வவுனியா, யாழ் சாலைக்கு சமாந்தரமாக கிழக்குப் புறத்தில் ஓடுகிறது. அந்த ஆறு ஓமந்தைக்கு சமீபமாகவுள்ள இளமருதங் குளத்தில் சேருகிறது.**

**30.09.97 அன்று கனகராயன் குளத்தில் பலத்த மோதல் என்று செய்திகள் சில கூறின. ஆனால் அன்று மோதல் நடந்தது கனகராயன் ஆற்றுப் பகுதியில்தான்.**

கனகராயன் ஆறு புளியங்குளம் நெடுங்கேணிச் சாலையில் நயினாமடுவுக்கு அருகே ஊடறுத்து ஓமந்தை நோக்கிச் செல்கிறது.

நயினாமடுவை அண்மித்துள்ள படையினர் அந்த ஆற்றை கடந்து புளியங்குளம் பகுதியில் உள்ள படையினருடன் இணைய முயன்றனர்.

அந்த முயற்சியை தடுக்க ஆற்றின் மறு பக்கம் இருந்து புலிகளின் அணிகள் தாக்குதல் நடத்தின.

ஆற்றைக் கடக்க முற்பட்ட படையினரை நோக்கி புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியதுடன், புலிகளின் சிறப்புப் படையணிகளும் பதுங்கு நிலை எடுத்துவந்து தாக்குதல் தொடுத்தன.

கிட்டத்தட்ட நான்கு மணிநேரம் கடும் சண்டை இடம்பெற்றது. புலிகள் தரப்பில் 11 பேர் பலியானார்கள். படையினர் தரப்பில் 48 பேர் பலியாகினர். 20 பேர்வரை காணாமல் போனதாக கூறப்படுகிறது. 308 பேர் காயமடைந்தனர். இதில் 100 பேர்வரை படு காயங்களுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் இருந்தனர்.

படையினரின் 16 சடலங்களையும், மோட்டார்க் குண்டுகள், எல்.எம்.ஜி.கள் உட்பட ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றிச் சென்றன.

**புலிகளின் 14 சடலங்களை தாம் கைப்பற்றியதாக படையினர் கூறியபோதும், பின்னர் அதுபற்றி எத் தகவலும் இல்லை. புலிகள் படையினரின் 16 சடலங்களை ஒப்படைத்தனர்.**

கனகராயன் ஆற்றைக் கடக்கும் முயற்சியை படையினர் கைவிட்டனர். ஓமந்தைக்கு சமீபமாகவே இச் சண்டை இடம்பெற்றது. ஆற்றைக் கடக்க முற்பட்ட படையினரை தாக்கிய புலிகள் ஓமந்தை படை அரண்களை நோக்கியும் தாக்கினார்கள்.

இந்த சண்டை கனகராயன் ஆற்றுப் பகுதியில் நடந்தது. அங்கிருந்து கனகராயன் குளம் குறைந்தது பதின்மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

கனகராயன் குளம் என்பதால் அங்கு பெரியகுளம் இருப்பதாக அர்த்தம் அல்ல. முன்னர் ஒரு காலத்தில் அங்கு குளம் இருந்தது. தற்போது தூர்ந்து போய் விட்டது. அதற்கும் கனகராயன் ஆற்றுக்கும் சம்பந்தமில்லை. கனகராயன் என்ற பெயர் மட்டும்தான் ஒன்றாக இருக்கிறது.

இதேவேளை 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் 05.10.97 அன்று ஒரு வரைபடம் வெளியாகி இருந்தது. படை வட்டாரச் செய்திகளை வைத்து கட்டுரையாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிடும் போது, நயினாமடுவில் இருந்து கனகராயன் குளம் நோக்கி படைகள் முன்னேறியது போல காட்டியிருந்தார்.

அது தவறான தகவல் என்பதை 05.10.97 அன்று நடைபெற்ற சண்டை உறுதிப் படுத்திவிட்டது.

நயினாமடுப் பகுதியில் இருந்து முன்னேற முற்பட்ட ஜயசிக்குறுய் படையினர் மீதுதான் 05.10.97 அன்று புலிகளின் அணிகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இச் சண்டை பற்றியும் வன்னிப் பூகோள அமைப்புக்கு மாறான செய்திகள் வெளியாகின.

**ஒட்டிசுட்டான் பகுதியில் மோதல் என்றும், மாங்குளம் நோக்கி முன்னேற முயன்றபோது மோதல் என்றும், மாங்குளத்துக்கும் ஒட்டிசுட்டானுக்கும் இடையில் மோதல் என்றும் செய்திகள் முன்னுக்குப் பின் முரணாக சொல்லப்பட்டன.**

முன்னர் நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற சண்டைகளும் ஒட்டிசுட்டான் பகுதியில் மோதல் என்று வெளியாகின.

நெடுங்கேணியில் இருந்து ஒட்டிசுட்டான் குறைந்தது 11 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. புலிகளின் பிரதான தளமான முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கிறது ஒட்டிசுட்டான்.

ஒட்டிசுட்டானை நோக்கி முன்னேறுவது புலிகளின் பொறிக்குள் தாமாகச் சென்று காலை வைப்பது போன்றதே. அவ்வாறான முயற்சியில் படையினர் ஈடுபடவில்லை.

நயினாமடுவில் இருந்து ஒட்டிசுட்டான் குறைந்தது 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதனைவிட நெடுங்கேணியில் இருந்து முன்னேறுவது சுலபம்.

ஒட்டிசுட்டானுக்கு சென்று மாங்குளத்துக்கு வருவதும் சாத்தியமில்லாத போர்த் தந்திரம். ஏனெனில் ஒட்டிசுட்டானில் இருந்து மாங்குளத்துக்கு குறுக்காகச் செல்வதானால் குறைந்தது 30 கிலோமீட்டர் தூரத்தை கடந்தாக வேண்டும்.

அதைவிட நயினாமடுவில் இருந்து கனகராயன்குளம் வழியாக மாங்குளம் சென்று விடலாம்.

ஆக, சுற்றி சுற்றி புளியங்குளத்தை அண்டிய பகுதிகளிலும், நெடுங்கேணி, நயினா மடுவை அண்டிய பகுதிகளிலும்தான் சண்டைகள் நடந்து வருகின்றன.

தற்போது நெடுங்கேணி, நயினா மடுவில் உள்ள படையினர் தற்காப்புக்கான தாக்குதல் ஒன்றையே நடத்திக் கொண்டிருக்கின்றனர். புலிகளின் அணிகளை புளியங்குளம் அண்டிய பகுதிகளில் இருந்து பின்வாங்கச் செய்யும் அழுத்தம் கொடுக்கும் தாக்குதல்களாகவே அவை அமைந்துள்ளன.

இதன் நோக்கம் புளியங்குளம்-நெடுங்கேணி இடையே படை இணைப்பை ஏற்படுத்தி பருவ மழை காலத்தின் முன்னர் பாரிய தற்காப்பு அரண்களை அமைப்பது தான்.

ஆனால் படையினரின் நோக்கத்தை ஊகித்துக் கொண்டு புலிகள் பலத்த தாக்குதல்களை தொடுத்து வருகின்றனர். படையினரின் பாதுகாப்பு வியூகங்களை பலவீனமாக வைத்திருந்து, பருவ மழைக் காலத்தில் பாரிய ஊடறுப்புத் தாக்குதல்களை நடத்துவதே புலிகளின் திட்டம்.

**இதுவரை படையினர் வவுனியா மாவட்டத்துக்குள் தான் நிற்கின்றனர். ஆனால் மோதல் நடப்பதாக செய்திகளில் கூறும் இடங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்குள் உள்ளன என்பதுதான் வேடிக்கை.**

05.10.97 அன்று நயினாமடுப் பகுதியில் தங்கள் பாதுகாப்பு அரண்களை விரிவாக்க முற்பட்ட படையினர்மீதே புலிகளின் தாக்குதல் நடத்தப்பட்டது. 40ற்கு மேற்பட்ட படையினர் பலியாகினர். நூற்றுக்கு மேற்பட்ட படையினர் காயமடைந்தனர்.

மோட்டார் தாக்குதல்களால் தமது தரப்பில் பாரிய இழப்பு ஏற்பட்டதாக படையினர் கூறுகின்றனர். அதேசமயம் புலிகள் தரப்பில் 150 பேர் மாண்டனர் என்றும் படைத்தரப்பினர் கூறுகின்றனர். மோட்டார் தாக்குதலில் மட்டும் புலிகள் ஈடுபட்டால் அவர்கள் தரப்பில் அதிக இழப்புக்கள் ஏற்பட சாத்தியமில்லை. எங்காவது மறைந்திருந்து மோட்டாரை ஏவும் புலிகளின் இழப்பு படையினருக்கு தெரிய வரவும் வாய்ப்பில்லை.

மோட்டார்களை புலிகள் ஏவினாலும் கூட கனரக வானங்கள் சகிதம் முன்னேறும் படையினரையோ, பாதுகாப்பு அரண்களுக்குள் உள்ள படையினரையோ தாக்குவதற்கு நெருங்கி வந்துதான் சண்டையில் ஈடுபடவேண்டும்.

மோட்டார் ஷெல் வந்து விழுந்து வெடிக்கத் தொடங்கியதும் படையினர் பாதுகாப்பான நிலை எடுத்து விடுவர். ஷெல் வருகிறது என்று தெரிந்த பின்னும் அணி நடையாக குவிந்து சென்று கொண்டிருக்க மாட்டார்கள்.

**ஷெல்களில் இருந்து தப்ப பாதுகாப்பான அரண்களை நாடுவதால் தொடர்ந்து முன்னேறுவது பாதிக்கப்படுமே தவிர, பாரிய இழப்பு ஏற்படாது. புலிகளின் அணிகள் நெருங்கிவந்து தாக்குவது மூலமே கடும் சண்டை மூள்கிறது. இரு தரப்பிலும் இழப்புக்கள் ஏற்படுகின்றன.**

புலிகள் பல திசைகளில் இருந்து திடீர் திடீர் என்று முன்னேறி தாக்குவதால் படையினர் தரப்பு இழப்பு புலிகளைவிட அதிகமாக உள்ளது.

படையினர் நிலை கொண்டுள்ள பிரதான பகுதிக்குள் புலிகள் ஊடறுக்கும்போது

**நாரதர்**

படையினரின் பொறிக்குள் அவர்கள் மாட்டிக் கொண்டால் மட்டுமே புலிகளின் தரப்புக்கு இழப்பு அதிகம் ஏற்படும்.

அதற்கு மாறாக படையினர் முன்னேறும் முயற்சியில் ஈடுபடும்போதோ, அல்லது படையினரின் முன்னரங்க நிலைகளை புலிகள் தாக்கும்போதோ புலிகளுக்கு அதிக இழப்புக்கள் ஏற்பட மாட்டாது.

ஏனெனில் தமக்கு வசதியான முறையைத் தீர்மானித்து, தமது தரப்பு இழப்பு அதிகமில்லாமல் பார்த்துக் கொண்டுதான் புலிகள் சண்டையைத் தொடங்குவர்.

ஆனால் படையினரோ கண்ணுக்கு தெரியாத எதிரியின் நிலைகளை நோக்கி நகருகிறார்கள். இது கண்ணைக் கட்டிக் கொண்டு காட்டில் அலைவது போன்றதே. படைத்தரப்பின் சண்டையிடும் ஆற்றல், ஆயுத பலம் என்பவற்றைவிட சண்டை நடைபெறும் கள நிலவரம் கெரில்லாக்களுக்கே மிக சாதகமாக இருப்பதுதான் பிரதான அம்சம்.

வன்னி தங்கள் பிரதான தளம், தங்கள் மண் என்ற உணர்வால் புலிகளின் அணிகள் உந்தப்படுவதில் உள்ள இயல்பான உக்கிரமும் படையினருக்கு மிகப் பாதகமான அம்சமாக மாறியிருக்கிறது. ■

## அதிரடி அய்யாத்துரை



**அதிகாரத் தரப்பின்** 'சக்தி'யையும், எதிரணித் தலைவரையும் கூட்டான கட்சியினர் சந்தித்தவையாம். 'கிழக்கின் சிங்கத்தாரையும் கூட்டிக்கொண்டு போனால்தான் அவரையும் நனைய வைத்தமாதிரி இருக்கும்; சந்திப்புக்களுக்கு வராமல் ரெண்டு எழுத்தாரிடம் நல்ல பெயர் எடுக்கிறார். இந்த முறை ஆளையும் கொண்டு போகவேணும்' எண்டு திட்டம் போட்டவையாம். சிங்கத்தார் தழுவத்தான் பார்த்தாராம். 'ரெண்டு எழுத்தாருடன் பேசமாறும் கேட்போம். அதை அறிக்கையாகவும் விடுவோம்' எண்டு உறுதியளித்து விடாப்பிடியாக அவரைக் கூட்டிப் போனவையாம். அங்கு போன இடங்களில் ரெண்டு எழுத்தாரை சாடியிருக்கினம். அவைக்கு தகவல் தெரிஞ்சா தன் கதி என்னாகும்? எண்டு கலங்கிப்போயிருக்கிறார் சிங்கத்தார்.

**சகல முடிவுகளையும்** நீலமானவரும், சம்பந்தமானவரும் சொல்ல, சிவத்தார் தலையாட்டுகிறாராம். தேனகப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைக் கேட்பது இல்லையாம். சிங்கத்தார் முரண்டு பிடித்ததால்தான் அரசியல் குழுவைக் கூட்ட முடிவு செய்யப்பட்டதாம். தேனகக் கிளையை அதிகாரத் தரப்பாரின் யோசனைகளை கண்டித்து அறிக்கைவிட வைத்தவர் சிங்கத்தார்தான். நேரடியாக தன் வாயை உடனே திறந்தால் அதிகாரத் தரப்பாரின் அதிருப்தியைச் சம்பாதிக்க வேண்டிவரும். ஏதும் பேசாமல் இருந்தால் ரெண்டு எழுத்தாரின் கோபத்தை சம்பாதிக்க வேண்டிவரும் என்ற நிலையில் மனுசன் இருதலைக் கொள்ளி எறும்பாக தவிச்சப் போனாராம். ரெண்டு எழுத்தாரின் நெற்றிக் கண் மட்டும் இல்லையெண்டால் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானாக்கும்! அப்படி இல்லையெண்டால் உடனே சிங்கத்தார் தனது கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியிருக்க வேணுமல்லோ. அதுதானே முறை!

**குற்றம் சாட்டவோ,** குறை கூறவோ நான் இதைச் சொல்லவில்லை. அரசாங்கத்தின் புதிய யோசனையைப் பற்றிக் குறிப்பிடும்போது வடக்கு-கிழக்கு இணைப்புக்கான கருத்துக் கணிப்பு, வடக்குடன் கிழக்கை இணைப்பதற்கான கருத்துக் கணிப்பு என்டெல்லாம் நாங்களே பேசறது சரியில்லை. வடக்கு-கிழக்கு எப்போது பிரிந்திருந்தது, இப்போது இணைப்பதற்கு? பிரிப்புக்கான கருத்துக் கணிப்பு என்பதுதானே சரி. அதை நேரடியாகக் குறிப்பிட ஏதாவது சங்கடங்கள் இருந்தால், வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருப்பதா இல்லையா? என்பதற்கான கருத்துக் கணிப்பு எண்டு அதனைக் குறிப்பிடலாம். இணைப்புக்கான கருத்துக்கணிப்பு எண்டு குறிப்பிடுவது மூலம் உள்நோக்கங்கள் மறைய உதவலாமோ? 'தாயகக் கோட்பாட்டை தமிழ்க் கட்சிகள் கைவிடக்கூடாது' என்று கோரும் விமர்சகர்கள் சிலரே 'இணைப்புக்கான கருத்துக் கணிப்பு' எண்டு கூறி பிரிந்திருப்பதுபோலக் காட்டலாமோ? விழிப்பாய் இருக்க வேண்டுமல்லோ!

**ஜனநாயகக் கட்சியினரும்,** முன்னாள் மாகாணசபைக் கட்சியினரும் தான் திட்டவட்டமாக புது ஐடியாவை நிராகரிச்ச உடனே அபிப்பிராயம் சொன்னவை. ஜனநாயகக் கட்சித் தலைவர் உடனடியாக அறிக்கையும் விட்டுப்போட்டார். நீதிக்கு பொறுப்பானவருடன் நடந்த சந்திப்பில் ஜனநாயகக் கட்சியும், கழகமும், மலையக தனித்துவ கட்சியும் கலந்து கொண்டதாம். "இரண்டே இரண்டு தமிழ்க் கட்சிகள்தானே எதிர்ப்புத் தெரிவித்திருக்கினம்?" எண்டு புன்னகையுடன் கூறினாராம் நீதிக்கு பொறுப்பானவர். ஐடியாவைச் சொல்லிப்போட்டு நாடி பிடிச்சுப் பார்த்திருக்கினம் போல கிடக்கு!

**அதிகாரத்தரப்பாரின் ஏகமனதான** முடிவு எண்டு புது ஐடியா பற்றி சொல்லப்பட்டதல்லோ? கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் அடியும் தெரியாமல், நுனியும் தெரியாமல் முடியைப் பிய்க்கினமாம். மலையகத் தனித்துவத் தலைவரும் மாறுபட்ட அபிப்பிராயம் சொன்னவராம். தனக்கும், கிழக்கின் தனித்துவக் கட்சித் தலைவருக்கும் இடையிலான முன்னைய உடன்பாடு பற்றி மலைத்தலைவர் பிரஸ்தாபித்தாராம். உடனே கிழக்கின் தனித்துவ தலைவர் "அதை ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏற்காமையால் நான் கைவிட்டுப்போட்டேன்." எண்டு தடாலடியாகச் சொல்லி நழுவ, மலைத் 'தொண்டர்' மௌனமானாராம்.

**தமிழ்க் கட்சிகளின்** அப்பிராயம் என்னவென்று அறிவதில் பச்சைக் கட்சித் தலைவர் சிரத்தை காட்டினாராம். 'இப்படித் துண்டுபோட நாங்கள் நினைக்கவில்லையே!" எண்டு கூறினாராம். என்ன நினைச்சவை எண்டதை உரிய நேரத்தில் சொல்லித் தொலைச்சிருக்கலாமல்லோ?

**ரெண்டு எழுத்தார்** ஏகப் பிரதிநிதிகளாக இருக்க விரும்பினால் தாங்கள் வழியைவிட்டு விலகிப்போடுவினமாம். கூட்டான கட்சித் தலைவர் வாய் தவறி ஒரு பேட்டியில் உளறிப்போட்டார். அப்ப என்ன அர்த்தம்? இப்ப நந்தி மாதிரி தாங்கள் குறுக்கே நிற்பதை ஒத்துக்கொள்ளுறார் பார்த்தியளோ!

**பொதியை நம்பிய** தமிழ்க் கட்சிகளுக்கு இந்தக் கவிதை அர்ப்பணம்:

"அமுத சுரபிக்காக
அழுவதில்
பயனில்லை மனிதா!

தற்சமயம்
திருவோடுகள்கூட
திருட்டுப் போகின்றன." ■



படிப்பகம்

www.padippakam.com



வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினரும் அமிர்தலிங்கம் பாராளுமன்றம் செல்வதைத் தடுக்க ஒற்றைக்காலில் நின்றனர்.

தான் முதுகில் குத்தப்பட்டுவிட்டதை நினைத்து வருந்திய அமிர்தலிங்கம் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்லும் யோசனையை கைவிட்டிருந்தார்.

இந்த விடயம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எட்டியது. அமிர்தலிங்கம் பாராளுமன்றம் செல்வதற்கு தடைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளுமாறு இந்தியத்தூதரகத்துக்கு உத்தரவு பறந்துவந்தது.

ராஜீவ் விருப்பத்தை வரதராஜப் பெருமாளிடம் தெரிவித்தனர் இந்திய அதிகாரிகள் வேறு வழியின்றி எதிர்ப்பை கைவிட்டது ஈ.பி.ஆர்.எல்.எப்.

பாராளுமன்ற உறுப்பினராக தேசியப் பட்டியல் மூலம் சென்றார் திரு.அமிர்தலிங்கம். தீவிரவாத இயக்கங்களை இந்தியா ஆதரித்தமை ஒரு தவிர்க்க



பினராக இருந்தவர் வை.கோபாலசாமி. சுருக்கமாக வை.கோ என்று அழைக்கப்பட்டிருந்தார்.

1989ல் இந்தியாவிலும், இலங்கையிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் வை.கோ.

வை.கோ எங்கே?

வை.கோ எங்கிருக்கிறார்?

என்று இந்தியப் பத்திரிகைகள் கேள்விக் குறியோடு செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருந்தன.

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றிபெற்றிருந்த நேரம் அது.

இதற்கு முன்னர் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி புதுடில்லியில்

கண்டுபிடித்த நிருபர்கள்தான் வை.கோ. எங்கே என்ற கேள்வியை எழுப்பியிருந்தனர்.

### கைவிரித்தார் கலைஞர்

இக் கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தபோது வை.கோ.வன்னியில் பிரபாகரனுடன் தங்கியிருந்தார். புலிகளின் படகு மூலம் வன்னிக்குச் சென்றார் வை.கோ.

வன்னிக்குப் புறப்பட முன்னர் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு தனது பயணம் தொடர்பாக உருக்கமான கடிதம் ஒன்றை எழுதிக்கொடுத்துவிட்டுத்தான் புறப்பட்டார்.

புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியை கருணாநிதி சந்தித்துக்கொண்டிருந்தபோது, வை.கோபாலசாமி வன்னியில் பிரபாகரனை சந்தித்துக் கொண்டிருந்தார்.

புதுடில்லியில் இருந்து சென்னை திரும்பிய தமிழக முதல்வரை பத்திரிகைகள் எழுப்பிய கேள்விகள் திக்குமுக்காடச் செய்து விட்டன.

அதற்கு முன்னர் நெடுமாறன் போன்

சவாலாக இருந்தார். கருணாநிதி தன் மருமகனை ஒரு புறமும், வை.கோ.வை மறுபுறமும் வைத்துக்கொடுத்து வந்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை தமிழக மக்களிடமும் உணர்ச்சிகரமான தாக்கங்களை ஏற்படுத்தி வந்தது. இலங்கைத் தமிழர்களுக்காக முன்னின்று குரல் கொடுப்பது யார் என்று கட்சிகளுக்கிடையே போட்டி இருந்தது.

எனவே வை.கோ.போன்ற ஒருவர் தன்னுடன் இருப்பது அவசியம் என்றே கலைஞர் கருணாநிதி கருதினார். வை.கோ.வின் இரகசியப் பயணத்தால் தமிழக மக்களிடம் ஏற்படக்கூடிய ஆதரவையும் கலைஞர் கருணாநிதி இழக்க விரும்பவில்லை.

வை.கோ.வின் பயணத்துடன் தி.மு.க.வை சம்பந்தப்படுத்தினால் தி.மு.க. ஆட்சிக்கே ஆபத்தாகவும் முடியலாம் என்பதால் வை.கோ.வின் பயணம் தமக்கு தெரிந்து நடந்ததாக கூறுவதும் விவேகமல்ல என்று கருதினார்.

எனவே, தி.மு.க.வின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'முரசொலி'யில் தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் பெயரில் ஒரு அறிக்கை வெளியானது.

"வை.கோபாலசாமி தனது சொந்தப்

பிரபாகரன். இந்தியப் படையினரை எதிர்த்து போரிட்டுக்கொண்டு, சற்றும் கலங்காமல் இருந்த புலிகளின் அண்ணனைப் பார்த்து வியந்து நின்றார் வை.கோபாலசாமி.

கலைஞர் கருணாநிதியிடம் பிரபாகரன் தெரிவிக்கும் செய்தி என்ன, தமிழக அரசிடம் பிரபாகரன் எதிர்பார்க்கும் உதவி என்ன என்பவற்றை கேட்டறிந்தார் வை.கோ.

"இந்தியப் படை வெளியேற வேண்டும்.

வடக்கு-கிழக்கை பிரிக்க முடியாது. ஒப்பந்தத்தின்படி தமிழர் தாயகத்தை கூறு போடும் சதியை அனுமதிக்கமாட்டோம்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட நாம் தயாராக உள்ளோம். அதற்கு முன்னர் தற்போதுள்ள மாகாண சபை கலைக்கப்பட வேண்டும்" போன்ற விடயங்களை கலைஞர் கருணாநிதியிடம் தெரிவிக்குமாறு வை.கோ.விடம் கூறினார் பிரபாகரன்.

"சிங்கள அரசாங்கங்கள் ஒரு போதும் தமிழ் மக்களின் உரிமைகளை தாமாக முன் வந்து தரப்போவதில்லை. தமிழீழம் அமைவது தவிர்க்க முடியாதது. அதற்கான உத்திகள் மாறலாமே தவிர, இலட்சியம் மாறாது" என்பதையும் வை.கோ.விடம் அழுத்தம் திருத்தமாக கூறினார் பிரபாகரன்.

# வை.கோ.வின் இரகசியப் பயணம்

முடியாத நிர்ப்பந்தமாக அமைந்திதேதவிர மிதவாதிகள்மீதே அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஏனெனில் தாங்கள் சொல்வதை மறுக்காமல் ஏற்கக்கூடியவர்கள் மிதவாதிகள்தான் என்று அவர்கள் தெரிந்துவைத்திருந்தனர்.

கூட்டணியினரும் வெளிப்படையாக பேசும்போது இயக்கங்களின் தியாகங்களை தாங்கள் மறுக்கவில்லை என்று கூறுவர். இயக்கங்களுடன் நேரடியாக முரண்பட்டால் தங்கள் உயிருக்கு உலை வைத்துவிடுவார்கள் என்ற அச்சமும் அதற்கு ஒரு காரணமாகும்.

ஆனால் தனியான சந்திப்புக்களின் போது இயக்கங்களுக்கு ஆயுதம் தூக்க மட்டுமே தெரியும். அரசியல் பேச்சு நடத்தவேண்டுமானால் தம்மால் மட்டும் தான் முடியும் என்று கூறிவிடுவார்கள்.

தற்போதும் அவ்வாறான இரட்டைப் போக்கை கூட்டணியினர் கைவிடவில்லை. இலங்கைக்கு சமீபத்தில் வந்திருந்த அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரையும், அமெரிக்க வெளிநாட்டமைச்சரையும் சந்தித்த கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் புலிகளை பலவீனப்படுத்துவது அவசியம். புலிகளோடு பேச என்ன இருக்கிறது? என்று கேட்டிருந்தார்.

சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்தபேட்டியில் 'அரசும்,

நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்தார்.

அப்போது பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்து இலங்கைப் பிரச்சனை தொடர்பாக கருணாநிதி பேசியிருந்தார். அதனை அடுத்து புதுடில்லியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தனது சாணக்கியமான பாணியில் அவர் தெரிவித்த கருத்து பின்வருமாறு:

"தங்கள் பிரச்சனைக்கு தமிழ் ஈழம்தான் ஒரே பரிகாரம் என இலங்கைத் தமிழர்கள் நம்புகிறார்கள். அந்தப் பரிகாரம் இல்லாமலேயே அவர்களது பிரச்சனை தீர்க்கப் படுமானால் அது தி.மு.க.வுக்கும் மகிழ்ச்சிதான்.

தமிழ் ஈழம் என்பது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் இலட்சியம். அதனை அவர் அடைய முடியுமானால் அவர்களுக்கு மகிழ்ச்சி தரும்.

இலங்கையில் வன்முறை தொடர்வதற்கு விடுதலைப் புலிகள் மட்டுமே காரணம் அல்ல. புலிகளுக்கும் இந்திய அமைதிப் படையினருக்கும் இடையே நடந்து வரும் சண்டையும், வன்முறைகளுமே அதற்கு காரணம். எனவே முதலில் அந்த சண்டை ஓயவேண்டும்" என்றார் கருணாநிதி.



வை.கோபாலசாமி

றோர் படகு மூலம் வந்து புலிகளையும், பிரபாவையும் சந்தித்துச் சென்றது உண்டு.

தனது பயணம் தொடர்பாக நெடுமாறன் புத்தகம்கூட எழுதி வெளியிட்டிருந்தார்.

ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு சட்டவிரோதமாக இன்னொரு நாட்டுக்கு சென்று வர முடியுமா? அவ்வாறு சென்றவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்

பொறுப்பில்தான் இலங்கைக்கு சென்றிருக்கிறார். கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதியிடமோ, பொதுச் செயலாளர் அன்பழகனிடமோ, கழகத்திடமோ அவர் அனுமதி எதனையும் பெறவில்லை" என்று அறிவிப்பு வெளியானது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் "வை.கோ.என்னிடம் கூறிவிட்டுச் செல்லவில்லை. அவரது விஜயம் பற்றி எனக்குத் தெரியாது" என்று கைவிரித்தார்.

### துபாய் போய்விட்டார்

'வை.கோ.இலங்கை செல்வதற்கான விசா எதனையும் தம்மிடம் பெறவில்லை' என்று இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்தது.

வை.கோ.வீட்டில் உள்ளவர்களிடம் பத்திரிகையாளர்கள் விசாரித்தனர். "அவர் துபாய் உட்பட வளைகுடா நாடுகளுக்கு சென்றிருக்கிறார். எப்போது திரும்புகிறார் என்று தெரியாது" என்று சொல்லிவிட்டனர்.

இந்திய அமைதிப்படை தளபதி கல்கத் தமிழக முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து வை.கோ.வின் இரகசியப் பயணம் தொடர்பாக பேசினார்.

அவரிடம் வை.கோ. விஜயம் பற்றித் தனக்குத் தெரியாது என்று கூறிவிட்டார் கருணாநிதி.

"வை.கோ.வின் பயணத்தால் ஆட்சிக்கே

தன்னைச் சந்தித்துவிட்டுப் புறப்பட்ட வை.கோ.விடம் தன் கழுத்தில் கிடந்த 'சயனைட் குப்பியை' கழற்றிக் கொடுத்தார் பிரபாகரன்.

வை.கோ.வின் புருவங்கள் உயர்ந்தன. "இந்திய இராணுவம் உங்களை பின்தொடரலாம். ஆனாலும் நாங்கள் பாதுகாப்புத் தருவோம். தேவைப்பட்டால் இதனைப் பயன்படுத்தலாம்" என்று சொன்னார் பிரபாகரன்.

வை.கோ.படகு மூலமே தமிழ் நாட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

இந்திய மத்திய அரசு நினைத்திருந்தால் அவரை கைது செய்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவிருந்தன. வை.கோ.வை கைது செய்தால் தமிழகத்தில் நாடாளுமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்புக்கள் பாதிக்கப்படலாம் என்று நினைத்திருப்பார் ராஜீவ்காந்தி.

வை.கோ.கலைஞரைச் சந்தித்தார். பிரபாகரன் தன்னிடம் தெரிவித்த செய்திகளை கூறினார்.

வை.கோ.வின் எழுச்சிப் பயணம் என்று தி.மு.க. தொண்டர்கள் வை.கோ.வின் இரகசியப் பயணத்தை கொண்டாடினார்கள்.

தொண்டர்களின் எழுச்சியைக் கண்ட கலைஞர் கருணாநிதி "வை.கோ என் போர்வாள்" என்று கூறினார்.

### கருத்துக் கணிப்பு

இந்தியப் படையினர் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று இலங்கை அரசு அறிவித்த பின்னர், வடக்கு-கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் அதற்கு பதிலடியாக, "வடக்கு-கிழக்கில் இருந்து முதலில் சிறிலங்கா படையினர் வெளியேற வேண்டும். அதன் பின்னரே இந்தியப் படை வெளியேறுவது பற்றிப்பேசலாம்" என்று அறிவித்தார்.

வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருப்பதா இல்லையா? என்பதை தீர்மானிக்க கிழக்கில் கருத்துக் கணிப்பு நடத்துவதையும் வடக்கு-கிழக்கு மாகாண சபை எதிர்த்தது.

"வடக்கு-கிழக்க இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்று கிழக்கில் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமானால், அதற்கு முன்னர் தமிழ் பேசும் மக்கள் தனிநாடாகப் பிரிந்துசெல்ல விரும்புகிறார்களா? இல்லையா? என்பதை கண்டறிய அவர்களிடம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்படும்" என்று இந்திய தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தார் வரதராஜப் பெருமாள்.

(தொடர்ந்து வரும்)

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

புலிகளும் பேசவேண்டும்' என்று சிவசிதம்பரம் கூறியிருந்தார். இவ்வாறான இரட்டைத்தனமான போக்கையே இயக்கங்கள் பலம்பெற்ற காலத்தின் பின்னர் கூட்டணியினர் கடைப்பிடிக்கத் தொடங்கியிருந்தனர்.

எனினும் தற்போது ஏனைய இயக்கங்கள் ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ளதால், அவற்றுடன் அச்சமில்லாத போக்கையும், புலிகளோடு மட்டும் பகிரங்கமாக பகைத்துக் கொள்ளாத போக்கையும் கையாண்டு வருகின்றனர்.

### வை.கோ. எங்கே?

தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்

அப்போது குறுக்கிட்ட ஒரு நிருபர் "இலங்கைப் பிரச்சனையைத் தீர்க்க யாழ்ப்பாணத்துக்கு செல்வீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த மு.கருணாநிதி, பிரதமருடனும், வெளிநாட்ட மைச்சர்களுடனும் தொடர்ந்து நடத்தும் பேச்சைப் பொறுத்த விஷயம் அது" என்று தெரிவித்தார்.

புதுடில்லியில் தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றையும் முதல்வர் கருணாநிதி நடத்தினார்.

அந்தக் கூட்டத்தில் தி.மு.க. எம்.பி.க்களில் ஒருவர் மட்டும் காணப்படவில்லை. அவர் தான் வை.கோ. அதனை எப்படியோ

# கூட்டணியினரின் இரட்டைப்போக்குகள்

படும்? என்ற கேள்விகள் வை.கோ.விடயத்தில் எழுப்பப்பட்டன.

இதேவேளை தமிழக மக்கள் மத்தியிலும், தி.மு.க. இளைஞர்கள் மத்தியிலும் வை.கோ.வின் இரகசியப் பயணம் பெரும் ஆதரவைப்பெற்றது.

வை.கோ. ஒரு வீரராக கருதப்படலானார். அதனால் தி.மு.க.வுக்குள் வை.கோ.வுக்கு எதிரானவர்கள் முகம் சுளித்தனர்.

கலைஞர் கருணாநிதியின் மருமகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான முரசொலி மாறனுக்கும், வை.கோ.வுக்கும் கட்சிக்குள் பனிப்போர் இருந்தது.

முரசொலி மாறனுக்கு தொண்டர் பலம் இல்லை. வை.கோ.வுக்கு தொண்டர் பலம் ஆமோகம். வை.கோ.சிறந்த பேச்சாளர். மணிக்கணக்காக அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

தி.மு.க.வுக்குள் கருணாநிதியின் குடும்ப ஆதிக்கம் ஏற்படுவதற்கும் வை.கோ.தான்

ஆபத்து வரப்போகிறது. அதனால் அவர்மீது நடவடிக்கை எடுப்பதுதான் நல்லது" என்று வை.கோ.வின் எதிரணியினர் கருணாநிதியிடம் வலியுறுத்தத் தொடங்கிவிட்டனர்.

அரசியலில் பழுத்த இராஜதந்திரியான கலைஞர் அதற்கு இணங்கவில்லை. வை.கோ.மீது நடவடிக்கை எடுத்தால் கட்சிக்குள் மட்டுமல்லாமல் தமிழக மக்களிடமும் பலத்த அதிருப்தி உருவாகும் என்பதை அப்போது கலைஞர் நன்கு உணர்ந்திருந்தார்.

"என் தம்பி வை.கோ.உணர்ச்சிவேகத்தில் அப்படிச் செய்துவிட்டார். அவர் எங்கே இருக்கிறார், அவர்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியெல்லாம் சிந்திப்பதைவிட, அவர் பத்திரமாக திரும்பிவரவேண்டும் என்பதைப் பற்றித்தான் நான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்" என்று உருக்கமாகக் கூறிவிட்டார் கலைஞர்.

### பிரபா-வை.கோ சந்திப்பு

வை.கோ.வை கட்டித் தழுவி வரவேற்றார்

# திரைமறைவு நாடகங்கள்

# கூட்டணி போட்ட பிள்ளையார் சுழி

இந்திய-இலங்கை ஒப்பந்தம்தான் முதன்முதலில் வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா என்பதைத் தீர்மானிக்க கிழக்கில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்ற விடயத்தை கொண்டுவந்தது.

விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ்க் கட்சிகளும் ஒப்பந்தத்தின் முக்கிய குறைபாடாக அதனையே சுட்டிக்காட்டியிருந்தன.

"சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவே அவ்வாறான ஷரத்து இடம்பெற்றுள்ளது. அவ்வாறான கருத்துக் கணிப்பு ஒருபோதும் நடைபெற மாட்டாது. அதற்கு இந்தியா பொறுப்பு" என்று அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ்க்கட்சிகளிடம் வாய்மூல உத்தரவாதம் வழங்கியிருந்தார்.

வாய்மூல உத்தரவாதங்களை நம்பி அடிப்படை கோட்பாடுகளை விட்டுக் கொடுப்பது எத்தனை பெரிய வரலாற்றுத் தவறாக முடியப்போகிறது என்பதை அன்றே உணர்ந்திருந்தால், தமிழ்பேசும் தரப்பு அப்போதே உறுதியாக நின்றிருக்கலாம்.

இன்று ராஜீவும் இல்லை. ஜே.ஆரும் இல்லை. அவர்கள் வாய்மூலம் கூறிய உத்தரவாதங்களுக்கு சாட்சியங்களும் இல்லை. ராஜீவ் காந்தி கூறிய உத்தரவாதத்தை நம்பிய தமிழ்பேசும் தரப்புக்காக வாதாட இந்திய அரசும் இன்று தயாராக இல்லை.

'கிழக்கில் கருத்துக் கணிப்பு நடத்த அப்போது ஒப்புக்கொள்ளப்பட்டதுதானே' என்று ஒரே பிடியாக பிடித்துக் கொள்கிறார்கள். தமிழ்பேசும் தரப்புக்கு பாதகமான ஒரு அம்சமாகவும்,

வடக்கு-கிழக்கை பிரிக்கும் திட்டத்தை நியாயப்படுத்த சாதகமான ஒரு அம்சமாகவும் அது மாறி நிற்கிறது.

இன்னொரு முக்கிய விடயத்தையும் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

### புதிய யோசனைகள்

வடக்கு-கிழக்கை பிரிக்க கருத்துக் கணிப்பு என்பதை இன்றைய பொதுஜன முன்னணி அரசும் புதிய யோசனையாக முன்வைத்துள்ளது.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை பயன்படுத்தி ஜே.ஆர். வடக்கு-கிழக்கை பிரிக்க முயன்றார். ஜே.ஆர். செய்ய முடியாமல் போனதை ஜனாதிபதி சந்திரிக்கா செய்து முடிக்கப்போகிறாரா? என்று கேள்வி எழுந்துள்ளது.

அவ்வாறு கேட்பது சரியல்ல!

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அன்று கடுமையாக எதிர்த்தவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர். வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதையும் எதிர்த்தனர்.

இப்போது கூறப்பட்டுள்ள கருத்துக் கணிப்பு திட்டமானது இந்திய, இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக் கணிப்பை விட பாரதூரமானதாகும்.

இலங்கை, இந்திய ஒப்பந்தப்படி வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பதை தீர்மானிக்க கிழக்கில் ஒரு கருத்துக் கணிப்பு நடைபெறும்.

கருத்துக் கணிப்பில் 'ஆம்' என்று முடிவு அமைந்தால் வடக்கு-கிழக்கு அப்படியே தொடர்ந்து இணைந்திருக்க அனுமதிக்கப்படும். ஒரு மாற்றமும் இருக்காது. இணைந்திருக்க விரும்பவில்லை என்று முடிவு அமையுமானால் வடக்குக்கு தனியாகவும், கிழக்குக்கு தனியாகவும் மாகாணசபைகள் அமைக்கப்படும்.

தற்போதைய யோசனைப்படி தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா என்பதை தீர்மானிக்க முதலில் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் மட்டுமே கருத்துக் கணிப்பு நடைபெறும். இணைந்திருக்க விருப்பம் என்று அவர்கள் தெரிவித்தால் கிழக்கு மாகாணம் மூன்று துண்டுகளாக்கப்படும். அது மட்டுமல்லாமல் எல்லை மீளமைப்பு என்பதின் கீழ் திருமலையிலும் வன்னி மாவட்டத்திலும் பல பகுதிகள் பிரித்தெடுக்கப்பட்டுவிடும்.

ஆக, ஜே.ஆர். செய்ய நினைத்ததைவிட பல படிகள் மேலே சென்றுவிட்டது அரசின் புதிய யோசனைகள். ஜே.ஆர். எட்டடி பாய்ந்தார். இன்று பதினாறடி பாயப்பட்டுள்ளது.

### விழுந்தடிப்பு

விட்டுக் கொடுப்புக்கள், தவறான அணுகுமுறைகள், ஒற்றுமையின்மை, அரசியல் உறுதிப்பாடு இன்மை போன்றவற்றால் தமிழ்பேசும் தரப்பு தன் அடிப்படைக் கோட்பாடுகளில் இருந்து இறங்கி சென்று கொண்டிருக்க, மறுபுறத்தில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் பேசும் தரப்பிடம் மேலும் மேலும் விட்டுக் கொடுப்பை எதிர்பார்த்து மேலே ஏறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே வரலாறாக மாறியிருக்கிறது.

தற்போதும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நிலைப்பாடுதான் புதிய யோசனையை முன்வைக்க அரசாங்கத்துக்கு நம்பிக்கை கொடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வு தொடர்பாக அரசாங்கமோ, எதிர்க்கட்சியோ திட்டவட்டமான முடிவு எதனையும் தெரிவிக்காத நிலையில், அம்பாறையை விட்டுக் கொடுக்கத் தயார், தனி முஸ்லிம் அலகுக்கும் தயார் என்று கூறிய ஒரே கட்சி கூட்டணிதான்.

விழுந்தடித்து விட்டுக் கொடுத்து, இன்னமும் இறுக்கினால் விட்டுக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையை தோற்றுவித்த பெருமை கூட்டணியையே சாரும். விட்டுக் கொடுப்புக்கு பிள்ளையார் சுழி போட்ட சாதனை கூட்டணியினருக்கே சேரும்.

கூட்டணியின் இந்த நிலைப்பாட்டை முதலில் வெளிக்கொணர்ந்ததுடன், முதலிலேயே இப்படி விட்டுக் கொடுக்கத் தொடங்கினால், தொடர் விட்டுக் கொடுப்புக்களுக்கு தமிழ் பேசும் தரப்பு நிர்ப்பந்திக்கப்படும் என்பதை அன்றே 'முரசு' சுட்டிக்காட்டியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

தீர்க்கமான விடயங்களை எல்லாம் அரசுடனும், எதிர்க்கட்சியுடனும் திரைமறைவில் பேசிமுடித்து விட்டு, "புலிகளும் அரசும் பேச நாம் தடையில்லை. புலிகளே ஏகப்பிரதிநிதிகளாக பேச்சு நடத்த விரும்பினால் வழிவிடுவோம்." என்று கூட்டணியினர் கூறுவது மக்களையும், புலிகளையும் முட்டாள்களாக்குவது போன்றதே.

### முக்கிய பங்காளி

அரசாங்கத்தின் புதிய யோசனைகள் விடயத்தில் ஒரு முக்கியமான தமிழ் அரசியல்வாதி சம்பந்தப்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தின் அமைச்சரவை கூட்ட முடிவுகள் பற்றிய ஆவணத்தையும் அவர் பத்திரிகைக்கு வழங்கியிருக்கிறார்.

"அப்படி இப்படி தந்திரம்பண்ணி கருத்துக் கணிப்பை எங்களுக்கு சாதகமாக்குவதாக உறுதியளித்துள்ளார்கள்." என்றும் தனக்கு நெருக்கமானவர்களிடம் குறிப்பிட்ட அரசியல்வாதி கூறியிருக்கிறார்.

அரசின் முன்னைய தீர்வு யோசனைகளுக்கு பங்காளியாக இருந்தவரும் குறிப்பிட்ட அரசியல்வாதிதான்.

தனது பங்கை முடிமறைக்க ஈ.பி.டி.பி., புளொட் கட்சிகளை அழைத்து அரசின் புதிய யோசனைகளைப் பற்றி ஆராய்வது போலவும் ஒரு நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.

அரசின் புதிய யோசனைகள் பற்றி ஏனைய கட்சிகள் உடனடியாக கருத்துக் கூறியபோது, கூட்டணி மட்டும் 'பொதுக்குழு', 'செயற்குழு' என்று காரணம் காட்டி கருத்துக்கூற தாமதித்தமையும் தெரிந்ததே.

தாயகக் கோட்பாடு என்பதற்கு புதிய யோசனைகள் எதிராக அமைந்துள்ளன என்பது சாதாரண மக்களுக்கே உடனடியாக தெரியும்போது, முன்னாள் அரசியல் சாணக்கியர்களுக்கு மட்டும் கருத்துச் சொல்ல கால அவகாசம் தேவைப்பட்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது– இராஜதந்திரி

# பிரிப்புக்கான கருத்துக் கணிப்பு

# பறிப்புக்கான எல்லை மீளாய்வு!

அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டில்தான் தீர்வு தங்கியுள்ளது என்று ஆட்சியாளர்கள் கூறத் தலைப்பட்ட நேரத்தில், ஆட்சியாளர்களை சிங்களக் கமிஷனுக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கிவிட்டு நழுவிக்கொள்ளப் பார்த்தனர் எதிர்க்கட்சியினர்.

சிங்களக் கமிஷன் அறிக்கையும், பௌத்த பீடங்கள் சிலவற்றின் அரசியல் தீர்வு யோசனைகளுக்கு எதிரான நிலைப்பாடுகளும் ஓரளவுக்கு மேலாக வளர ஆரம்பித்தால் பொதுஜன முன்னணியின் வாக்கு வங்கிகளையே விழுங்கும் அளவுக்கு சென்றுவிடும் என்பது ஆட்சியாளருக்குத் தெரியாததல்ல.

சிங்களக் கமிஷன் என்ற பூதம் கிளம்பிய பின்னர் அதனால் ஆட்சியாளர்களுக்கு சாதகங்களும் இருக்கின்றன. பாதகங்களும் இருக்கின்றன.

சாதகங்கள் என்று நோக்கும்போது அவற்றை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

**1. தம்மால் முன்வைக்கப்படக்கூடிய குறைந்தபட்சமான தீர்வுக்கு நியாயம் கற்பிக்க பேரினவாதிகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை உதாரணம் காட்டலாம்.**

**2. கடும் எதிர்ப்பின் மத்தியில் தீர்வைக் காணமுற்படுவதாக உலக அரங்கில் அபிப்பிராயத்தை தோற்றுவிக்கலாம்.**

பாதகங்களும் இருக்கின்றன. அவை பின்வருமாறு;

**1. தமது இறுதியான யோசனை என்னவென்று கூறாமல் காலத்தை மேலும் இழுத்தடித்தால் சிங்கள மக்களிடம் ஆட்சியாளர் தொடர்பான சந்தேகங்கள் மேலோங்கும்.**

**2. தமிழ் மக்களுக்கு அதிக உரிமைகளை வழங்கப் போகிறார்கள் என்ற பிரசாரம் எடுபடத் தொடங்கிவிடும்.**

**3. எதிர்க்கட்சி தனக்கு சாதகமாகப் பேரினவாத அமைப்புக்களை பயன்படுத்தும்.**

மேற்கண்ட சாதக பாதகங்களை கணிப்பிட்டு புத்திசாலித்தனமான ஒரு அரசியல் நகர்வை மேற்கொண்டாக வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது.

அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட வேகமாக சிங்களக் கமிஷன் பூதாகரமாக உருப்பெறத் தொடங்கியிருந்தது. பௌத்த மதகுருமாரின் உண்ணாவிரதக் காட்சிகளை சிங்களத் தினசரிகள் முன்பக்கத்தில் பெரிதாக வெளியிட்டிருந்தன.

சென்றவாரம் இப் பகுதியில் சுட்டிக்காட்டியதுபோல, உலக அரங்கிலும் அரசியல்தீர்வு முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவது தொடர்பான அதிருப்திகள் தலைதூக்கத் தொடங்கியிருந்தன.

போரின் வெற்றிக்காக காத்திருப்பதும் சாத்தியப்படக்கூடிய ஒன்றாக அமையவில்லை. ஏனெனில் புலிகளின் இராணுவ ரீதியான பலம் குறுகிய காலத்தில் வெற்றி பெற்றுவிடலாம் என்ற ஆட்சியாளரின் நம்பிக்கையை பொய்யாக்கியிருக்கிறது.

எனவே உள்நாட்டிலும், உலக அரங்கிலும் தமக்கு பாதகமான சூழல் உருவாகுவதில் இருந்து தப்பிக்கொள்ள வேண்டுமானால், முன்னைய உத்திகளுக்கு பதிலாக புதிய உத்திகளை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளருக்கு ஏற்பட்டுள்ளது.

**இனிமேலும் பொதியை முடிவைத்துக்கொண்டு காலத்தை இழுத்தடிப்பது தமக்குப் பாதகமாகவே முடியும் என்ற கட்டத்தில்தான் இப்போது புதிய யோசனையை ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ளனர்.**

சிங்கள மக்களிடம் பொதி தொடர்பாக எழுந்துள்ள சந்தேகத்தைக் களைந்தெறியும் நோக்கத்துடன், முழுக்க முழுக்க சிங்கள மக்களை திருப்தி செய்யும் அடிப்படையில் புதிய யோசனையை ஆட்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

**வடக்கு-கிழக்கை பிரிப்பது என்ற திட்டவட்டமான முடிவுடன் புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

கிழக்கில் மட்டக்களப்பு, திருமலையில் ஒரு கருத்துக் கணிப்பு நடைபெறும். வடக்குடன் இணைந்திருக்க விருப்பமா இல்லையா? என்று அக் கருத்துக் கணிப்பில் கேட்கப்படும்.

வடக்குடன் இணைந்திருக்க மட்டக்களப்பு, திருமலை மாவட்ட மக்கள் விரும்பாவிட்டால் கிழக்கு மாகாணம் தனி மாகாணமாக இருக்கும்.

வடக்குடன் இணைந்திருக்க அவர்கள் விரும்பினால் கிழக்கு மாகாணம் மூன்று துண்டாக்கப்படும்.

அப்படி துண்டாக்க இரண்டு வாக்கெடுப்பு கிழக்கில் நடத்தப்படும். அம்பாறை தொகுதியை சிங்கள மாகாணமான ஊவாவுடன் இணைப்பதா, வடக்கு-கிழக்கு மாகாணத்துடன் இணைப்பதா? என்பதற்கு ஒரு வாக்கெடுப்பு.

அம்பாறையில் உள்ள முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் வேண்டுமா வேண்டாமா? என்று முஸ்லிம் மக்களிடம் இன்னொரு வாக்கெடுப்பு.

ஒட்டுமொத்தமாக நோக்கினால், வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் பலத்தை சிதைப்பதை அடிப்படையாகக் கொண்டே புதிய யோசனைகள் வகுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, திருமலை மக்கள் இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தால் கிழக்கு மாகாணத்தை துண்டுபோடும் தேவை இருக்காது.

காரணம் என்ன?

தனியான கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் விகிதாசாரம் குறைந்துபோகும். தமிழ்-முஸ்லிம் மக்களையும் மோத வைத்துக் கொண்டிருக்கலாம். அம்பாறை மற்றும் திருமலையில் சிங்கள மக்களின் விகிதாசாரம் அதிகம் இருப்பதால் கிழக்கு மாகாண சபை ஒரு கலப்புச் சபையாக இருக்கும்.

எனவே தமிழ் மக்களின் பலம் பற்றி கவலைப்படத் தேவையில்லை. அதனால் கிழக்கை துண்டாக்க வேண்டியதில்லை.

ஆனால் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் வடக்குடன் சேர முடிவெடுத்தால் தமிழர்களின் விகிதாசாரம் உயர்ந்துவிடும். எனவே கிழக்கை பல துண்டுகளாக்கி நிலப் பரம்பலை குறுக்க நினைக்கிறார்கள்.

வடக்கு மக்களுக்கு மட்டும் தாங்கள் இணைந்திருக்க வேண்டுமா? பிரிந்திருக்க வேண்டுமா? என்பதை தீர்மானிக்கும் உரிமை வழங்கப்படவில்லை.

ஏனெனில் முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்களைக் கொண்ட வடக்கையும் சேர்த்து கருத்துக் கணிப்பு நடத்தினால் முடிவுகள் பிரித்தாளும் திட்டத்துக்கு சாதகமாக அமையாது என்பதால், அந்த உரிமை வழங்கப்படவில்லை.

இதற்கிடையே பலரது கவனத்தை கவராமல் உள்ள ஒரு திட்டம் பற்றியும் கவனிக்க வேண்டும்.

**மாவட்ட எல்லைகளை மீள வரையறை செய்யும் முடிவையும் அரசாங்கம் எடுத்திருக்கிறது. அமைச்சரவை முடிவுகளோடு மேற்கண்ட தீர்மானத்தையும் வெளியிட்டுள்ளனர்.**

இதுவும் மிக ஆபத்தான ஒரு திட்டத்துக்கான முன்னெடுப்பாகும்.

வடக்கு-கிழக்கின் இதய பாகமாக உள்ள மணலாறு (வெலிஓயா) பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன. தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசங்களைக் கூறுபோடுவதற்காகவே அக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

அவற்றின் பலனை அறுவடை செய்வதாகவே எல்லை மீள வரையறை என்ற விடயம் அமைந்துள்ளது. அதாவது மணலாறு போன்ற பிரதேசங்கள் அநுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுவிடலாம். அதன்மூலம் வடக்கு-கிழக்கின் இதயபூமி கோதி எடுக்கப்பட்டுவிடும்.


**மொத்தத்தில் ஆட்சியாளரின் புதிய யோசனைகள் தமிழ்பேசும் மக்களின் சகல அரசியல்கோரிக்கைளையும் ஒட்டுமொத்தமாக நிராகரித்துள்ளதுடன், இனிமேல் தமிழ் பேசும் மக்கள் தமது தேசிய தனித்துவத்தைப் பற்றி நினைத்தும் பார்க்கமுடியாதளவுக்கு செய்யப்போகின்றன.**

இதேவேளை மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் கருத்துக் கணிப்பு ஒன்று நடைபெறுமானால் அது எத்தகைய முறையில் நடத்தப்படும் என்பதை கடந்த கால அனுபவங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

வடக்கு-கிழக்கில் யுத்தம் ஆரம்பித்தபின்னர் நடைபெற்ற எந்தவொரு தேர்தலும் சுதந்திரமானதாகவோ, நீதியானதாகவோ அமைந்திருக்கவில்லை.

இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்தபோது நடைபெற்ற தேர்தல்கள், இந்திய அரசும், இந்திய அரசுக்கு சார்பான அமைப்புக்களும் எத்தகைய முடிவுகளை பெற விரும்பினவோ, அதற்கேற்ற வகையிலேயே நடத்தப்பட்டன. கள்ள வாக்குகளால் வாக்குப் பெட்டிகள் நிரப்பப்பட்டன.

இலங்கை அரசால் வடக்கு-கிழக்கில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள்கூட



நாடு துண்டாடப்படுமென வெளியான காட்டூன்

நிதீயானதாக அமைந்திருக்கவில்லை.

படை அதிகாரிகளும், பொலிஸ் உயர் அதிகாரிகளும் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டனர் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் நியமித்துள்ள விசாரணைக் கமிஷன் முன்பான சாட்சியங்களே எடுத்தியம்பி உள்ளன.

**சர்வதேசப் பார்வையாளர்கள் அழைக்கப்பட்டும் கூட தேர்தல்களை நீதியாக நடத்தி முடிக்க இயலவில்லை.**

தற்போது வடக்கு-கிழக்கில் படையினர்தான் எதனையும் தீர்மானிக்கக்கூடிய நிலையில் உள்ளனர். திருமலையில் சந்தைக் குத்தகை விடயத்தில் படை அதிகாரியின் விருப்பத்தை மீறிச் செயற்பட அரசால்கூட முடியாமல் இருந்தது.

படையினரின் கட்டளைகளுக்கு முதலிடம் கொடுத்தே சிவில் நிர்வாக அதிகாரிளும் செயற்படவேண்டியுள்ளது.

**இந்நிலையில் படைக்குவிப்பு மத்தியில் நடத்தப்படும் கருத்துக் கணிப்பு வாக்களிப்புக்கள் ரீதியாக அமையுமா என்பதற்கு எவராலும் உத்தரவாதமளிக்க முடியாது.**

அதுதவிர யுத்தம் காரணமாக திருமலையில் இருந்தும், மட்டக்களப்பில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

**இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நோக்கினால் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு சாதகமான கருத்துக் கணிப்பொன்று நடந்து முடியும் நிலையே காணப்படுகிறது. ஜனநாயக 'லேபிள்' ஒட்டப்பட்ட பிரிப்புக்கான கத்திதான் இந்தக் கருத்துக் கணிப்பாகும்.**

**தீர்வு யோசனைகள் நாட்டைப் பிரிக்கும் என்று சிங்கள மக்களிடம் தோற்றுவிக்கப்பட்ட சந்தேகங்களை களைவதற்கு ஆட்சியாளர்கள் தெரிவு செய்துள்ள வழி வடக்கு–கிழக்கை பல துண்டுகளாகப் பிரித்தல்!**

**குறைந்த பட்ச தீர்வு என்ற அபிப்பிராயம் வெளியுலகில் ஏற்படாமலிருக்க அரசு தெரிவு செய்துள்ள உத்தி பிரிப்புக்கு சாதகமான கருத்துக் கணிப்பு!**

சர்வதேச ரீதியில் இனப்பிரச்சனை தீர்வுகளுக்கு கருத்துக் கணிப்புக்கள் நடைபெற்றுள்ளன. கனடாவில் இருந்து தனியாகச் செல்வதா இல்லையா? என்பதை தீர்மானிக்க கியூபெக் மாகாணத்தில் கருத்துக் கணிப்பு நடைபெற்றது. அக் கருத்துக் கணிப்பு கியூபெக் மாகாணம் முழுவதற்குமாக நடத்தப்பட்டதே தவிர பல துண்டுகளாக பிரித்து நடத்தப்பட்டிருக்கவில்லை.

பிரிட்டனில் ஸ்கொட்லாந்திலும், வேல்ஸிலும் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்களும் ஒட்டுமொத்தமாக அந்தப் பிராந்தியங்களிலேயே நடத்தப்பட்டன.

அந்த உதாராணங்களை தவறான முறையில் ஆட்சியாளர்கள் இங்கு பின்பற்ற முனைவதையே அவதானிக்க முடிகிறது.

ஆனால் ஆட்சியாளர்கள் மிகப் புத்திசாலித்தனமாக ஒரு காரியம் செய்துள்ளனர். வடக்கு-கிழக்கு ஏற்கனவே பிரிந்திருப்பது போலவும், கிழக்கை தம்மோடு இணைக்க வடக்கு மாகாண மக்கள் விரும்புவதுபோலவும் காண்பிக்க முற்படுகின்றனர்.

ஆனால், வடக்கு-கிழக்கு வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக இருந்து வருகிறது. அந்த நிலத்தொடர்ச்சியை பிரிக்கவே தென்னிலங்கையில் மாறிமாறி பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் முயன்றுள்ளனர்.

அதன் விளைவாகவே திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் கிழக்கில் நடத்தப்பட்டன. தமிழ், முஸ்லிம் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டன.

எனவே பிரிந்திருக்கும் பிரதேசங்களை இணைப்பதற்கான கருத்துக் கணிப்பென்று கூறுவது தவறானதாகும். இணைந்துள்ள பிரதேசங்களை பிரிக்கவே கருத்துக் கணிப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிப்பது தொடர்பான முடிவை எடுக்க வேண்டுமானால் வடக்கு-கிழக்கு முழுவதும் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தி 'தனி மாகாணங்களாக பிரிந்திருக்க விருப்பமா? இல்லையா?' என்று தீர்மானிக்க விடுவதே உண்மையான ஜனநாயகமாக இருக்கும்.

அம்பாறையில் உள்ள சிங்கள மக்களிடம் உங்களுக்கு தமிழ்பேசும் மக்களுடன் சேர்ந்திருக்க விருப்பமா இல்லையா? என்று கருத்துக் கணிப்பு நடத்த ஆட்சியாளர்கள் தயாராக உள்ளனர்.

**அவ்வாறானால், தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கக்கூடிய தமிழ் தேசிய இனத்திடம் அவர்களுக்கு சிங்கள மக்களுடன் இணைந்திருக்க விருப்பமா இல்லையா? என்ற கருத்துக் கணிப்பை நடத்த ஆட்சியாளர்கள் தயாராக இருக்கிறார்களா? என்ற கேள்வியும் எழச் செய்யும்.**

**பெரும்பான்மை இனத்தை திருப்திப்படுத்தக் கூடிய முயற்சிகளில் ஆட்சியாளர்கள் இறங்கியுள்ளதையே அவதானிக்க முடிகிறது. அவற்றுக்கு உலக ஆதரவைப் பெறுவதற்காகவே 'ஜனநாயக சாயம்' பூசும் முயற்சிகள் நடந்துள்ளன.**

தமிழ்பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகள் தனியே வடக்கு மக்களால் எழுப்பப்பட்டவையல்ல. வடக்கு-கிழக்கு மக்களின் இதய நாதமாக எழுந்தவையே அக் கோரிக்கைகளாகும்.

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி சபைகள் முதற்கொண்டு பாராளுமன்றம்வரை தெரிவான பிரதிநிதிகளில் பெரும்பான்மையானவர்கள் தாயகக் கோட்பாட்டை முன்வைத்தே வெற்றி பெற்றனர்.

**எனவே தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான அபிலாசைகளை கணிப்பிட அவர்களை பல துண்டுகளாகப் பிரித்து வாக்கெடுப்புக்கள் நடத்துவதனால் இனப்பிரச்சனை தீர்ந்துவிடப்போவதில்லை.**

புதிய யோசனைகளை முன்வைத்துள்ளமை மூலம் சிங்கள மக்களுக்கு தங்கள்மீது எவ்வித சந்தேகமும் ஏற்படாமல் செய்துவிட்டனர் ஆட்சியாளர்கள்.

புதிய யோசனைகளைப் பற்றி வெறுமனே தமிழ்க் கட்சிகள் கண்டனம் கூறிக்கொண்டிருப்பதுகூட ஆட்சியாளர்களுக்கு சாதகம்தான். குறைந்தபட்ச தீர்வொன்றைத்தான் கொடுத்திருக்கிறோம், அதனால்தான் சத்தம் போடுகிறார்கள் என்று சிங்கள மக்களிடம் கூறிவிடலாம்.

அதே நேரம் புலிகள் போரை தொடங்காமல் பேச்சு நடத்தியிருந்தால் பிரச்சனை தீர்ந்திருக்கும் என்ற அரசின் குற்றச்சாட்டு வலுவிழந்து போயிருக்கிறது.

**தமிழ்க் கட்சிகளாலேயே ஏற்கப்பட முடியாத குறைந்தபட்சமான தீர்வொன்றையே வழங்கக்கூடிய நிலையில் உள்ளது அரசாங்கம். இந் நிலையில் புலிகளை திருப்திப்படுத்தி நிலையான தீர்வொன்றை வழங்க முடிந்திருக்கும் என்பதும் வெறும் பேச்சாக மாறிவிட்டது.**

ஆட்சியாளரின் புதிய யோசனைகள் இனப்பிரச்சனையில் புதிய பரிமாணத்தையே ஏற்படுத்தப் போகின்றன. ஆட்சியாளர்கள் விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப் புலிகளுக்கு வெகுஜன அடித்தளத்தை மேலும் விரிவாக்கும் வாய்ப்பினை வழங்கியுள்ளனர். ■

## இரண்டு முகங்கள்



சிங்களக் கமிஷன் அறிக்கையும், அதைத் தொடர்ந்து எழுந்த சூழலையும் பயன்படுத்துவது யார்? என்பதில் ஆட்சியாளர்களுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே சத்தமில்லாமல் ஒரு யுத்தம் நடந்தது.

அமைச்சர் மங்கள சமரவீர மட்டும்தான் சிங்கள கமிஷனின் அறிக்கையை சாடியிருந்தார். அவருக்கெதிரான பிரசாரங்களும், உண்ணாவிரதங்களும் நடைபெற்றபோது அரசாங்கம் மௌனமாக இருந்து கவனித்துக் கொண்டிருந்தது.

சிங்களக் கமிஷன் அறிக்கை விடயத்தில் ஆளும் தரப்பினர் இரண்டு முகங்களை காண்பித்தனர்.

பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜெயரத்ன மூலம் சிங்களக் கமிஷன் அறிக்கையை பெற்றுக்கொண்டனர் ஆட்சியாளர். ஒரு முகம். முழுக்க முழுக்க பேரினவாத விழாவாக நடந்து முடிந்திருந்த சிங்களக் கமிஷன் அறிக்கை வெளியிடும் விழாவில் அமைச்சர் ஜெயரத்ன கலந்து கொண்டிருந்தார்.

அமைச்சர் மங்கள சமரவீர சிங்களக் கமிஷன் அறிக்கை குப்பைத் தொட்டியில் போடப்படவேண்டிய ஒன்று எனக் கூறியிருந்தார். அவ்வாறான ஒரு அறிக்கையை அவரது சகாவான ஜெயரத்னவே பெற்று வந்திருந்தார்.

அமைச்சர் ஜெயரத்ன மூலம் பேரினவாதிகளை திருப்திப்படுத்தும் முகம் ஒன்று. அமைச்சர் மங்கள சமரவீர மூலமாக பேரினவாதிகளுக்கு எதிரானவர்களை திருப்திப்படுத்தும் முகம் இன்னொன்று என்ற ரீதியில்தான் ஆட்சியாளர்கள் இந்த இரு அமைச்சர்களின் நிலைப்பாடுகளையும் தமக்கு சாதகமாக்கி கொண்டுள்ளனர்.

எதிர்க்கட்சியும் சிங்கள கமிஷன் அறிக்கை தொடர்பாக இரு முகங்களை காட்டிக்கொண்டிருந்தது. அந்த அறிக்கை தொடர்பாக உடனடியாக தம் நிலைப்பாட்டை தெரிவித்தால் தமிழ்பேசும் வாக்கு வங்கிகள் பாதிக்கப்படும் என்பதால், அரசை நோக்கி "உங்கள் நிலைப்பாடு என்ன?"வென்று கேள்வி எழுப்பினார் ரணில்.

அதேசமயம் சிங்களக் கமிஷன் தொடர்பான மங்கள சமரவீரவின் விமர்சனத்தை கண்டித்தும் இருந்தார். அமைச்சருக்கு எதிரான உண்ணாவிரதத்தில் எதிர்க்கட்சியின் முக்கிய பிரமுகர் சுசில் முனசிங்க கலந்து கொண்டிருந்தார்.

ஆனால் அரசு முன்வைத்துள்ள புதிய யோசனைகள் எதிர்க்கட்சியினருக்கு சற்று அதிர்ச்சிதான். ஏனெனில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியினர் இணங்கியதைவிட குறைவான தீர்வாகவே புதிய யோசனைகள் அமைந்துள்ளன.

இதைவிடக் குறைந்த ஒரு யோசனை இனி வேறு என்ன இருக்கிறது? என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது எதிர்க்கட்சி.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

# பூலான்தேவி 64

தருவது ரசிகன்

'பூலான் தேவிக்கு ஜே' என்று கோஷமிட்டபடி பாதங்களைத் தொட்டு வணங்கியதும் பூலானுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இதுவரை அப்படியான ஒரு மரியாதையை அவள் பெற்றதில்லை. 'பூலானுக்கு உரிய வரவேற்புக் கிடைக்குமோ,' என்று சந்தேகப்பட்டுக் கொண்டுவந்த மன்னுவுக்கும் பூலானுக்கு கிடைத்த மரியாதையைப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது.

மான் சிங் தன் சின்னத் தாடியை வருடியவாறு புன்னகை ஒன்றை படரவிட்டான். புல்லரித்தவளாய் நின்ற பூலானை மான் சிங்கின் குரல் அசைத்தது.

"பாபா காத்திருக்கிறார், நீங்கள் உள்ளே செல்லலாம்!" என்றான்.

தனது வலதுகாலை எடுத்துவைத்து உள்ளே போனாள் பூலான். மன்னுவை வெளியே நிறுத்திவிட்டு, பூலான் பின்னால் சென்றான் மான் சிங்.

உள்ளே துப்பாக்கிகளைத் தோள்களில் தொங்கவிட்டபடி பாபாவின் ஆட்கள் நடமாடினார்கள். மான் சிங்கையும், பூலானையும் கண்டதும் மரியாதையாக ஒதுங்கி நின்றனர்.

பாபாவின் அறையை நெருங்கியதும் பூலானுக்கு முன்பாக சென்ற மான் சிங், உள்ளே நுழைந்து தலைதாழ்த்தி வணக்கம் செய்தான். அவன் பின்னால் சென்ற பூலானும் மான் சிங் செய்ததைக் கவனித்து தலைதாழ்த்தி வணங்கினாள்.

பாபா முஸ்தக்குவீம் இருந்த அறையில் மண்ணெண்ணை விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. பாபா திண்டுகளில் சாய்ந்த வண்ணம் பாயில் அமர்ந்திருந்தார்.

பாபாவைச் சுற்றிலும் அவரது ஆட்கள் சிலர் அமர்ந்திருந்தனர். மான் சிங்கும், பூலானும் உள்ளே நுழைந்ததும் பாபாவைத் தவிர ஏனையோர் எழுந்து நின்றுகொண்டனர்.

பாபாவின் கம்பீரமான குரல் பூலானின் செவிகளை வருடியது. "வரவேண்டும் மகளே! வழியில் ஒரு சிரமமும் இல்லையே?" என்றார் பாபா.

பூலானுக்கு உடனே பதில் சொல்ல நா எழவில்லை. அவளுக்கு எல்லாமே பிரமிப்பாக இருந்தன.

நடப்பதெல்லாம் கனவாக இருக்குமோ என்றுகூட சந்தேகம் வந்தது. மல்லாவுடன் சென்று சந்தித்தபோது 'பெண்களை வைத்திருப்பது உகந்தது அல்ல' என்று கூறிய பாபா, இப்போது தன்னை ஒரு தலைவி போலவே வரவேற்பதை நம்புவதற்குச் சிறிது அவகாசம் தேவைப்பட்டது.

பாபாவின் கேள்விக்கு பதில் சொல்லத் திணறுவதை மரியாதைக் குறைவாக நினைத்துவிடப்போகிறாரே என்ற பயத்தில், "இல்லை, சிரமம் ஏதும் இல்லை," என்றாள்.

"அப்படி அமர்ந்துகொள்!" என்று எதிரே இருந்த பாயைக் காட்டினார். "மான் சிங் நீயும் இரு!" என்றார்

பாபாவின் குறிப்பை உணர்ந்து ஏனையோர் அவரை வணங்கிவிட்டு வெளியே சென்றுவிட்டனர்.

பூலானுக்கும், மான் சிங்குக்கும் சுடச்சுட தேநீர் கொடுக்கப்பட்டது. சற்று நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த பாபாவை பூலானின் உறுதியும், துணிச்சலும் கவர்ந்து கொண்டன.

தன் குழுவில் முக்கியமான ஆட்களை உள்ளே அழைத்தார். "பண்ணையாளர்களால் மல்லா கொல்லப்பட்ட கதையை எல்லோரும் அறியட்டும். மல்லா எனக்கு சகோதரன்போல இருந்தான். பண்ணையாளர் சாதியினரை நம்பாதே என்றேன்; கேட்கவில்லை. அவன் வஞ்சிக்கப்பட்ட கதையைக் கூறு பூலான்," என்றார்.

அறைக்குள் கனத்த அமைதி நிலவியது. மல்லா கொல்லப்பட்ட சம்பவத்தை மனக் கண்ணில் காணும்போது பூலானுக்கு அடக்கமுடியாமல் அழுகை வந்துவிடும்.

ஆனால் பாபா முன்பாகவும், அவர் ஆட்கள் முன்பாகவும் எந்தத் தளம்பலும் இல்லாமல் அந்தச் சம்பவத்தை விபரித்து முடித்தாள் பூலான்.

ஆணியடித்ததுபோல அனைவரும் அமர்ந்திருந்தனர். அமைதியைக் கிழித்துக் கொண்டு பாபாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

"விக்கிரம் மல்லாவுக்கு ஜே!"

மான் சிங் உட்பட அங்கிருந்த அனைவரும் பாபா சொன்னதையே திருப்பிக் கூறினர்.

உணர்ச்சிமயமான அந்தச் சூழ்நிலை பூலானுக்கு ஆறுதலாக இருந்தது. மல்லா மறைந்த பின்னர் தனிமரமாகிவிட்டதாக தவித்த பூலானுக்கு பாபாவின் வார்த்தைகள் இதமளித்தன.

"மல்லாவைக் கொன்ற ஸ்ரீராம் குழுவினருக்கு உரிய தண்டனை தரப்படும். ஸ்ரீராம் மீது ஏராளமான குற்றச்சாட்டுக்கள் இருந்தும் அவனை பிணையில் விட்டிருக்கிறார்கள் என்றால், என்ன அர்த்தம்? தங்கள் கையாளாக அவனை உலாவ விட்டிருக்கிறார்கள் பொலிஸார்!"

பாபாவின் குரலில் கோபம் தொனித்தது. தன் ஆட்களை நோக்கி விழிகளை படரவிட்ட பாபா, "ஸ்ரீராம் பற்றிய தகவல்களை திரட்டுங்கள். மல்லாவையும், பூலானையும் கொடுமைப்படுத்தியவர்களுக்கு அதற்கான தண்டனை கொடுக்கப்படவேண்டும்!"

மான் சிங்கை நோக்கிய பாபா, "அந்தத் துப்பாக்கியை எடுத்து பூலானிடம் கொடு மான் சிங்" என்றார். அறையின் மூலையில் சுவரோடு சாத்திவைக்கப்பட்டிருந்த துப்பாக்கி பளபளத்தது.

எழுந்துபோய் அதனை எடுத்து வந்தான் மான் சிங். பூலானும் எழுந்து கொண்டாள்.

மான் சிங்கிடம் இருந்து துப்பாக்கியை பெற்றுக்கொள்ளும் முன்பாக, பாபாவின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள் பூலான் தேவி.

பின்னர் பூலான் தேவி செய்த காரியத்தைப் பார்த்ததும் பாபா உட்பட அங்கிருந்த அனைவருமே திகைத்துப் போனார்கள்.

தன்சேலையை களையத் தொடங்கினாள் பூலான். சேலையை களைந்ததும்தான் தெரிந்தது.

உள்ளே காக்கிச் சீருடை அணிந்து அதன்மேல்தான் சேலை கட்டியிருந்தாள். மான் சிங் சேலை கட்டிக் கொண்டுவரும்படி



பூலான்

சொன்னபோது, கையோடு கொண்டுவந்த காக்கிச் சீருடையை அணிந்துவிட்டு, அதன் மேல்தான் சேலை கட்டிக்கொண்டாள் பூலான்.

சேலையைக் களைய தொடங்கிய நொடியில் சற்றே அதிர்ந்துபோன பாபாவுக்கும் இப்போது புன்னகை தோன்றியது.

காக்கி உடையுடன் நின்று மான் சிங்கிடம் துப்பாக்கியைப் பெற்ற பூலான், அதனைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

பாபாவின் கண்கள் காட்டிய குறிப்பைப் புரிந்துகொண்ட மான் சிங் "பூலான் தேவிக்கு ஜே," என்று ஓங்கிக் குரல் கொடுத்தான்.

அன்றிரவு நீண்டநேரம் பூலானுடன் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார் பாபா.

பாபா இறுதியாகச் சொன்ன வார்த்தைதான் பூலானை தூக்கிவாரிப் போட்டது.

"எங்களுடன் சில காலம் நீ தங்கிக்கொள்ளலாம். ஆனால் நிரந்தரமாகத் தங்கமுடியாது!" என்றார் பாபா.

பூலானின் கண்களில் தெரிந்த அதிர்ச்சியைப் பார்த்துவிட்டு பாபா தொடர்ந்து, "உன்னைக் கைவிட்டு விடுவேன் என்று நினைக்காதே. இந்த பாபா வாக்குக்கொடுத்தால் கொடுத்ததுதான். நான் ஒரு முஸ்லிம். ஆனால் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன் என்றெல்லாம் பிரித்துப் பார்க்கிறவன் அல்ல. என் குழுவில் மதங்களுக்கு இடமில்லை. கொள்ளைக்காரனாக இருந்தாலும் நல்ல மனிதனாக இரு, நான் சொல்வது அது தான்!"

பூலான் அவர் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தாள். "நீ பெண் என்பதால்தான் யோசிக்கிறேன். பெண்களை என் குழுவில் சேர்ப்பதில்லை என்ற கொள்கையை கைவிட நான் தயாரில்லை. பயப்படாதே! நீ தனியாக ஒரு குழுவை தலைமை தாங்கி நடத்து, நான் அதற்கு உதவுகிறேன்!"

"நானா, தனியாகவா?" என்றாள் குறுக்கே புகுந்த பூலான்.

"உன்னால் முடியும். பாபாவின் கண்களும், மூளையும் பொய் சொல்லாது. நீ பெரிய தலைவியாவாய்!"

"நான் உங்கள் குழுவிலேயே இருந்துவிடுகிறேன்," என்றாள் அவசரமாக பூலான்.

"ஒரே உறைக்குள் இரண்டு துப்பாக்கிகள் இருக்கமுடியாது பூலான்." சொல்லிவிட்டு நகைத்த பாபா, "என் குழுவை வழிநடத்த நான் இருக்கிறேன்; இங்கே இருந்தால் நீ எனக்குக் கீழ்ப்பட்டவளாகத்தான் இருப்பாய். வேண்டாம், நீ தலைவியாக வேண்டியவள். தனிவழிதான் உன் வழியாக இருக்கவேண்டும்!"

பாபா தீர்க்கமான முடிவோடுதான் பேசுகிறார் என்று தெரிந்துவிட்டதால், பூலான் பின்னர் மறுத்துப் பேசவில்லை. அமைதியாக இருந்தாள்.

> **கடந்த வாரம்**
> தனது உறவினரான மன்னுவின் உதவியால்
> மாபெரும் கொள்ளைக் கோஷ்டித் தலைவனான
> பாபா முஸ்தக்குவீமை
> சந்திக்கிறாள் பூலான்.
> பாபாவுடன் சேரும் முடிவை
> மல்லா உயிருடன் இருந்தபோதே
> எடுத்திருந்தாள்.
> பாபாவின் இடத்தில்
> பூலானுக்கு உற்சாகமான வரவேற்பு.
> **இனி....**

"எங்கள் குழுவினருடன் தங்கி இருக்கும்போது உனக்கு தேவையான ஒரு தளபதியை தெரிவு செய்துகொள். அவனையும், வேறு சில நம்பிக்கையான ஆட்களையும் உன்னோடு அனுப்பிவைக்கிறேன். உன் வழியில் போ. உன்னைத் துரத்தியவர்களையெல்லாம் ஒழித்துக்கட்டு. என் ஆசீர்வாதம் எப்போதும் இருக்கும். என்ன உதவி தேவைப்பட்டாலும் உடனே கிடைக்கும். ஜே!"

இனிமேல் பேசுவதற்கு எதுவுமில்லை என்று புரிந்தது. மௌனமாக எழுந்த பூலான். மறுபடியும் பாபாவின் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டுச் சென்றாள்.

மான் சிங் இரவு உணவை கொண்டு வந்து கொடுத்து அவளுக்கு இரவுப் படுக்கையும் தயார் செய்து கொடுத்தான்.

பூலான் தங்கியிருக்க தனியான ஒரு அறையும் ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள்.

அன்றிரவே மன்னு பூலானிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பிச் சென்றுவிட்டான்.

நதிக்கரையில் பிக்குவைப் பிரிந்தபோது ஏற்பட்ட சோகம்தான், மன்னுவைப் பிரிந்த போதும் பூலானுக்கு ஏற்பட்டது.

பிரதியுபகாரம் கருதாமல் தனக்காக மன்னுபட்ட கஷ்டங்களை நினைத்துப் பார்த்த பூலானுக்கு கண்கள் கலங்கிவிட்டன.

"துர்க்கை அருளால் நாம் மறுபடியும் சந்திப்போம் மன்னு!" என்று சொன்னபோது பூலானின் குரல் தளதளத்தது.

பூலானின் கையைப் பிடித்து புறங்கையில் மென்மையாக முத்தமிட்டுவிட்டு விருவிருவென்று சென்றுவிட்டான் மன்னு.

பூலானுக்கு பாபா புகலிடம் கொடுத்த செய்தியை அறிந்த ஸ்ரீராம் கொதிந்நீரை அள்ளித் தலையில் கொட்டியதுபோலத் துள்ளினான்.

விக்கிரம் மல்லாவைச் சுட்டுக் கொன்றதற்கான சன்மானமாக ஒரு தொகைப் பணத்தை பொலிசாரிடம் இரகசியமாகப் பெற்றிருந்தான் ஸ்ரீராம்.

பூலான் தேவியையும் உயிரோடோ, அல்லது பிணமாகவோ பிடித்துத் தந்தால் மேலும் சன்மானம் தரப்படும் என்று பொலிசார் ஆசை காட்டியிருந்தார்கள்.

"விக்கிரம் மல்லாவை நாங்கள்தான் சுட்டுக் கொன்றோம்" என்று பொலிசார் கூறிக்கொண்டிருந்தனர். பூலானை ஸ்ரீராம் கொன்றுவிட்டால் அந்தப் பெருமையையும் தாங்கள் உரிமை கொண்டாடலாம் என்று நினைத்தனர்.

பாபாவிடம் பூலான் சென்று புகலிடம் பெறுவாள் என்று ஸ்ரீராம் நினைத்திருக்கவில்லை. பாபாவின் பாதுகாப்பில் இருக்கும் போது பூலானை நெருங்கமுடியாது என்பது ஸ்ரீராமுக்கு தெரியும்.

பாபாவுடன் சேர்ந்த பூலான் தங்களைப் பழிவாங்கப் புறப்படலாம் என்ற நினைப்பும் ஸ்ரீராமை கலக்கிக் கொண்டிருந்தது.

தன் குழுவில் உள்ள ஆட்கள்மீது எரிந்து விழுந்து கொண்டிருந்தான். குசுமா தான் அவனை ஆறுதல் படுத்தவேண்டியிருந்தது.

ஸ்ரீராமை நெருங்கிய குசுமா அவன் மார்பை அழுந்த வருடிக் கொடுத்தாள். அப்படியே அவனை இறுகத் தழுவிக் கொண்டு, அவன் கைகளை எடுத்து தன் முதுகைச் சுற்றி போட்டுக்கொண்டாள்.

ஸ்ரீராமுக்கு அந்த அணைப்பு இதமாக இருந்தது. ஆனாலும் பூலானின் நினைப்புக் காரணமாக குசுமாவுடன் ஈடுபாடு கொள்ள முடியாமல் இருந்தது.

குசுமா தன் கால்களால் அவன் கால்களை இறுக்கினாள். கால்களை மேலும் கீழுமாய் அவன் கால்களோடு சேர்த்து அசைத்தாள். ஏனைய சமயங்களில் என்றால் அந்தச் செயலில் கிறங்கிப் போவான் ஸ்ரீராம். இப்போது அவனுக்கு ஆர்வம் இல்லை.

அவன் கைகள் சும்மா ஒப்புக்காக அவள் முதுகில் அலைந்தன. அவளது பின்னெழுச்சிகளில் தரித்து நகர்ந்தன.

குசுமா தன்னை விலக்கிக்கொண்டு, "என்னைப் பிடிக்கவில்லையா?" என்றாள். எத்தனையோ தடவை இப்படிக் கேட்டு சலிக்கவைத்துவிட்டாள்.

"முதலில் பூலானைப் பிடிக்கவேண்டும்" என்றான் ஸ்ரீராம்.

"பூலானில் என்னதான் இருக்கிறது? பூலானாம் பூலான்...." என்று தொடர்ந்து ஒரு மோசமான வார்த்தையை உபயோகித்தாள் குசுமா.

"பூலான் பொன் முட்டையிடும் வாத்து."

"எடுத்து மடியில் வைத்துக்கொள்ளுங்கள் அவள் உங்களுக்கு...." என்று மறுபடியும் ஒரு மோசமான வார்த்தையை கொட்டி உதடு சுழித்தாள்.

"நாளை முதல் பூலானைத் தேடத் தொடங்குகிறோம். கொள்ளையடிப்பதைவிட அதில் இலாபம் அதிகம். பொலிசாரும் எங்களைத் தேடமாட்டார்கள்," என்றான் ஸ்ரீராம்.

(தொடர்ந்து வரும்)

## ஸ்பென்ஸரின் சீற்றம்

டயானாவின் இறுதிச் சடங்கில் டயானாவின் தம்பி சார்லஸ் ஸ்பென்ஸர் ஆற்றிய உரை அரச குடும்பத்தினரை முகம் சுளிக்க வைத்திருந்தது. "டயானா! உன் பிள்ளைகளை சுதந்திரப் பறவைகளாகவே



வளர்ப்போம். போலிச் சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள் என்ற பெயரில் மக்களை விட்டு பிரித்து வைத்திருக்க மாட்டோம். அதற்கு நான் உறுதி தருகிறேன்!" என்றார்.

"டயானா என்ற அற்புத சக்தி உலகெங்கும் பரவ இளவரசி பட்டம் தேவையாக இருக்கவில்லை" என்றும் ஒரு போடு போட்டார்.

தென்னாபிரிக்காவில் வசிக்கும் சார்லஸ் ஸ்பென்ஸர் தன் சகோதரியின் மரணச் சடங்கு முடிந்ததும் அவசர அவசரமாக தென்ஆபிரிக்கா திரும்பினார்.

அங்கு அவருக்கு விவாகரத்து வழக்கு காத்திருக்கிறது. கல்யாணமாகி ஆறு வருடங்கள். நாலு குழந்தைகள். மனைவியிடம் விவாகரத்துக் கேட்டிருக்கிறார். மனைவி விக்டோறியாவும் சம்மதம் கொடுத்துவிட்டார்.

ஸ்பென்ஸரும் காதல் மன்னர்தான். ஆடை அலங்கார நிபுணி சண்டல், மொடல் அழகி ஜோசி பிரெய்ன் என்ற பல காதலிகள் அவருக்கு.

## அங்கும் சாமியார் லீலைகள்!

நம் நாட்டிலும், இந்தியாவிலும்தான் போலிச் சாமியார்களின் லீலைகள் நடப்பதாக நினைப்பது அபத்தம். சர்வதேச அளவில் ஏமாறுகிறவர்களும் இருக்கிறார்கள். அதற்கேற்ப ஏமாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள்.



கிழக்கு இந்தோனிஷியாவில் மாலுக்குமு என்ற ஒரு ஊர். அங்கே அப்துல் வோரே என்ற பெயரில் ஒரு சாமியார் இருந்தார்.

ஆசாமி பார்வைக்கு நல்ல எடுப்பாக இருப்பாராம். பெண்பக்தர்கள் கூட்டம் அலை மோதும். வசியமாகப் பேசி பல பெண்களை கைக்குள் போட்டுக்கொள்வார். பின்னர் என்ன? லீலைகள் அரங்கேற்றம்தான்.

கடந்த பதின்மூன்று வருடங்களாக பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு ஆசாமி அல்வா கொடுத்து வந்திருக்கிறார்.

பல பெண் பக்தர்கள் 'சரி சாமியார்தானே!' என்று விரும்பியே ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் பதின்மூன்று வருடங்களாக ஆசாமி கொட்டமடிக்க முடிந்ததாம். சமீபத்தில்தான் விஷயம் வெளியே தெரிந்திருக்கிறது. பொலிஸ் புகுந்து ஆசாமியை அள்ளிக் கொண்டு போயிருக்கிறது.

வெளியே இருந்து சிஷ்யைகளை எண்ணியவர், இப்போது உள்ளே இருந்து கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறார்.

## வீரப்பனுக்கு மறைமுக உதவி

வீரப்பன் விவகாரத்தில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிமீது பத்திரிகைகள் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளன. பணயக் கைதிகள் கடத்தல், பின்னர் விடுவிப்பு எல்லாமே முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நாடகம் என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்தும் சம்பவங்களை அவை ஆதாரம் காட்டுகின்றன.

கர்நாடக அரசு சற்றுக் கடுமை காட்டியதால் தமிழக அரசு நினைத்ததுபோல வீரப்பனை சரணடையச் செய்ய இயலவில்லை.

தற்போது கர்நாடக அரசு வீரப்பனைத் தேடத் தொடங்கியிருக்கிறது. அதற்காக தமிழக முன்னாள் டி.ஜி.பி. வோல்டர் தேவாரத்தின் உதவியைக் கோரியுள்ளது.

ஆனால் தமிழக அரசு வோல்டர் தேவாரத்துக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்துள்ளது. "வீரப்பன் என்னைச் சுட முயன்றால் நானும் அவனைச் சுடுவேன்!" என்று தேவாரம் கூறியிருந்தார்.

"தேவாரத்தை நான் சுடுவேன்!" என்று வீரப்பன் கூறியதற்கு பதிலாகவே தேவாரம் அவ்வாறு சொல்லியிருந்தார். ஆனால் தமிழக அரசு தேவாரத்தை மிரட்டத் தொடங்கியது. "உங்கள் துப்பாக்கியை ஏன் மீளப்பெறக் கூடாது?" என்று கோரி கடிதம் அனுப்பியது. இதுவும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

"வீரப்பன் சரணடைய மறுத்துவிட்டான்; இனி என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு, "வழக்கம் போல் தேடுதல் தொடரும்!" என்று கருணாநிதி கூறியிருக்கிறார்.

வழக்கம் போல் என்றால் என்ன? வீரப்பனைப் பிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட விசேஷ அதிரடிப் படைமுடக்கப்பட்டுள்ளது. அப்படைக்கு பொறுப்பாக புதிய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அவரால் ஒழுங்காக நடக்கவே முடியாதாம். துடிப்பாக செயற்பட முடியாத



அதிகாரியை நியமித்துள்ளது தமிழக அரசு.

'தற்போதைக்கு வீரப்பனைத் தேடச் செல்ல வேண்டாம்' என்றும் வாய்மூல உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாம். இவையெல்லாம் தமிழக அரசு வீரப்பனை பாதுகாக்க மேற்கொள்ளும் மறைமுக ஏற்பாடுகள் என்று குற்றம் சாட்டப்படுகின்றன.

பத்திரிகைகள் சந்தேகம் எழுப்பத் தொடங்கிவிட்டதால் வீரப்பனைத் தேடும் கண்துடைப்பான நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு உத்தரவிடலாம். ஆனால் அவனை உண்மையாகவே பிடிக்கும் முயற்சிகள் இருக்காது என்று கூறப்படுகிறது.

## விபரீத வீடியோ ஆசை!



நூறு சதவீத கவர்ச்சிக்கு உத்தர வாதமான மேனி. அவர் பெயர் பமீலா அண்டர்சன். 'பேவோச்' தொலைக்காட்சி படத்தின் மூலம் நம்நாட்டிலும் பல்லாயிரம் ஜொள்ளர்களை சேகரித்திருக்கிறார்.

பமீலாவுடன் ஒட்டிக்கொண்டிருப்பவர் ஒரு பாடகர். பெயர் டாமிலீ. அவர் பாட்டில் இவர் மயங்க, இவர் அழகில் அவர் மயங்க காதல் கல்யாணத்தில் முடிந்தது. ஒரு வயதில் ஒரு மகனும் இருக்கிறான்.

இப்போது தம்பதிக்குள் சலசலப்பு. காரணம் ஒரு வீடியோ படப்பிடிப்பு!

பமீலாவுடன் அந்தரங்க நெருக்கமாக இருந்த போது சும்மா ஒரு ஜாலிக்காக தானியங்கி வீடியோ கமராவால் அக் காட்சிகளை சுட்டு வைத்திருந்தார் டாமிலீ. பத்திரமாக வைத்திருந்த அந்த வீடியோ கசட் காணாமல் போய்விட்டது. கணவரின் சட்டைக் கொலரில் பிடிக்காத குறையாக "எங்கே கசட், யாருக்கு விற்றாய்?" என்று பமீலா ஒரு பிடி பிடித்துவிட்டார். விவகாரம் விவாகரத்து வரை போய்விட்டது.

## திருந்திவிட்டாரா சில்வெஸ்டர்

ஹொலிவூட்டின் முரட்டு நடிகரான 'ரம்போ' புகழ் சில்வெஸ்டர் ஸ்ரலோன் இப்பொழுது சற்று மென்மையானவராக மாறிவிட்டார். எல்லாம் அவருக்கு அண்மையில் பிறந்த சொபியாவினால்தான்.

சில்வெஸ்டரின் தாயார் ஜாக்கி. ஒரு பிரசித்திபெற்ற சோதிடர். சில்வெஸ்டர் பிறந்தபின்னர் அவருடைய ஜாதகத்தைக் கணித்த தாயார் ஜாக்கி, தன் மகன் ஒரு புகழ்பெற்ற கலைஞனாகத் திகழ்வான் என்று உறுதியாகக் கூறிவிட்டார். இப் பொழுது தனது பேத்தியின் ஜாதகத்தையும் ஜாக்கி கணித்துக்கொண்டிருக்கிறார். "சோபியா தந்தையைவிடப் பன்மடங்கு பேரும் புகழும் பணமும் சம்பாதிப்பாள்" என்று கூறிவிட்டார்.

சில்வெஸ்டர் ஏற்கனவே சாஷா க்ஸொக் என்பவரை மணந்து இரு வளர்ந்த ஆண் பிள்ளைகளுக்குத் தந்தையாவார். இப்பொழுது கைப்பிடித்திருக்கும் ஜெனிஃபர்தான் தனக்கு ஒரு சிறந்த மனைவியாகவும் சோபியாவுக்கேற்ற நல்ல தாயாகவும் விளங்குகிறாள், என்று தனது நண்பர்களிடம் பெருமையாகக் கூறுகிறார்.



தாயாருடன் சில்வெஸ்டர்

சோபியா பிறக்கும்போதே இருதய நோயுடன் பிறந்திருக்கிறாள். சில்வெஸ்டர் தனது தொழிலையும் சிலமாதங்கள் ஒதுக்கிவிட்டு கண்ணும் கருத்துமாக மருத்துவ வசதிகள் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தாராம். இப்பொழுது குழந்தை சோபியாவுக்கு எந்த நோயும் கிடையாதாம்.

ஹொலிவூட் நடிகைகள் பலர் சில்வெஸ்டர் மீது பல புகார்களை அள்ளிக் கொட்டியிருக்கிறார்கள். கையிலே பிடித்து இழுக்காத குறையாக தங்களை படுக்கைக்கு அழைத்தார் என்கிறார்கள். "ஹொலிவூட்டில் இதெல்லாம் சகஜம்தான். இதற்காக ஏன் அலட்டிக்கொள்கிறார்கள்?" என்று கேட்கிறார்கள் சில்வெஸ்டரின் அனுதாபிகள்.



படிப்பகம்

www.padippakam.com

## இழக்கப்பட்ட வளம்

அன்றும், இன்றும், இனி என்றும் தங்கத்துக்கு நிரந்தர மரியாதைதான். இப் புகைப்படம் 1914ம் ஆண்டு எடுக்கப்பட்டது. அடுக்கப்பட்டிருப்பது தங்கக் கட்டிகள். தங்க வியாபாரிகளின் பாஷையில் சொல்வதானால் 'பிஸ்கெட்டுக்கள்.'

ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதியான அலாஸ்காவில் 'நோம்' என்ற இடத்திலிருந்து இவற்றை கடத்தல்காரர்கள் சுருட்டிக்கொண்டு செல்ல முற்பட்டபோது மாட்டிக்கொண்டனர். மொத்தம் 24 தங்கக் கட்டிகள். செங்கட்டிகள் மாதிரி அலட்சியமாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். இவற்றின் இன்றைய பெறுமதி நாலு மில்லியன் அமெரிக்க டொலர்கள். நம்மூர் பெறுமதிப்படி 24 கோடி ருபாய்கள்.

இந்த தங்கங்கள் விளைந்த அலாஸ்கா முன்னர் சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இருந்தது. ரசியாவை ஆண்ட கொடுங்கோலனான இரண்டாம் ஜார் மன்னன் சில வெகுமதிகளை பெற்றுக் கொண்டு இந்த வளமான பூமியை அமெரிக்காவுக்கு தாரை வார்த்துக் கொடுத்தானாம். கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவதுபோல, மண்ணைப் பறிகொடுத்துவிட்டு பதவி சுகம் தேடியிருக்கிறான் ஜார் மன்னன். பதவி ஆசை எதையும் பறிகொடுக்கச் சம்மதிக்கும்! ■




## தேடுகிறார்கள்! கிடைப்பார்களா?



யாழ்குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்களின் உறவினர்கள் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள். சிறுபொறி பெரும் காட்டுத்தீயாக உருவெடுக்கும் என்பது போல, தற்போது சிறு பொறியாக கிளர்ந்து பரவத்தொடங்கியுள்ளது அவர்கள் போராட்டம்.

யாழ் குடாநட்டில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் சிங்கள, தமிழ் அமைப்புக்கள் சில போராட்டம் நடத்தின. காணாமல்போன தனது மகனின் புகைப்படத்துடன் ஒரு தாயார் அப் போராட்டத்தில் கலந்து கொண்ட காட்சிதான் இது.

எங்கே என் மகன் எங்கே? எங்கே எங்கள் அன்புச் செல்வங்கள் எங்கே? என்ற வாசகங்கள் பதாகைகளில் மட்டுமல்ல, ஒவ்வோர் மனதிலும் எதிரொலிக்கிறது.

தென்னிலங்கைப் பயங்கரவாதத்திற்கு தன் கணவரைப் பறிகொடுத்தவர் ஜனாதிபதி சந்திரிக்கா. இன்று அவரிடம் தொலைந்துபோன தங்கள் பிள்ளைகளை மீட்டுத் தரும்படி கோரிக்கை விடுகிறார்கள் யாழ் அன்னையர். மீட்டுக் கொடுப்பாரா ஜனாதிபதி சந்திரிக்கா?

## தகவல் பெட்டி

## கோடி கொடுக்கும் குடி

புதுமைகள் பரபரப்பாக பேசப்பட்டாலும் பழசுகளுக்கும் மவுசு இருக்கத்தான் செய்கிறது. அதுவும் சாதாரண மவுசு அல்ல, மகா, மகா மவுசு.

படத்திலே கையில் தூக்கிப் பிடித்திருக்கிறார் பாருங்கள் மதுப்புட்டி இதன் விலை என்ன தெரியுமா? சொன்னால் தலை சுற்றும், 5 1/2 இலட்சம் ரூபாய்கள்! என்ன காரணம் தெரியுமா? 150 வருடங்களுக்கு முற்பட்ட மதுப் புட்டி இது. இதே போல 19 ஆயிரம் வைன் மதுப்புட்டிகளை சேகரித்து வைத்திருக்கிறார்கள். அத்தனையையும் இலண்டனில் ஏலம் விடப்போகிறார்கள்.

மொத்த மதுப்புட்டிகளும் 27 கோடி ரூபாய்களுக்கு ஏலம் போகும் என்று மதிப்பிட்டுள்ளனர். அதில் இந்த புட்டி மட்டும் ஐந்தரை இலட்சம் ரூபாய் என்று முன் கூட்டியே நிர்ணயித்துவிட்டனர். கரன்ஸி நோட்டுக்களில் படுத்துத் தூங்கும் பெரும்புள்ளிகள் இவற்றை வாங்க கியூவில் நிற்பார்கள். குடி குடியைக் கெடுக்கும். 150 வருடத்துக்கு முன்னர் யாரோ சிலர் குடித்த குடியின் மிஞ்சிய புட்டிகள் கோடியைக் கொடுக்கின்றன.




## ஆட்டமா பாட்டமா?

தென் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையின் தென்கிழக்கேயுள்ள கென்டானி மாநிலத்தில் உள்ள 'க்ஸோசா' இன மக்களிடம் பழங்காலந்தொட்டு இடம்பெறும் ஒருவகை நடனத்தோற்றம் இது. ஒருவகைப் புல்லினாலான உடையையும் முகம் தலைகளை மறைக்கும் கவசத்தையும் பூண்டுள்ள இவ்விளைஞர்கள் உடல் முழுவதும் களியினைப் பூசிக்கொள்ளுகின்றனர்.

ஆண் பிள்ளைகளுக்கு 'சுன்னத்து' என்ற சடங்கை முடித்ததும் அவர்களை பெற்றார்களிடமிருந்து பிரித்துத் தனியாக மூன்று மாதங்கள் வைத்திருக்கும் மதப் பெரியவர்கள் அவர்களுக்கு உரிய போதனைகளை, அளித்ததன் பின் பெற்றாரிடம் கையளிப்பர். அதற்கு முன்னர் அடையாளம் தெரியாமல் இவ்வாறு மறைத்து நடனமாட வைக்கின்றனர். இப்படம் 1925ம் ஆண்டில் 'கிளிக்' செய்யப்பட்டது. எனினும் இந்தச் சம்பிரதாயச் சடங்கு அவ்வின மக்களிடம் இன்றுவரை நடைமுறையில் உள்ளது. ■





## புதுமையான போராட்டம்

இது ஒரு வித்தியாசமான போராட்டம். மனிதர்களே சொரணையற்றுக் கிடக்கும் இக்காலத்தில் இந்த ஆடுகளுக்கு மட்டும் போராடும் குணம் பொத்துக்கொண்டு வந்திருக்கிறது.

பிரிட்டனில் வன விலங்கு பூங்காவில் ஓநாய்களுக்கு இடம் கொடுத்ததை கண்டித்து பல ஆயிரம் செம்மறி ஆடுகள் ஒன்றுதிரண்டு போராட்டம் நடத்தியுள்ளன. ஆடுகளின் உரிமையாளர்கள் தங்கள் ஆடுகளையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து போராட்டத்தில் குதிக்க வைத்தனர். இலண்டன் நைஸ் நகரில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

ஆண்டுக்கு 2 ஆயிரம் ஆடுகளை ஓநாய்கள் அடித்து விழுங்குகின்றன. எனவே ஆடுகள் தனியாக வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுதான் கோரிக்கை. இந்த புதுமையான ஊர்வலத்தை பலரும் கண்டு பிரமித்தனர். ஆடுகளுக்கு தனியிடம் கொடுப்பதைக் கண்டித்து ஓநாய்கள் போராட்டம் நடத்தினால் என்ன செய்வது? ■



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 24 மித்ரவாசு

# மதுவை நாடிய நடிகையர் திலகம்

## மலருக்கு மலர் தாவிய காதல் மன்னன்

முகப்பில் மந்த்ரா படம்: தேடினேன் | மம்மு... பட...

காதல் மன்னன் ஜெமினி கணேசனும், நடிகை சாவித்திரியும் சிலகாலம் மிக மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தினார்கள். அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

முதன் முதலில் காலில் தங்கக் கொலுசு அணிந்த நடிகை சாவித்திரிதான். தங்கக் கொலுசுடன், மெட்டியையும் தங்கத்தால் செய்து போட்டு காலில் மிதிப்பது நல்லதல்ல என்று பத்மினி உட்பட பல நடிகைகள் கூறினார்கள். சாவித்திரி கேட்கவில்லை. அவர் பிடிவாதம் அப்படி.

ஜெமினி தனக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்று சாவித்திரி விரும்பினார். ஆனால் ஜெமினியோ மூன்று மனைவிகள் இருந்தபோதும், பிற பெண்களுடனும் அந்தரங்க நட்பு வைத்திருந்தார்.

'கல்யாணப் பரிசு' படத்தின் பின்னர் ஜெமினி-சரோஜாதேவி ஜோடி பல படங்களில் நடித்தனர். அதனால் அவர்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டு வெளியேயும் செய்தி பரவியது.

ஒரு நாள் ராகினி ஸ்ருடியோவில் சரோஜாதேவி படப்பிடிப்பில் இருந்தபோது சாவித்திரி காரில் நேராக அங்கு சென்றார்.

சரோஜாதேவியை நெருங்கியதும் 'என்ன ஏது' என்ற விசாரணைகூட இல்லாமல் தன் காலில் அணிந்திருந்த வேலைப்பாடமைந்த ஹை-ஹீல் செருப்பை எடுத்து அதிரடியாக அடித்து விளாசினார்.

சரோஜாதேவி அடிதாங்க முடியாமல் அலறியபடி அங்கும் இங்கும் ஓடினார். ஸ்ருடியோவில் இருந்தவர்கள் அவருக்கு பாதுகாப்பாக வர "ஒழுங்காக இரு, இல்ல தொலைச்சிடுவேன்" என்று எச்சரித்துவிட்டுப் போனார் சாவித்திரி.

நடிகை ராகினி இறந்துபோன சமயம் துக்கம் விசாரிக்கச் சென்றார் சாவித்திரி. அங்கு சரோஜாதேவியும், ஜெமினியும் வந்தனர். இருவரையும் ஒன்றாகப் பார்த்துவிட்ட சாவித்திரி அது துக்கவீடு என்பதையும் மறந்து பாய்ந்து சண்டைபோட ஆரம்பித்துவிட்டார். ராகினியின் சகோதரியான நடிகை பத்மினியும் மற்றவர்களும் மூவரையும் தனித்தனி அறைகளில் அடைத்து வைத்து, பின்னர் ஒவ்வொருவராக வீட்டுக்கு அனுப்பிவைத்தனர்.

### மதுவுக்கு அடிமை

சாவித்திரிக்கு முதலில் பிறந்தது பெண். பெயர் விஜய சாமுண்டீஸ்வரி. இரண்டாவது மகன் சதீஷ். மகன் பிறந்தபின் சாவித்திரி குண்டானார். அதனால் கதாநாயகி வாய்ப்பு வரவில்லை. இரண்டு படங்களை சொந்தமாக தயாரித்தார். இரண்டும் படுதோல்வி.

சாவித்திரிக்கும் நடிகர் சந்திரபாபுவுக்கும் இடையே நட்பு ஏற்பட்டது. சந்திரபாபு மிகச் சிறந்த நடிகர். அதேபோல மோசமான பழக்க வழக்கங்கள் குணங்களை உடையவராகவும் இருந்தார்.

சாவித்திரிக்கு மதுப்பழக்கத்தை ஏற்படுத்தியவர் சந்திரபாபுதான். மது மயக்கத்தில் சாவித்திரி கிறங்கி இருந்த சந்தர்ப்பங்களை தனது பலவீனங்களுக்கு பயன்படுத்திக் கொண்டார் சந்திரபாபு.

நடிக்கின்ற நேரம்போக மற்ற சமயமெல்லாம் போதையிலே இருந்தார் சாவித்திரி. அதனால் அவரைச் சுற்றியிருந்த பணியாட்கள் அவரை ஏமாற்றத் தலைப்பட்டனர். சாவித்திரி வீட்டில் நிறைய வெள்ளிப் பாத்திரங்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றாக பணியாட்களால் களவாடப்பட்டன.

சாவித்திரியின் படங்களில் பணிபுரிந்த ஒரு ஒளிப்பதிவாளரும் அவருடன் நெருங்கிப் பழகி நான்கைந்து இலட்சம் வரை சுருட்டிக் கொண்டார். சாவித்திரி மது மயக்கத்தில் இருந்த போது அவரை தனது தேவைக்கு தவறாகப் பயன்படுத்தியவர்களில் அவரும் ஒருவர்.

### நான்காவது மனைவி

'பூவா தலையா' உட்பட சில படங்களில் ஜெமினியின் ஜோடியாக நடித்தவர் நடிகை ராஜஸ்ரீ. ராஜஸ்ரீயின் அழகில் மயங்கினார் ஜெமினி. இருவரும் அந்தரங்க நெருக்கம் கொண்டனர்.

ஜெமினியும், ராஜஸ்ரீயும் இணைந்து தென்னாபிரிக்காவுக்கு சென்று வந்தனர். 'மாமா, மாமா' என்று ஜெமினியையே சுற்றிக் கொண்டிருப்பார் ராஜஸ்ரீ.

ஆனாலும் சாவித்திரிக்கு பின்னர் அந்த இடத்தை பிடிக்க பலமாக முயன்ற நடிகை ராஜேஸ்வரி. 'மனைவி' படத்தில் ஜெமினியோடு நடித்த ராஜேஸ்வரி, ஜெமினியின் பங்களாவிலேயே தங்கிக் கொண்டார். ஜெமினியின் நாலாவது மனைவி என்ற ஸ்தானத்தை கைப்பற்ற முயன்றார்.

ஆனாலும் ராஜேஸ்வரி விதித்த ஒரு நிபந்தனையால் ஜெமினி அவரைவிட்டு விலகினார். ஜெமினி தன் முதல் மனைவியான பாப்ஜியை விவாகரத்து செய்ய வேண்டும் என்றார் ராஜேஸ்வரி. ஜெமினி முடியாது என்றுவிட்டு விலகிப் போனார்.

### பரிதாப மரணம்

கடன் தொல்லைகளால் அவதிப்பட்ட சாவித்திரி தன் வீட்டை விற்றார். மலையாளப் படமான 'சுழி'யில் படுக்கையறைக் காட்சியில் நடிக்குமளவுக்கு தாழ்ந்துபோனார். சாராயம் குடிக்குமளவுக்கும் சென்றார்.

பெங்களூரில் நடைபெற்ற ஒரு படப்பிடிப்பில் மயங்கிவிழுந்த சாவித்திரி கோமா நிலைக்கு சென்றார். ஒன்றரை ஆண்டுகள் நினைவு திரும்பாமல் மருத்துவ மனையில் இருந்தவர் உயிர்துறந்தார்.

ஜெமினியின் வீட்டில் சாவித்திரியின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. உருக்குலைந்துபோன சாவித்திரியின் உடலைப் பார்த்து கண்ணீர் சிந்தியவர்களில் ஜெமினியின் முதல் மனைவி பாப்ஜி, இரண்டாவது மனைவி புஸ்பவல்லி ஆகியோர் முக்கியமானவர்கள்.

சாவித்திரியைப் பார்த்து கண்ணீர் சிந்திய நடிகை சௌகார் ஜானகி: "சாவித்திரியைப் போல அனுபவித்து வாழ்ந்தவரும் இல்லை, அவரைப்போல வேதனையில் வாடியவர்களும் இல்லை" என்று கூறினார். நிச்சயமான வார்த்தைகள்.



லட்சுமி-சிம்ரான்
படம்: இதுதான் காதல்

## மனம் உடைந்த மது

பத்திரமான அழகையெல்லாம் கச்சிதமாக வெளிப்படுத்தி நடித்தும்கூட மதுபாலாவின் காட்டில் செம வரட்சி. தமிழில் போதிய வாய்ப்பில்லை என்று இந்திக்கு படையெடுத்து அங்கு தன் அஸ்திரங்களை ஏவினார். ஆரம்பத்தில் சில நாயகர்கள் கட்டுண்டார்கள். வாய்ப்பும் வழங்கினார்கள்.

மும்பாய் பட உலகுக்குரிய நெளிவு சுழிவுகளையும் கற்றுத் தேர்ந்தார் மதுபாலா. இருந்தும் சின்ன சின்ன ஆசைகள் நிறைவேறியதே தவிர இந்தியில் நம்பர் வன் இடத்தை ஆக்கிரமிக்கும் பெரிய ஆசை நிறைவேறவில்லை. அதனால் மனம் உடைந்த நிலையில் சக நடிகைகளுக்கு கல் எறிகிறார்.

"அவர்கள் எப்படி வாய்ப்புப் பெறுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். சபலிஸ்டுக்களை அனுசரித்துப் போக எனக்கு தெரியாது. அப்படியொரு பிழைப்புத் தேவையா?" என்கிறார். சீச்சீ அந்தப் பழம் புளிக்கும் என்பது மாதிரித்தானாக்கும்.



ராமராஜன்-தேவயானி
படம்: விவசாயி மகன்

## அமலா போட்ட ...

ஹொலிவுட் நடிகை டெமிமூர் மொட்டை ...
இந்திய சினிமா நடிகைகளும் மொட்டை போட...
சமீபத்தில் எம்.ரி.வி.யில் சன் மாலையில் ...
காட்சியைக் காணமுடிந்தது. பார்வையாள...
வென்று ஒரு மொட்டை. உற்றுப்பார்த்தால்...
கமலின் மனைவி முன்னாள் நடிகை சா...
ருந்தார்.

நடிகை சீதா, நடிகை நளின...
போட்டிருந்தனர். அது தங்கள் க...
செய்து போட்ட மொட்டைகளாம்.

## மினி சினி

* நடிகர் திலகம்-மோகன்லால் இணைந்து நடித்த 'யாத்ராமொழி' என்ற மலையாளப்படம் தயாரித்து முடிவடைந்தும் ஒரு வருடமாக விற்பனையாகாமல் இருந்தது. அண்மையில் இப்படம் வெளியாகி எதிர்பார்த்ததைவிட வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

* ஈரோடு சௌந்தர் கதை எழுதி, முதன் முறையாக இயக்கி வரும் 'சிம்மராசி' படத்தில் பிரகாஷ்ராஜ் இரட்டைவேடத்தில் நடிப்பது தெரிந்த செய்தி. இதில் கதாநாயகியாக நடிப்பவர் இந்து என்பது புதிய செய்தி.

* ராம்கோபால் வர்மா தயாரிக்க, ஷாருக்கான்-மனிஷா கொய்ராலா ஜோடியாக நடிக்க, மணிரத்னம் இயக்கும் இந்திப்படத்திற்கு 'லடாக் ஏக் கஹானி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* கன்னடத்தில் 'ஜாக்கி சான்' என்ற பெயரில் சண்டைப் படமொன்று தயாராகி வருகிறது. இதேபோல் மலையாளத்தில் 'சார்ளி சாப்ளின்' என்ற பெயரில் நகைச்சுவைப் படம் தயாராகவுள்ளது. இப்படத்தில் அஞ்சு அரவிந்த் கதாநாயகியாக நடிக்கிறார்.

* 'ஜானகிராமன்' படத்தைத் தயாரித்து வரும் கே.பி.ஃபிலிம்ஸ் பாலு அடுத்து சத்யராஜ் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இந்தப் படத்தை கோயமுத்தூர் மாப்ளே', 'டாட்டா-பிர்லா' போன்ற படங்களை இயக்கிய சி.ரங்கநாதன் இயக்குகிறார்.

* 'காதல் தேசம் படத்தை இயக்கிய கதிர் ஒரு சிறிய இடைவெளிக்குப் பின் அடுத்த படத்தை இயக்கவுள்ளார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கும் இப்படத்தைத் தயாரிப்பவர் 'இந்தியன்' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்தினம்.

* 'மின்சாரக் கனவு', 'வி.ஐ.பி' ஆகிய இரு படங்களும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து தமிழில் பிஸியாக நடித்து வரும் பிரபுதேவா, முதன் முறையாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தை பிரபல தெலுங்கு இயக்குநர் ராகவேந்திரராவ் இயக்கவுள்ளார்.

* பஞ்சு அருணாசலம் தயாரிக்க, கேயார் இயக்கத்தில் பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்கும் 'விகடகவி' படம், தற்போது 'சபாஷ் பாண்டியா' என்று பெயர் மாற்றம் அடைந்துள்ளது.

* விஜயசாந்தி கதாநாயகியாக நடித்த தெலுங்குப்படமொன்று 'போக்கிரிராணி' என்ற பெயரில் தமிழுக்கு மொழிமாற்றப்பட்டு வருகிறது. 'பாட்ஷா' படத்தில் ரஜினியின் தம்பியாக நடித்த சசிகுமார் இப்படத்தில் விஜயசாந்திக்கு ஜோடியாக நடிக்கிறார்.

* 'ராஜா சின்ன ரோஜா' படத்தில் அறிமுகமான ராகவியை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? தமிழில் படவாய்ப்புக்கள் எதுவுமின்றி சின்னத்திரைகளில் நடித்து வரும் ராகவி, 'சாபித்ரி' என்ற ஓரிய மொழிப் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## மூன்று ஜோடிகள்

பிரபு, மதுபாலா நடித்த 'பாஞ்சாலங்குறிச்சி' படத்தை இயக்கியவர் சீமான். அவரது இயக்கத்தில் பிரபு புதிதாக நடிக்கும் படம் 'இனியவளே'.

பிரபுவுக்கு மூன்று ஜோடிகள். காலமெல்லாம் காதல் வாழ்க, 'நேருக்கு நேர்' ஆகிய படங்களில் நடித்துள்ள கவுசல்யா, 'தேவதை' பட நாயகி கீர்த்திரெட்டி ஆகியோர் பிரபுவின் ஜோடிகள். மூன்றாவது ஜோடி யார் என்பது முடிவாகவில்லை. அநேகமாக மஞ்சுவாரியார் நடிக்கக் கூடும். இவர் மலையாள நடிகை. இசை: தேவா, பாடல்கள்: அறிவுமதி, ஒளிப்பதிவு: இளவரசு.



குஷ்பூ
படம்: கலர் கனவுகள்



படிப்பகம்

...ட்டி
...ம்: அரசியல் / விஜய்
வந்தது \\ படம்: நினைத்தேன் வந்தாய்



# சினிவிசிட்

## மற்றொரு தழுவல்

ஆங்கிலப்படங்களின்மேல் கமலுக்கு காதல் என்றால் காதல். அப்படியொரு காதல். வெற்றி பெற்ற ஹொலிவுட் படக் கதைகளை தமிழுக்கு ஏற்ப தட்டி, நிமிர்த்தி உருப்படியாக்கிவிடுவது கமலுக்கு கைவந்த கலை. அதனை கமல் மறைக்காமல் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் கமல், பிரபுதேவா, ரம்பா, சௌந்தர்யா நடிக்கும் படம் காதலா காதலா. இப் படம் 'டு மச்' என்ற ஆங்கிலப் படத்தின் தழுவல். முழுக்க, முழுக்க ரசிகர்களின் வயிற்றை குலுங்க வைத்து பதம் பார்க்கப்போகிறார்கள். அந்தளவுக்கு நகைச்சுவையாம்.

## முடியவே முடியாது

"முத்தமா?" என்று கேட்டுவிட்டு குமட்டியதுபோல பாவனை செய்து காட்டுகிறார் பிரியாராமன். எத்தனை இலட்சம் கொட்டிக் கொடுத்தாலும் முத்தக் காட்சியில் நடிக்கவே மாட்டேன் என்கிறார்.

திரையில் சாதுவாக நடிக்க விரும்பும் பிரியாராமன் திரைக்குப் பின்னால் ஒருவரை தீவிரமாக லவ்வுகிறாராம். விரைவில் திருமணச் செய்தி வரும் என்று தகவல்.

'சூரியவம்சம்' படத்தின் வெற்றியால் சில புதிய தமிழ்ப்பட வாய்ப்புக்கள் தேடிச் சென்றுள்ளனவாம்.

## தாவணிக்கு லீவு விட்டாச்சு

சூர்யா கதாநாயகனாக நடிக்கும் படம் 'காதலே நிம்மதி'யில் புதுமுகம் ஒருவர் கதாநாயகியாக நடிக்கப்போகிறார்.

இப்படத்திற்காக புதுப்பாடகி ஒருவர் பாடிய பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது. "இந்த தேவதைக்கு நல்ல தேதி வந்தாச்சு. இது தாவணிக்கு இப்ப லீவு விட்டாச்சு... அ..அ..அக்கா.. ஆரம்பமே படு சூப்பரக்கா.. என்று தொடர்கிறது பாடல். இந்தப் பாடலை எழுதியிருப்பவர் பழனி பாரதி.

பாடலை பாடியிருக்கும் புதுமுகம் யார் தெரியுமா? இசையமைப்பாளர் தேவாவின் மகள் சங்கீதா. மகள் பாட தந்தை இசையமைத்திருக்கிறார். படு சூப்பரப்பா!



பிரகாஷ்ராஜ்–நீனா
படம்: விடுக்கதை

## காதோடு சொல்லுகிறோம்

**நவுதம** நடிகைக்கு விரைவில் திருமணம் நடக்கப்போகிறது. ஜனவரியில் கெட்டி மேளச் சத்தம் ஒலிக்குமாம். மாப்பிள்ளை பிரபல தொழிலதிபர். பல ஆண்டுகளாகவே 'நட்பு' இருந்ததாம். இந்தி நடிகர் ஒருவருடனும், தமிழில் மூன்றெழுத்தால் சுருக்கமாக அழைக்கப்படும் நடிகருடனும் நடிகைக்கு நெருக்கம் அதிகமானதால், 'நட்பு' தடைப்பட்டதாம். இப்போது மறுபடி தொடர்கிறது. திருமணத்தில் முடியப்போகிறது.

**இன்று** 'ரன்'னிங்கில் முன்னணியில் இருக்கும் 'சிம்ம' நடிகை என்றால் தயாரிப்பாளர்கள் அவர் கேட்கும் சம்பளத்தை கொடுக்க தயாராக இருக்கிறார்களாம். நடிகை நடிப்போடு நிறுத்திக் கொள்ளாமல் எல்லாவித அனுசரிப்புக்கும் டபுள் ஒ.கே சொல்வதுதான் காரணமாம்.

'பூ'நடிகையின் காதலரான சுந்தரமான இயக்குநர் 'ரம்ப' நடிகையை வைத்து புதிய படம் ஒன்றை இயக்குகிறார். 'ரம்ப' நடிகையுடன் சுந்தரமானவரின் ஒட்டுதலால் பூ நடிகை பூகம்பாகி பின்னர் சமரசமானார். இப்போது புதிய படத்திலும் 'ரம்ப' நடிகை நடிப்பதால் 'பூ நடிகைக்கு சந்தேகம் வந்துவிட்டது. அதனால் படத்தின் நிர்வாக வேலைகளை கவனிக்கும் பொறுப்பை தன்னிடம் தருமாறு அடம்பிடித்தாராம். சுந்தரமானவரும் அப்படியே செய்திருக்கிறார். நிர்வாகம் என்ற பெயரில் படப்பிடிப்புக்குச் சென்று காதலரைக் கண்காணிக்கிறார் பூ நடிகை. அதனால் பூ நடிகைக்கு தெரியாமல் படப்பிடிப்புக்கு வெளியேதான் 'ரம்ப' நடிகையை சந்திக்கிறார் சுந்தரர். பாவம் பூ நடிகை, தன் கண்காணிப்பில் காதலர் பெட்டிப் பாம்பாகிவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்.

சமூக சேவை புகழ் மூன்றெழுத்து 'வதி' மீது 'காதல் கோட்டை' நாயகி பயங்கரக் கடுப்பில் இருக்கிறார். ஒரு செடியின் பெயர் கொண்ட படத்தில் இரு நடிகைகளும் சேர்ந்து நடித்தனர். அதில் 'காதல் கோட்டை' நாயகிக்கு கவர்ச்சி வேடம். அந்தக் கவர்ச்சியில் 'கா' நடிகர் மயங்கிவிட்டார். தன் ஆஸ்தான காதலரான 'கா' நடிகரை மயக்கியதால்தான் மூன்றெழுத்து நடிகைக்கு கெட்ட கோபம். அப்படத்தின் பின்னர் 'கா' நடிகருடன் 'காதல்கோட்டை' நாயகிக்கு ஒரு படம் ஒப்பந்தமானது. மூன்றெழுத்து நாயகி 'கா' நடிகரை மிரட்டியதால் அந்த வாய்ப்பு பறிக்கப்பட்டதாம். சமூக சேவக நடிகை இன்னொரு நடிகையின் வயிற்றில் அடிக்கலாமா?

...ட்டை
...தாலும் அடித்தார்,
...தொடங்கிவிட்டார்கள்.
...பர் விருது வழங்கும்
...ரிசையில் மினு மினு
... அமலா. ஏற்கனவே
...ம் மொட்டை அடித்தி

...கியோரும் மொட்டை
...களுக்காக வேண்டுதல்

"கடைவீதிக்கும்
இடை அழகைச் சொல்லாதே
கனிந்திருக்கும்
கனி அழகை சொல்லாதே
படை எடுக்கும்
பருவம் பற்றி
சொல்லாதே!
பார்த்ததெல்லாம்
பார்த்தபடி
சொல்லாதே!"



சுவாதி
படம்: சுந்தரபாண்டியன்



மதுபாலா

## மாட்டிக் கொண்டார் அஜித்

தொழிலாளர்களே என் மூச்சு என்று சொல்லிக் கொண்டிருந்த அஜித் குமார், ஒரே தாவாகத் தாவி இயக்குநர்கள் பக்கம் சென்றுவிட்டார்.

"வாயை வைத்துக் கொண்டு சும்மா இருங்கள். உபயோகம் இல்லாமல் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டாதீர்கள்." என்று நடிகை ஹீரா ஆலோசனை சொன்னாராம். அப்படியிருந்தும் அவர் வாய் சும்மா இருக்கவில்லை. இயக்குநர்களை ஒரு பிடிபிடித்தார். பேட்டிகள் கொடுத்தார். வெறுப்பாகிவிட்ட இயக்குநர்கள் கொடுத்த முற்பணத்தையெல்லாம் திருப்பிக் கேட்டனர். கிட்டத்தட்ட 60 இலட்சம்.

ஹீரா, மகேஸ்வரி என்று பலருடன் சுற்றியதில் கையில் உள்ளதெல்லாம் கரைத்துவிட்டாராம். இயக்குநர்கள் நெருக்கியதும் பயந்து போனார். மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவர்கள் பக்கம் சேர்ந்தார். அப்படியிருந்தும் கூட பல இயக்குநர்கள் அஜித்மீது கோபம் மாறாமல்தான் இருக்கிறார்கள்.

'மழை வரப்போகுது' படத்தில் இருந்து அஜித்குமாரை தூக்கிவிட்டார் தயாரிப்பாளர் ஹென்றி. "மன்னிப்புக் கேட்டால் பேசியது எல்லாம் மறந்து போயிடுமா? அந்த வார்த்தைகள் ஈரம் காயாமல் அப்படியே இருக்கின்றன. அஜித்தை மன்னிக்கவே மாட்டேன்" என்று கூறியிருக்கிறார் ஹென்றி.

ஹீராவின் ஆலோசனையைக் கேட்டு வாயை பயன்படுத்தியிருந்தால் இந்த தொல்லைகள் வந்திருக்குமா?

## ஒரே நேரத்தில் இரண்டு கமல்

'அவ்வை சண்முகி' படத்தை இந்தியில் 'ஸ்திரி 420' என்ற பெயரில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சுரிதார் போட்ட மாமியாக நடிக்கும் எண்ணத்தை கைவிட்டு, மகாராஷ்டிர மாமி போல நடிக்கிறார் கமல். பின்புறம் சேலையின் ஒரு தலைப்பை செருகிக்கொண்டு, பஞ்சகச்சம் கட்டுவது மாதிரி கட்டிக் கொண்டு நடிக்கிறார்.

'ஸ்திரி 420' படப்பிடிப்பு சென்னையில் நடந்து கொண்டிருக்கிறது. கமல் மருதநாயகம் படப்பிடிப்புக்காக ராஜஸ்தான் மாநில தலைநகரான ஜெயப்பூரில் தங்கியிருக்கிறார். அதனால் 'ஸ்திரி 420' படத்தில் கமல் நடிக்க வேண்டிய சில காட்சிகளில் அவரது 'டூப்' ஒருவர் நடித்துக் கொண்டிருக்கிறார். படத்தின் இயக்குநரும் கமல்தான். கமல் இல்லாததால் கமலின் சார்பாக இன்னொருவர் தான் சில காட்சிகளை இயக்கி முடித்துள்ளாராம்.

சினிமாவில் வருவதுபோலவே ஒரே நேரத்தில் இரண்டு படப்பிடிப்புக்களில் கலந்து கொண்டிருக்கிறார் கமல். ஒன்று ஒரிஜனல் கமல். இன்னொருவர் 'டூப்' கமல்.

## சத்யராஜ்—சிம்ரான்

சிம்ரானின் அழகு சத்யராஜுக்கும் பிடித்துவிட்டது. சிம்ரானுடன் போனில் தொடர்பு கொண்டு "என்னம்மா அசத்துறியே, என்னோடு நடிக்கிறியா?" என்றாராம். "கரும்பு தின்ன கசக்குமா சார்?" என்றாராம் சிம்ரான். அசந்துதான் போனார் சத்யராஜ்.

இப்போது கலைமணி கதை வசனம் எழுதும் படத்தில் சத்யராஜ் ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளார் சிம்ரான். இன்னொரு ஜோடி மீனா. படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டவில்லை.

www.padippakam.com

# தாயாக விரும்பும் பெண்களுக்கு

## கர்ப்ப காலத்தில் கவனிக்க வேண்டியவை

கர்ப்பத்திற்கு முன்பான பாதுகாப்பு என்பது திருமணமான ஒவ்வொரு பெண்ணும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு கட்டாய விஷயம். பொதுவாகப் பெண்கள் தங்களது மாதவிலக்கு சுழற்சியின் பன்னிரெண்டாவது நாள் முதல் இருபதாம் நாளுக்குள் கர்ப்பம் தரிக்கிறார்கள். ஆனால் அடுத்த முறை மாதவிலக்கு தள்ளிப்போன பிறகே அதாவது கரு உண்டான சுமார் பன்னிரெண்டு நாட்களுக்குப் பிறகே இது உறுதி செய்யப்படுகிறது. கர்ப்பத்தை எதிர்நோக்கும் பெண்கள் இந்தக் காலகட்டத்தை மிக மிக எச்சரிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டியது அவசியம். மருத்துவ ஆலோசனையின்றி எடுத்துக்கொள்ளப்படும் மருந்துகள், எக்ஸ்-ரே போன்றவை கருவைத் தாக்கக் கூடும்.



*** கர்ப்பத்திற்கு முன்பான பாதுகாப்பைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய பெண்கள்:**

கர்ப்பம் தரிப்பதில் ஏற்கனவே சிக்கல்களைச் சந்தித்த பெண்களும், கருச்சிதைவு, கர்ப்பத்தின்போது இரத்தப்போக்கு, குறைந்த எடையுள்ள குழந்தையைப் பிரசவித்தல், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற பிரச்சனைகளைச் சந்தித்த பெண்களும், அடுத்த முறை கர்ப்பம் தரிக்கும் போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். தவிர நீரிழிவு நோய், வலிப்பு நோய், காசநோய், ஹிஸ்டீரியா போன்றவற்றிற்கு சிகிச்சை மேற்கொண்டு வரும் பெண்களும் கர்ப்பத்திற்கு முன்பான பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

*** தவிர்க்க வேண்டிய மருந்துகள்:**

குழந்தை பெற்றுக் கொள்வது என முடிவெடுத்துவிட்ட பிறகு, தலைவலி, காய்ச்சல் என சாதாரண உடல் உபாதைகளுக்கு மருந்து, மாத்திரைகள் உட்கொள்வதில் கூட பெண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மருத்துவரிடம் சிகிச்சை மேற்கொள்ளும் போது கர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விஷயத்தை இவர்கள் தெரிவித்துவிட வேண்டும்.

*** கருத்தடை மாத்திரைகளை நிறுத்தும் போது:**

கருத்தடை மாத்திரைகள் உடலின் ஹோர்மோன்களில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவை. தற்காலிகமாகக் கர்ப்பத்தைத் தள்ளிப்போட, இம்மாத்திரைகளை உட்கொண்டிருக்கும் பெண்கள் இவற்றை நிறுத்தியதுமே கருத்தரிக்கலாம். சில பெண்களது உடல் நலத்தைப் பொறுத்து, மாத்திரைகளை நிறுத்தி அவர்களது உடல் சகஜநிலைக்குத் திரும்பும்வரை கரு உண்டாவதில் தாமதம் ஏற்படலாம். எனவே குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பும் பெண்கள், ஆறு மாதங்களுக்கு முன்பிலிருந்தே கருத்தடை மாத்திரைகளை நிறுத்தி விடும்படியோ, அல்லது வேறுவிதமான தற்காலிக கருத்தடை முறைகளை பின்பற்றும்படியோ மருத்துவர்களால் அறிவுறுத்தப்படுவார்கள்.

*** உணவு:**

கர்ப்பத்தை எதிர்நோக்கும் பெண்கள் முதலில் நல்ல சத்துள்ள ஆகாரங்களை உண்ண ஆரம்பிக்க வேண்டும். புரதம் நிறைந்துள்ள பால், முட்டை, மீன், பருப்பு வகைகள், பட்டாணி போன்றவற்றையும் கோதுமை உணவுகள், பச்சைக்காய்கறிகள் போன்றவற்றையும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். கொழுப்புச் சத்துள்ள உணவுகளையும், எண்ணெய்ப் பதார்த்தங்களையும் தவிர்த்து விடுதல் நல்லது. குடிதண்ணீரைச் சுமார் 20 நிமிடங்களுக்கு நன்றாகக் கொதிக்க வைத்து வடிகட்டி, ஆறவைத்துப் பருகுவது பாதுகாப்பானது.

சத்துள்ள உணவை உட்கொள்ளும் பெண்களுக்கு தனியே விட்டமின் மற்றும் புரதச் சத்துக்கள் தேவைப்படாது. ஆனால் சரியான நேரத்திற்குச் சரியான உணவைச் சாப்பிட முடியாத பெண்களும், கிடைத்ததைக் கொறிக்கும் பழக்கமுள்ள பெண்களும் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் விட்டமின் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டியது அவசியம்.

*** பிற எச்சரிக்கைகள்:**

- கர்ப்பம் தரிப்பதற்கு முன் ஒவ்வொரு பெண்ணும் அதுவரைத் தன்னைத் தாக்கியுள்ள நோய்களையும், அதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அல்லது தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைகளையும் பட்டியலிட வேண்டும். தனக்கோ, தன் கணவருக்கோ பால்வினை தொடர்பான நோய்கள் ஏதேனும் இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.
- கர்ப்பம் தாங்க உடல் ஆரோக்கியம் எந்த அளவு முக்கியமோ அதைவிட மன ஆரோக்கியம் முக்கியம். வீட்டிலோ, வெளியிடங்களிலோ சதா சர்ச்சைகளுடன் ஏதேனும் பிரச்சனைகளிலும், டென்ஷன்களிலும் உழன்று கொண்டிருக்கும் பெண்கள் கர்ப்பம் தரிப்பதற்கு முன், மேற்கூறிய விஷயங்களுக்கு விடை கொடுக்க வேண்டும். ஆரோக்கியமான குழந்தையைப் பெற தேக திடமும், மன அமைதியும் அவசியம்.
- ஆர்.எச் நெகட்டிவ் (RH Negative) இரத்தப் பிரிவைச் சேர்ந்த பெண்கள் எனில் மருத்துவரிடம் பிரத்யேக ஆலோசனை பெறவேண்டியது அவசியம்.
- இரத்தத்தில் உள்ள ஈமோகுளோபினின் அளவைச் சரிபார்க்க வேண்டும். இரத்தசோகையால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தால் மருத்துவரது ஆலோசனையின் பெயரில் இரும்புச்சத்து, விட்டமின் 'சி', 'பி-12', போலிக் அமிலம் போன்றவற்றிற்காக மருந்து, மாத்திரைகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.
- மாதம் ஒருமுறை சிறுநீர்ப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.
- கர்ப்பத்தை எதிர்நோக்கும் எல்லாப் பெண்களுமே கல்லீரல் வீக்க நோய்க்கான அவுஸ்திரேலியன் அன்டிஜென், மேக நோய்க்கான வி.ரி.ஆர்.எல்., எய்ட்ஸ் நோய்க்கான எலிஸா மற்றும் டோர்ச் சோதனைகளை அவசியம் மேற்கொள்ளவேண்டும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CM

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-10-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

**புவனா**

பக்கிங்ஹாம் அரண்மனையில் அடைந்து கிடக்காமல் வெளியே வந்த டயானா சமூக சேவைகளில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார்.

நைஜீரியா நாட்டுக்கு சென்ற டயானா தொழுநோயாளர் விடுதி ஒன்றுக்கு விஜயம் செய்தார்.



தொழுநோயாளர்களின் கட்டிலில் அமர்ந்து அவர்களுடன் உரையாடிய டயானா, அவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளை ஆர்வத்துடன் பெற்றுச் சாப்பிட்டார்.

இச் செய்திகள் பத்திரிகைகளில் முக்கிய இடம்பிடித்துக் கொண்டன. பிரிட்டிஷ் மக்கள் வியந்து போனார்கள். அரச குடும்பம் மட்டும் கசந்து போனது.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் மக்களை நெருங்குவதே அபூர்வம். பிரிட்டிஷ் மகாராணி ஏதாவது ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் சாதாரணமானவர்கள் அவரை நெருங்குவதோ, வலியச் சென்று பேசுவதோ கூட குற்றம்போலக் கருதப்பட்டது.

மகாராணியாக விரும்பிச் சென்று யாரிடமாவது பேச்சுக் கொடுத்தால்கூட, அவர் என்ன கேட்கிறாரோ, அதற்கு மட்டும் பவ்வியமாக நின்று பதில் சொல்ல வேண்டும். மேற்கொண்டு எதுவும் பேசுவது மரபல்ல.

மக்களைவிட்டு விலகியே இருக்கப் பழக்கப்பட்ட அரச குடும்ப மரபுகளை டயானா உடைக்கத் தொடங்கியதை மக்கள் வரவேற்றனர். அரச குடும்பம் மட்டும் வெறுப்புற்றது.

சிறுவர் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாகப் பணியாற்றிய அனுபவம் டயானாவுக்கு சமூக சேவைகளில் ஈடுபட கைகொடுத்தது.

தன் மனதில் வீசிய புயலை பொதுச் சேவைகளில் ஈடுபடுவதன்மூலம் தணிக்க முயன்றார் இளவரசி.

## குதிரையேற்றமும் – மனதில் ஏற்றமும்

ஆனால் பொதுச்சேவை முடிந்து பக்கிங்ஹாம் அரண்மனைக்கு திரும்பியதும் மறுபடி நரகவேதனை ஆரம்பமாகிவிடும்.

மகாராணியும் மருமகளுடன் முகம் கொடுத்துப் பேசுவதை தவிர்த்தே வந்தார். பொதுவாக மருமகளுடன் பேசுவதிலும் மரபு பார்ப்பவர் மகாராணி. சரளமாக மனம்விட்டு பேசுவது என்ற வாடிக்கையே கிடையாது.

புன்னகைகளும்கூட உத்தியோகபூர்வமானதாகவே இருக்கும். அப்படியே பழக்கப்பட்டுவிட்ட குடும்பம் அது.

பக்கிங்ஹாம் மாளிகைக்குள் தனிமை டயானாவை வாட்டியது. சாள்ஸ்சுக்கு டயானாவின் இரவுகளும், இளமையும் கரைவது பற்றிக் கவலையில்லை.

அரண்மனைக்குள் ஒன்றாக இருந்தாலும் அந்தப்புரத்தில் தனித்தனியாகவே இருந்தனர்.

மான்வேட்டை, முயல் வேட்டை என்று துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிடுவார் சாள்ஸ். மாலையில் போனார் என்றால் மறுநாள்தான் திரும்பிவருவார்.

முயல் வேட்டைக்கு போனாரா வேறு வேட்டைக்குப் போனாரா என்பது சாள்ஸ் சொன்னால்தானே டயானாவுக்குத் தெரியும்.

அரச குடும்பத்தின் அலட்சியமும், இளவரசர் சாள்ஸ்சின் எடுத்தெறியும் போக்கும் டயானா மனதில் வன்மத்தை ஏற்படுத்தின.

### சமூகசேவையில் ஈடுபட்டு மனதை தேற்ற முயன்றார். ஆனாலும் – தனிமை வாட்டியது!

மிதிபட மிதிபட புல்கூடப் புலியாகும் என்னும்போது, டயானா உயிருள்ள பெண் எத்தனை நாள்தான் ஓரத்தில் குப்பையாக வீசப்பட்டு கிடப்பதை சகித்துக்கொண்டிருப்பார்?

### சொன்னதும், நாடியதும்

அடிக்கடி வெளியே உலவத் தொடங்கினார் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாமல், பொது நிகழ்ச்சிகளிலும் சாள்ஸ் இல்லாமலேயே தனியாகக் கலந்து கொள்ள ஆரம்பித்தார்.

டயானா இப்படி தனியாகச் சென்று திரும்பிவரும்போது மகாராணியின் முகம் சுருங்கிப்போய் இருக்குமாம். மகாராணியின் முகம் போகும் போக்கைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொள்வாராம் டயானா.

தன்னை அலட்சியம் செய்தால் அதற்காக அரசகுடும்பம் ஒருநாள் வருத்தப்பட வேண்டியிருக்கும் என்பதற்கு டயானா கொடுத்த முன்னெச்சரிக்கைகளை அரச குடும்பத்தினர் புறக்கணித்தனர்.

மற்றொரு அதிர்ச்சியைக் கொடுத்தார் டயானா. பத்திரிகைகளில் அச்செய்தியை படித்த மகாராணி அப்போதாவது உஷாராகியிருக்கலாம்.

பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட டயானாவிடம், "நீங்கள் ஏன் தனியாக கலந்து கொள்கிறீர்கள்? இளவரசரோடு தகராறா?" என்று கேட்டார்கள்.

டயானா புன்னகைத்தபடியே: "நாங்கள் தனித்தனியாகப் பிரிந்துவிட்டோம். .என்று பலர் சொல்கிறார்கள். அடுத்ததாக எனக்கு ஒரு அந்தரங்கக் காதலன் இருப்பதாக சொன்னாலும் சொல்வார்கள்." என்றார்.



ஜேம்ஸ்ஹெவிட்

ஜோக்காகச் சொன்னாலும் டயானாவின் எச்சரிக்கையாகவும் அதனை எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டனர் அரசகுடும்பத்தினர்.

டயானாமீது பிரபுக்கள், பெரும் செல்வந்தர்கள் போன்றோர் ஒரு கண் வைத்திருந்தனர். டயானா எந்த விருந்துக்கு சென்றாலும் வலியச் சென்று விழுந்து விழுந்து உபசரிப்பார்கள்.

தங்கள் தகுதியையும் மறந்து டயானாவின் உடலில் தங்கள் கரம் பட்டு விடாதா என்று ஏங்குவர் நெருங்கிச் நெருங்கி சென்று கொண்டிருப்பார்கள்.

டயானா தனியாகச் செல்லும்போது மட்டுமல்ல, இளவரசர் சாள்ஸ்சுடன் செல்லும்போதுகூட டயானாவுக்குத்தான் உபசரிப்பு பலமாக இருக்கும்.

ஒருமுறை டயானாவும் சாள்ஸ்சும் கலந்து கொண்ட விருந்தொன்றில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றீகன் உட்பட பல பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

ஆனால் எல்லோர் விழிகளும் ஏனைய பிரபலங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு டயானாவையே மொய்த்துக் கொண்டிருந்தன.

அந்த விருந்தில் கலந்துகொண்டவர்களில் பிரபல ஹொலிவூட் நடிகர் ஜோன் ரவெல்ராவும் ஒருவர். அசப்பில் இன்றைய அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் போலவே இருப்பார். (தற்போது ஒரு படத்தில் கிளின்ரன்போல நடித்துவருகிறார்)

ஜோன் ரவெல்ரா டயானாவை தன்னுடன் நடனமாட வருமாறு அழைத்தார். டயானாவும் புன்னகையுடன் சம்மதித்தார். பல கண்கள் பொறாமையோடு அக் காட்சியைக் கவனித்துக் கொண்டிருந்தன.

இளவரசர் சாள்ஸ் தன் முகத்தில் எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் அவர்கள் நடனமாடிய காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார்.

டயானாவின் இடையை தழுவியபடியிருந்த ஜோன் ரவெல்ராவின் விரல்கள் யாருமறியாமல் சின்ன சின்ன சில்மிஷங்கள் செய்தன.

4



ஜோன் ரவெல்ராவுடன் நடனம்

டயானா அதனை ரசித்தாரா, ஒரு பொருட்டாக நினைக்கவில்லையா என்பது தெரியவில்லை. எனினும் தன் இளவரசர் சாள்ஸ்சால் அலட்சியம் செய்யப்படும் தன் அழகு பிற ஆடவர்களை மயக்கிக் கொண்டிருக்கும் விந்தையை டயானா ரசிக்கவே செய்தார் என்று டயானாவின் தோழி ஒருவர் நினைவு கூருகிறார்.

### குதிரைப் பயிற்சி

டயானாவின் வாழ்வில் பல ஆண் நண்பர்கள் குறுக்கிட்டபோதும், டயானாவின் மனதில் ஆழமான இடம் பிடித்தவர்களில் ஒருவர் ஜேம்ஸ் ஹெவிட்.

அப்போது குதிரைப் படைவீரராக இருந்த ஜேம்ஸ் ஹெவிட் பெண்களைக் கவரும் தோற்றமுடையவர். இளமையானவர்.

அரண்மனைப் பெண்களும், ஆண்களும் விரும்பிப் பழகுவது குதிரைச் சவாரி. அவ்வாறு குதிரைச் சவாரி பழக்குவதற்கு பெரும்பாலும் வயதானவர்களே நியமிக்கப்படுவார்கள். அரண்மனைப் பெண்கள் சபலப்பட்டுவிடக்கூடாது என்ற முன் ஜாக்கிரதைதான் அதற்கு காரணம்.

அந்த வழக்கத்துக்கு மாறாக டயானாவுக்கு குதிரைப் பயிற்சி கொடுக்க வந்தார் இளைஞரான ஜேம்ஸ் ஹெவிட்.

டயானா ஒருமுறை குதிரையில் இருந்து தவறி விழப்போனபோது அவரை தனது இரு கைகளாலும் பூப்போல தாங்கிக் கொண்டார் ஹெவிட்.

டயானாவின் மென்மையான உடல் ஹெவிட்டை மயக்கிவிட்டது. அதற்கு முன்னரே பெண்கள் விடயத்தில் ஹெவிட் பயங்கரமான சபலப் பேர்வழி.

தனிமையில் வாடியிருந்த டயானாவுக்கும் ஹெவிட்டின் வலிய கரங்களின் அணைப்பு ஆறுதலாக இருந்தது.

அச் சம்பவத்தின் பின்னர் டயானா–ஹெவிட் நெருக்கம் அதிகமானது.

குதிரையேற்றம் பழக்க வந்த ஹெவிட் டயானாவின் மனதில் ஏறி அமர்ந்து கொண்டார்.

அரண்மனைக்குள் தொடங்கிய சந்திப்பு அரண்மனைக்கு வெளியே இரகசிய இடங்களை நோக்கிச் சென்றது.

அரண்மனைக்கு வெளியே இன்ப உலகம் காத்திருக்கிறது என்று டயானாவுக்கு நம்பிக்கை ஊட்டத் தொடங்கினார் ஹெவிட்.

டயானா ஹெவிட்டை மலை போல நம்பத்தொடங்கினார். ஆனால் ஹெவிட்டின் மனதில் வேறொரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

திருமதி புனிதவதி யோகிதாஸ்
48, கல்லடி, மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

## யுத்தம் வேண்டும்

காலைப் பொழுது
'குருவி' வந்து
விடியாமல்,
பகுதி வந்து
விடியும் வரை,
யுத்தம் வேண்டும்!
•
எங்கள் நிலத்தில்
எறிகணைகள்
கிணறு தோண்டும்
ஒப்பந்தங்கள்
ஒயும்வரை,
யுத்தம் வேண்டும்!
•
பொக்கற்றுகளில்
பாஸம், ஐ.சியும்
நிரந்தரவாசிகள்!
நாங்கள்
தற்காலிக விலங்குகள்,
என்ற சட்டம்
தீரும்வரை,
யுத்தம் வேண்டும்!
•
கிரிக்கெட்டில்
பல 'முரளிகள்'
தோன்றும் வரை,
இடுகாட்டில்—சில
'கிருஷாந்திகள்'
தோன்றாத வரை,
யுத்தம் வேண்டும்!
•
அப்பப்பாவின்
அப்பாவும்
அப்பப்பாவும்
அகதி முகாமில்;
இந்த அவதி தீரும்
வரை
யுத்தம்
வேண்டும்!
•
யுத்தம்
போடும்
சத்தம்
'கோபி அனா'வின்
காதில் விழும் வரையாவது
யுத்தம்
வேண்டும்— ஏனென்றால்...
சமாதானப்
புறாக்களின் பாஷை
யாருக்கும்
புரிவதில்லை!

**பால கமலன், வவுனியூர்.**

## நிலவு

கண்களில் நீர் நிரம்புகிறது
காது கேட்க மறுக்கிறது
கைகள் செயலிழந்து போகிறது
கால்கள் நகர மறுக்கிறது!
**
வாய் பேசத்தடைப்படுகிறது
மூக்கு மூச்சுவிடத் தவிக்கிறது
மனம் உன்னையே தேடி அலைகிறது
நெஞ்சம் உன்னையே நாடுகிறது!
**
உன் நினைவுகள் என்னை வாட்டுகிறது
என் கனவுகள் என்னை ஏமாற்றுகிறது!
**
மௌனத்தை தண்டனையாக நீ ஏற்கிறாய்
கண்ணீரைத் தண்டனையாக நான் ஏற்கிறேன்
**
போட்டியில் இருவரும் பங்கேற்கிறோம்
போட்டியில் வெல்வது யார்?
**
என்னை நீ பிரிவதாக சொல்கிறாயே
உன்னை விட்டு உன் உயிர் பிரிவதை
உணரவில்லையா?
**

**அனலைமகள்.**

## இன்னொரு தேவதை பூமிக்குள் புதைந்தது!

அழகின் அழகு அவள்
காதலின் காதல் அவள்
அன்பு கிடைக்காத
அன்புக் குரியவள்,
அத்தனை நெஞ்சங்களினதும்
இளவரசியவள்!
—o—
சின்னத் தேவதையவளின்
சிங்காரத்தைச்
சிதைத்தது யார்?
விஷப் பார்வைகளால்
அவளது வானத்தின்
வெண்ணிலவைக்
குருடாக்கியது யார்?
—o—
அழகிய ரோஜாவாய் அவள்
மலர்ந்து சிரித்த நாளில்
ராஜ விழியிரண்டில்
ராணியாக
ஊர்வலம் போனாள்;
அழிவின் ஆரம்பம்—அவளுக்கு
அதுதான் என்பதை
அறியாமல் போனாள்!
—o—
அன்பைத் தேடிச் சென்ற
அவளது பாதங்கள்
நீண்ட நரகமொன்றின்
தலைவாயிலில்
தரித்திருப்பதைக் கண்டு
துயரத்தில் துடித்தாள்!
—o—
அவளது ஆத்மா
அனாதரவாய்த் தவித்தபோது
உயிரை மாய்த்திட முனைந்தாள்;
திசைகளைத் தவறவிட்டபின்
தேவதையவளின் தடயங்களையும்
தொலைத்தழுதாள்!
—o—
சாபமிடப்பட்ட ஒருவனிடம் போய்
அன்பு ஊற்றைப் பொழிந்தாள்!
வானவில்லினைப் போல,
ரோஜாவைப் போல....
அழகின் சிகரமாக
அற்ப ஆயுளை ஏந்தி
அவனிக்கு வந்து போனாள்!
—o—
பெண்மைக்கு
உன்னதமளிக்கத் தெரியாத உலகு
சிதிலமாகிய ஒரு வெண் முத்தை
கண்ணீர்த் துளிகளால்
அபிஷேகம் செய்து
விகசித்தெழ முயற்சித்த கதையை
அவள் மரணத்தில் கண்டேன்!
—o—
இனியெல்லாம்
இருண்ட இரவுகளில்
நட்சத்திரங்களுக்கு
நடுவில் தோன்றி
அவளது காதலை
அவனுக்குச் சொல்வாளோ?
—o—
நீல நயனங்களின் ஒளி
இனி இல்லை என்றான பின்பும்
எல்லாக் கண்களுக்குள்ளும்
ஒப்பாரியின் பின்னணியில்
அவள்தானே சிரிக்கிறாள்!
—o—

**பஹீமா ஜஹான், தெமடகெல்ல, மெல்சிரிபுர.**

## ஒரு நிமிடம் வேண்டும்!

நண்பா!
நீ விரும்புவது
என் மண்ணை மட்டும்தான்
என நினைத்தேன்;
ஆனால்,
நீ என் மரணத்தையும்
விரும்புகிறாய் அல்லவா?
***
பிரசவ வேதனையை
என்னவள் மறக்குமுன்னே
என் குஞ்சுகளை
வேட்டையாடி விட்டாய்!
***
எத்தனை முறை எனக்கு
'சத்திர சிகிச்சை' அளித்து விட்டாய்!
எத்தனை 'எக்ஸ்ரே' எடுத்துவிட்டாய்!
அவை எல்லாம்,
உனக்கு என்னை உணர்த்தவில்லையா?
என் உள்ளத்தை,
படம் பிடித்துக் காட்டவில்லையா?
***
நண்பா!
உன்னுடைய 'அரவணைப்பு'
என்னுடலை உருக்குலைத்துவிட்டது!
உன் வருடல்கள், தழுவல்கள்
என் பற்களைக் களைந்துவிட்டது!
***
இந்த பல்லிழந்த
உடல் வற்றிய
எலும்புக்கூடு—
அடையாள அட்டையின்படி
இன்னும் இளைஞன்தான்!
***
எனவே தானே
நீ என்னை
இன்றும் தேடி வருகிறாய்?
***
எனக்குத் தெரியும் நண்பா!
மரண தேவனிடம் தானே
என்னை அனுப்பப் போகிறாய்?
***
அதற்கு முன்,
என் இரண்டடிக்
குடிசைக் குள்ளே
நானும் அவளும்
சதந்திரமாய் சுவாசிக்க
ஒரு நிமிடம் தரமாட்டாயா?
***
ஓட்டைச் சிரட்டையில்
என்னவள் தரும்
ஒடியற் கூழைச் சுவைக்க
ஒரு நிமிடம் தரமாட்டாயா?
***
என் கோவணத்தை
எடுத்துக் கட்ட
என் கை விலங்கை
ஒரு நிமிடம் தளர்த்தமாட்டாயா?
***

**ஜே. ஜஸ்டின், வவுனியா.**

## தேன் கிண்ணம்

## திருட்டுக் கவிதை

களவு என்பது
குற்றமல்ல;
எல்லோரும் களவு
செய்கிறார்கள்!
••
கவிஞன்
வாழ்வில் இருந்து
கவிதைகளை
திருடுகிறான்.
••
சூரியன்
புல்லின் மீதான
பனியைத் திருடுகிறான்!
••
பட்டாம்பூச்சி
பூக்களில் இருந்து
தேனைத் திருடுகிறது!
••
பேச்சாளன்
"இப்படி அவர்
சொன்னார்!" என்கிறான்!
••
பூமி சில
ஊர்களை திருடுகிறது
—பூமி அதிர்ச்சி!
••
சந்திரன் வெம்மையை
திருடுகிறான்
—குளிர்மை!
••
நீ என்
இதயத்தை
திருடியதால்
உன் இதழின்
தேனை
நான் திருடினேன்!
••
எனவேதான்
சொல்கிறேன்—
திருட்டு குற்றமல்ல!
••

**சுபா வரன்-கண்டி.**



## துரத்தப்பட்ட பிரபலங்கள்

பிரபலமானவர்களை கமராக்காரர்கள் துரத்துதல் என்பது மேலை நாடுகளில் சர்வ சாதாரணம். ஆனால் இது ஆபத்தான விளையாட்டுத்தான். குறிப்பிட்ட பிரபலங்களின் மெய்ப்பாதுகாவலர்களால் சில புகைப்படக்காரர்கள் பந்தாடப்பட்டதும் உண்டு. புகைப்படக்காரர்களால் துரத்தப்பட்ட பிரபலங்கள் சிலரை இங்கே காணலாம்.



ஜாக்குலின்

← அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடியின் மனைவி ஜாக்குலின் பேரழகி. உல்லாசப் பிரியை. சமூக சேவைகளிலும் நாட்டம் உண்டு. ஜாக்குலினை புகைப்படக்காரர்கள் துரத்தித் துரத்தி புகைப்படம் எடுத்தனர். கென்னடி மறைந்த பின்னர் பிரபல தொழிலதிபர் ஒருவரை மணந்தார் ஜாக்குலின். அக் காதலை முதலில் மோப்பம் பிடித்துக் காட்டியது புகைப்படக்காரர்கள்தான். இப் புகைப்படம் 1971ல் எடுக்கப்பட்டது. ■



மார்லன் பிராண்டோ

பிரபல ஹொலிவூட் நடிகர் மார்லன் பிராண்டோவை துரத்துகிறார் ஒரு புகைப்படப் பிடிப்பாளர். மார்லன் பிராண்டோவுக்கு எக்கச்சக்கமான காதலிகள். ஒருநாள் இசகு பிசகான நேரத்தில் ஒருவர் புகைப்படம் எடுத்து விட்டார். அப்புகைப்படப் பிடிப்பாளரைப் பிடித்து நையப் புடைத்துவிட்டார் மார்லன் பிராண்டோ.

அதன்பின்னர் மார்லனிடம் மாட்டுப்பட்டால் சேதமில்லாமல் தப்புவதற்காக ஹெல்மெட் போட்டுக்கொண்டு அவரைத் தொடர்கிறார் ஒரு படப்பிடிப்பாளர்.



டயானா

← இளவரசி டயானாவை கடை வீதியில் கண்டதும் கிளிக், கிளிக். முகத்தை மறைக்கிறார் இளவரசி. ■

## இந்த வாரம் உங்கள் பலன்

(12.10.1997 தொடக்கம் 18.10.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கன்னி - சூரியன்.
துலாம் - புதன்.
விருட்சிகம் - செவ்வாய், வெள்ளி.
மகரம் - வியாழன்.
கும்பம் - கேது.
மீனம் - சனி.
சிம்மம் - இராகு.

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, கௌரவம். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- பொருள் பேறு, காரியானுகூலம். | மு.ப. | 1 மணி |
| புதன்- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பண வரவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, பயனுள்ள செயல். | பி.ப. | 1 மணி |
| சனி- பலவித பேறு, உயர்ந்த நட்பு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, மனக்குறை நீங்கும். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- பலவித பேறு, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, இனசன நன்மை. | மு.ப. | 9 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| புதன்- கடன் சுமை, மனப் பயம். | மு.ப. | 2 மணி |
| வியாழன்- பலவித பேறு, வெளியிட வாழ்க்கை. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| புதன்- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | மு.ப. | 10 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பலவித பேறு. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| சனி- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், பிரயாண மிகுதி. | பகல் | 11 மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், தொழில் சிறப்பு. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்வு. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | மு.ப. | 9 மணி |
| புதன்- வீண் பிரயாசம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | காலை | 8 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், சஞ்சலம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, பண விரயம். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- கௌரவ மிகுதி, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 மணி |
| புதன் - உயர்ந்த வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், பண வரவு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், தொழில் சிறப்பு. | பகல் | 11 மணி |
| சனி- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப | 2 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பகல் | 11 மணி |
| புதன்- காரியானுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- இனசன நன்மை, சுபகாரிய சித்தி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- பணக் கஷ்டம், கடன் படல். | பகல் | 11 மணி |
| சனி- தொழில் மந்தம், மனக்கலக்கம். | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், மனக் கலக்கம். | பகல் | 11 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக் கவலை. | பி.ப. | 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, கடன் தொல்லை. | பகல் | 11 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. | 1 மணி |
| சனி- மனக் கிலேசம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், காரியத்தடை. | மு.ப. | 10 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- மனக்குறை அதிகம், தெய்வானுகூலம். | பகல் | 12 மணி |
| சனி- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, பொருள் விரயம். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| புதன்- தொழில் மந்தம், காரிய சித்தி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, தொழில் மந்தம். | பி.ப. | 1 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மனத்துயர் நீங்கும். | பகல் | 11 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| புதன்- கடன்தொல்லை நீங்கும், சுபகாரிய நன்மை. | மு.ப. | 9 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பிரயாண மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| சனி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

www.padippakam.com





ஊருக் குழைத்திடல் யோகம்-நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் யாதும்;
போருக்கு நின்றிடும் போதும்-உளம்
பொங்கல் இல்லாத அமைதிமெய்ஞ் ஞானம்
-சுப்பிரமணிய பாரதியார்.

# மூளை இல்லாத கழுதை

## பாப்பா முரசு சிறுகதை

ஒரு காட்டில் வயதான சிங்கமொன்று இருந்தது. வயதாகி விட்டபடியால், அதனால் காட்டில் வேட்டையாட முடியாமல் குகையிலேயே முடங்கிக் கிடந்தது.

அந்தச் சிங்கத்திடம் நரி ஒன்று வேலை செய்து வந்தது. தனக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொண்டு வரத்தான் நரியை சிங்கம் வேலைக்கு வைத்திருந்தது.

சிங்கம் கொண்டு வரச் சொல்லும், மிருகங்களிடம் நரி தந்திரமாகப் பேசி அவற்றை சிங்கத்தின் குகைக்குள் கூட்டிக் கொண்டு வரும். சிங்கம் அவற்றைக் கொன்று தின்னும். அதில் வரும் மிகுதியை நரிக்குக் கொடுக்கும்.

ஒருநாள் சிங்கம், நரியை அழைத்து தனக்கு கழுதை இறைச்சி சாப்பிடவேண்டும். எனவே கழுதை ஒன்றைக் கொண்டு வரும்படி சொன்னது.

நரி கழுதை ஒன்றைத் தேடிப் புறப்பட்டது. சிறிது தூரம் சென்ற நரி கொழுத்த கழுதை ஒன்று அழுது கொண்டிருந்ததைக் கண்டது. உடனே நரி கழுதையிடம்,

"ஏன் கழுதை அக்கா அழுகிறீர்கள்?" என்று கேட்டது.

"என் கணவர் என்னை விட்டுப்பிரிந்து சென்று பலகாலமாகியும் திரும்பி வரவில்லை. அதை நினைத்துத்தான் அழுகிறேன்," என்றது கழுதை.

"கழுதை அக்கா! உங்கள் கணவரை நான் பார்த்தேன். என்னுடன் வா!" என்று நரி கழுதையைக் கூட்டிக் கொண்டு சிங்கத்தின் குகைக்குச் சென்றது. குகை வாயிலை அடைந்ததும்,

"கழுதை அக்கா! உன் கணவர் உள்ளே இருக்கிறார். போய்ப்பார்," என்றது நரி.

கழுதை உள்ளே போனது. சிங்கம் அதன் மீது பாய்ந்தது. கழுதை எப்படியோ வெளியே தப்பி ஓடி வந்து நரியிடம்,

"அவர் என் கணவர் இல்லை. வேறு யாரோ போல் இருக்கிறது," என்றது கழுதை.



"அவர்தான் உன் கணவர். அவர் இப்போது மிகவும் கொழுத்திருக்கிறார். தலைமுடி அதிகமாகிவிட்டது. உடனே உள்ளே போ!" என்று சொன்னது நரி.

கழுதை இரண்டாம் முறை உள்ளே போக மறுபடி சிங்கம் அதன் மீது பாய்ந்தது. கழுதை மறுபடி தப்பி வந்து நரியிடம்,

"அவர் என் கணவர் இல்லை. என்னைக் கொல்ல பாய்ந்து வருகிறது," என்றது கழுதை.

"இல்லை. உன்மேல் உள்ள அன்பு காரணமாக உன்னைக் கட்டியணைக்க வந்திருப்பார் உனக்குப் பயமாக இருந்தால் நாம் இருவரும் உள்ளே போகலாம்," என்று சொன்னது நரி.

மூன்றாவது முறையாக உள்ளே கழுதை போனதும், சிங்கம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அதை அடித்துக்கொன்று விட்டது. பின் நரியைப் பார்த்து,

"நான் குளித்துவிட்டு வந்து சாப்பிடுகிறேன். அது வரை இதைப் பார்த்துக் கொள்," என்று கூறிச் சென்றது சிங்கம்.

சிங்கம் அவ்விடத்தை விட்டு அகன்றதும் நரி, கழுதையின் மூளை முழுவதையும் தின்று தீர்த்து விட்டது. சிறிது நேரத்தில் சிங்கம் குளித்து விட்டு வந்தது. இறந்து கிடந்த கழுதையைச் சாப்பிட அருகில் சென்ற போது கழுதையின் தலையில் உள்ள மூளைப் பகுதி காலியாக இருந்தது.

"நரியே! கழுதையின் மூளை எங்கே?" என்று கேட்டது சிங்கம்.


"சிங்கம் ஐயா! அந்தக் கழுதைக்கு மூளை கிடையாது." என்று சொன்னது நரி.

"மூளை கிடையாதா? எப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டது சிங்கம்.

"இந்த இடத்திற்குக் கழுதை இரண்டு முறை வந்து உங்களிடமிருந்து தப்பிச் சென்றது. இது ஆபத்தான இடம் என்று தெரிந்தும் மூன்றாவது முறையும் வந்தது. மூளை இருந்தால் மூன்றாவது முறையும் வந்திருக்குமா?" என்று கேட்டது நரி.

"ஆமாம். அது மூளை இல்லாத கழுதை" என்று சொல்லி விட்டுச்சாப்பிடத் தொடங்கியது சிங்கம்.


# அதிசயம் - ஆனால் உண்மை!



### மண்டையோட்டு வேலி

டென்மார்க்கில் உள்ள ஃபாரோ தீவுகளில் மிடவாக் என்றொரு தீவு உள்ளது. இங்கு நூற்றுக்கணக்கான திமிங்கலங்களின் மண்டையோடுகளைக் கொண்டு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

### திசைகாட்டிச் செடி



தென் ஆபிரிக்காவில் இருக்கும் 'பச்சிபோடியம் நமக்குவானம்' என்ற செடியைப் பயணிகள் திசைகாட்டியாகக்கொள்வர். ஏனென்றால் இது எப்போதும் வடக்குப் பக்கமாகச் சாய்ந்து நிற்கும்.

### கடல் குதிரை




அவுஸ்திரேலியக் கடலில் உள்ள கடல் குதிரைகள் ஒருவகை கடல் செடிகளைப் போன்ற தோற்றத்தைக் கொண்டுள்ளன.



### இரட்டைத்தலை ஆமை

இந்த இரட்டைத்தலை ஆமை. அமெரிக்காவில் உள்ள பவல்ஸ் என்ற இடத்தில் 1937ம் ஆண்டு வளர்க்கப்பட்டது.

### புலிப் பறவை



தென் அமெரிக்காவில் உள்ள பிட்டான் (BITTERN) என்ற பறவை புலியைப் போலவே குரலெழுப்பும்.

# வாரம் ஒரு நாடு

## பொலிவியா



தலைநகர்- லாபாஸ் (நிர்வாகம்) சுக்ரே (நீதி)
பரப்பு- 10,98,581 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 74 இலட்சம்
மொழி- ஸ்பானிஷ், குவெச்சுவா மற்றும் அய்மாரா
எழுத்தறிவு- 78%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- பொலிவியனோ
தனிநபர் வருமானம்- 690 டொலர்

**அமைவிடம்:**

மேற்கு-மத்திய தென்அமெரிக்க நாடு இது. வடக்கு, கிழக்கில் பிரேஸிலும்; தெற்கில் பரகுவே மற்றும் ஆர்ஜென்டினாவும்; மேற்கில் சிலி மற்றும் பெருவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

புகழ்பெற்ற தென் அமெரிக்க சுதந்திரப் போராட்ட வீரர் சைமன் பொலிவர் என்பவரது பெயரால் இந்நாடு பொலிவியா என்றழைக்கப்படுகிறது. இது 1825ல் சுதந்திரமடைந்தது. ஜனாதிபதியையும், துணை ஜனாதிபதியையும் மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். தொழில்துறையில் பெரிய வளர்ச்சியில்லை. இங்கு தகரம் வெட்டி எடுக்கப்படுகிறது. உலகத் தகர உற்பத்தியில் 15 சதவீதத்தை பொலிவியா உற்பத்தி செய்கிறது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.10.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 214
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 212

பரிசுக்குரியவர்:
டி. அபிராமி,
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ், 10, மொலந்த பிட்டிய வீதி, மாத்தளை. | பர்ஸானா ஆபிலூன், தி/அல் ஹிக்மா மு. வி., மீரா நகர், தம்பலகாமம். |
| செல்வி விஜிதா பேரின்பநாயகம், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | பேரின்பநாயகம் சிவசுதன், மத்திய மகா வித்தியாலயம், வவுனியா . |
| ஜெயானந்த ராஜா பிரதாபன், தமிழ் மகாவித்தியாலயம், ஏறாவூர்-04. | எஸ். ஸ்டெனோசன், புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு-13. |
| செல்வி பி.எச். நிமந்தி மகேஸ்சிக்கா, தி/க அக்போபுர மகா வித்தியாலயம், அக்போபுர. | எம்.ஐ. முஹமட் ஷாவின், ஸாஹிரா தேசிய பாடசாலை, அனுராதபுரம். |
| செல்வன் கனோசதாசன் கார்த்திக், பரகஹதெனிய தேசியக்கல்லூரி, மாவத்தகம. | நர்மதா வேல்முருகு, வின்சன்ட் உயர்தர பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு. |

# சிவப்புச் செய்திகள்

* உலகெங்கும் சிவப்பு வர்ணப் பெயின்ட்களே அதிகளவில் விற்பனையாகின்றன.
* ஃபிரான்ஸில் உள்ள சட்டக் கல்லூரிகளின் நிறம் சிவப்பு.
* சீனாவில் திருமணத்தின் அடையாளம் சிவப்பு.
* ஜப்பானில் ஷிண்டோ மதத்தவர் சிவப்பு நிறத்தையே முக்கிய அடையாளமாகப் பயன்படுத்துகின்றனர்.
* சிவப்புக் கொடி, நோய் பீடிக்கப்பட்டதன் அடையாளமாகும்.
* இத்தாலிய வீரன் கரிபால்டியின் படை வீரர்களை செஞ்சட்டையினர் என அழைத்தனர்.
* ஓவியர்கள் அதிகம் பயன்படுத்துவது சிவப்பு வர்ணத்தைத்தான்.

# முதல் விண்வெளி வீராங்கனை

முன்னாள் சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த வலென்டினா தெரஸ்கோவா என்ற



வலென்டினா

பெண்மணி 1963ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் திகதி 'வோஸ்டாக்-6' என்ற விண்கலத்தில் பயணம் செய்தார். இவரே முதன் முதலாக விண்வெளிக்குப் பயணம் செய்த வீராங்கனை ஆவார். இவர் விண்கலத்தில் 2 நாட்கள் 22 மணித்தியாலம் 42 நிமிடங்களில் 48 முறை பூமியைச் சுற்றினார்.

வலென்டினாவுடன் 'வோஸ்டாக்-6' விண்கலத்தில் பயணம் செய்தவர் வலரியை கோவ்ஸ்கி என்ற சக விண்வெளி வீரர் ஆவர். 1962ல் 'வோஸ்டாக்-3' என்ற விண்கலத்தில் பூமியைச் சுற்றிய அன்ட்ரி நிகோலயோவ் என்ற விண்வெளி வீரரையே வலென்டினா திருமணம் செய்தார்.

# தீக்குச்சிகள்



**➜ ஆரம்ப காலத்தில் தீக்குச்சிகள் எப்படி உருவாக்கப்பட்டன?**

1827ல் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன் வோக்கர் என்ற இரசாயன மருந்துகளை விற்பனை செய்பவர், மரக்குச்சிகளின் முனைகளில் பொஸ்பரஸ் என்ற இரசாயனத்தைத் தடவி, கண்ணாடித்துகள்களை அட்டை ஒன்றில் பூசினார். மருந்து தடவப்பட்ட குச்சியை இதில் உரசி தீ மூட்டப்பட்டது.

**➜ 'எங்கும் தீப்பற்றும்' தீக்குச்சிகள் என்றால் என்ன?**

ஃபிரெஞ்ச் நாட்டு வேதியியல் அறிஞர் சார்ள்ஸ் சுரியா என்பவர் 1836ல் 'எங்கும் தீப்பற்றும்' தீக்குச்சிகளை அறிமுகப்படுத்தினார். இந்தத் தீக்குச்சிகளை எந்தச் சொரசொரப்பான இடங்களில் உரசினாலும் தீப்பற்றிக்கொள்ளும்.

**➜ முன்னர் தீக்குச்சிகள் வெள்ளை பொஸ்பரஸ் கொண்டு தயாரிக்கப்பட்டன. இதனால் அபாயம் உண்டா?**

ஆம். வெள்ளை பொஸ்பரசால் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளால் உண்டாகும் புகை 'போஸி-ஜா' என்ற நோயை உருவாக்குகிறது. இதனால் பலர் மரணமானார்கள். இதன் காரணமாக தற்போது தீக்குச்சிகள் தயாரிக்க வெள்ளை பொஸ்பரஸ் பயன்படுத்தப்படுவதில்லை.

**➜ 'சேஃப்டி மாட்சஸ்' (பாதுகாப்பான தீக்குச்சிகள்) என்றால் என்ன?**

தற்போது உபயோகத்தில் உள்ள தீக்குச்சிகளே இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இவற்றின் தலைகளில் பொட்டாசியம் குளோரைட் தடவப்படுகிறது. தீப்பெட்டிகளின் ஓரங்களில் சிவப்பு பொஸ்பரஸ் மற்றும் மணல் தடவப்படுகிறது.

**➜ தீப்பெட்டி தயாரிக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது?**

1883ல் தான் தீப்பெட்டி தயாரிக்கும் இயந்திரம் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதை எபினேச்சர் என்பவர் கண்டுபிடித்தார்.

# மீன் எண்ணெய்

சிலவகை மீன்களின் கல்லீரலில் இருந்து இறக்கப்படும் எண்ணெய்க்கு மீன் எண்ணெய் என்று பெயர். மேலை நாட்டுக் கடல்களில் உள்ள கொட் (COD) என்ற மீனில் இருந்தும், சுறா (SHARK) என்ற மீனில் இருந்தும் எண்ணெய் எடுக்கப்படுகிறது.

மீன் எண்ணெயில் கொழுப்புச் சத்தும், விட்டமின்கள் 'ஏ'யும் 'டி'யும் அதிகம் உள்ளன. மீன் எண்ணெய் தற்போது மாத்திரைகளாகவும் கிடைக்கின்றன. விட்டமின் 'ஏ' மற்றும் 'டி' பற்றாக்குறையால் நோய் ஏற்பட்டவர்களுக்கு மீன் எண்ணெய் கொடுத்தால் உடனடி நிவாரணம் ஏற்படும்.



கொட் மீன் (COD FISH)

கொட் மீன் எண்ணெய் இளமஞ்சள் நிறமாகவும், நீர்த்ததாகவும் இருக்கும். கொட் மீன் எண்ணெயிலும் பார்க்க சுறா மீன் எண்ணெயில் அதிக சத்துக்கள் உள்ளன.

# பனிக்கட்டி வீடு



ஆர்க்டிக் கடல் பகுதிகளில் வாழும் எஸ்கிமோ மக்கள் குடியிருக்கும் வீட்டின் பெயர் என்ன தெரியுமா? 'இக்லு' என்பதாகும்.

இந்த 'இக்லு' எவ்வாறு அமைக்கப்படுகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? அங்குள்ள பனிக்கட்டிகளைக் கொண்டு தான் இவை அமைக்கப்படுகின்றன. அனுபவம் உள்ள எஸ்கிமோ ஒருவரால் ஒரு மணிநேரத்திற்குள் ஒரு வீட்டைக் கட்டிமுடிக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

இரவு 20

# உடைந்த இரவு

கிரைம் சக்கரவர்த்தி
## ராஜேஷ்குமார்

**சென்றவாரம்**

மைத்ரேயி பாஸ்கரிடம் வந்த காரணத்தைக் கேட்டாள். தனது பர்ஸ் காரினுள் விழுந்துவிட்டதாகவும் அதில் தனது விபரங்களிருப்பதால் தினேஷ் கண்ணில் படுமுன் எடுத்து வைத்து விடும்படி கூற; தினேஷ் விபத்தில் சிக்கி கோமா ஸ்டேஜில் அட்மிட்டாகியிருப்பதாக மைத்ரேயி கிசுகிசுக்க பாஸ்கரின் முகம் பிரகாசமாகிறது.

சந்தர்ப்பத்தைப் பார்த்துத் தினேஷைத் தீர்த்துக்கட்டி விடுமாறு பாஸ்கர் கூறி விட்டுப் போய்விடுகிறான்.

காருக்குச் சென்று பாஸ்கரின் பர்ஸை எடுத்து மைத்ரேயி திரும்ப அங்கே குடும்ப டாக்டர் ராமபத்ரன் வந்து சேர்கிறார்.

டாக்டர் கோஷ் வரவழைக்கப்பட்டுள்ளதாகக் கூறும் ராமபத்ரன் வார்ட் டாக்டருடன் கலந்தாலோசித்துவிட்டு ஃபோன் பண்ணப் போகிறார்.

'டாக்டர் கோஷ் வருவதற்குள் தினேஷின் மூச்சை நிறுத்திவிடலாமா?' என்று யோசிக்கிறாள் மைத்ரேயி.

**இனி**

மைத்ரேயியின் மூளை விதவிதமாக யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

'கணவனின் கதையை முடிக்க வேண்டுமென்றால் அந்த ஐ.ஸி.யூனிட்டுக்குள் யாரும் இருக்கக்கூடாது'.

'அது சாத்தியமா...?'

'சாத்தியம் இல்லை.'

'ஒரு டாக்டரும் நர்ஸும் இருபத்தி நாலு மணி நேரமும் தினேஷின் தலைமாட்டிலேயே இருப்பார்கள் போலிருக்கிறது. ஒரு ஐந்து நிமிஷம் இடைவெளி கிடைத்தால்கூட போதும். பிராணவாயு பயணம் செய்யும் ரப்பர் குழாயை ஒரு ஐந்து நிமிஷ நேரம் அழுத்திப் பிடித்தால் போதும். காரியம் முடிந்துவிடும்!'

'ஆனால் அந்த ஐந்து நிமிஷ அவகாசம் கிடைக்குமா?'

டாக்டர் ராமபத்ரன் உள்ளே வந்தார். மைத்ரேயி யோசிப்பினின்றும் கலைந்து அவரை ஏறிட்டாள்.

"டாக்டர் கோஷுக்கு ஃபோன் பண்ணீங்களா டாக்டர்?"

"பண்ணினேன். 'ஹி ஈஸ் ஆன் த வே'ன்னு ஹாஸ்பிடலில் இருந்து தகவல்... எப்படியும் பத்து நிமிஷத்துக்குள்ளே வந்துடுவார்.."

மைத்ரேயி கண்களில் போலிக் கண்ணீர் காட்டினாள்.

"டாக்டர்... அட் எனி காஸ்ட்.... என் கணவரோட உயிரை நீங்க காப்பத்தணும்.. மணி ஈஸ் நாட் எ மேட்டர். அவர் இல்லேன்னா எனக்கு வாழ்க்கையே கிடையாது."

"கவலைப்படாதேம்மா...! டாக்டர் கோஷ் அட்டெண்ட் பண்ணின கேஸ் இதுவரைக்கும் மரணத்தைத் தொட்டதில்லை..."

மைத்ரேயிக்கு 'பக்' கென்றிருந்தது.

'டாக்டர் கோஷ் வந்து காப்பாற்றி விடுவாரா...?'

'மனுஷன் ஹைதராபாத்திலேயே இருக்காமல் எதற்காக மெட்ராஸ் வந்தார்....?'

யோசிப்பில் மேலும் பத்து நிமிஷங்கள் கரைந்து இருந்தபோது ஐ.ஸி.யூனிட்டின் கதவு மெல்லத் திறந்தது.

ஹாஸ்பிடலின் சீஃப் டாக்டரோடு டாக்டர் கோஷ் உள்ளே வந்தார். நல்ல சிவப்பு நிறத்தில் வழுக்கைத் தலையோடு இருந்த டாக்டர் கோஷ், மோவாயில் ப்ரெஞ்ச் தாடியை வளர்த்து வைத்திருந்தார். கண்களில் ரிம்லெஸ் கண்ணாடி தெரிந்தது.

மெலிதான குரலில் 'ஹலோ' சொல்லி ராமபத்ரனின் கையைப் பற்றி குலுக்கிய டாக்டர் கோஷ் தினேஷுக்குப் பக்கத்தில் வந்து நின்றார்.

மெடிக்கல் கார்ட்டை வாங்கிப் பார்த்து-தினேஷையும் பரிசோதித்தபின் ராமபத்ரனிடம் நிமிர்ந்தார் டாக்டர் கோஷ்.

"எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுத்துப் பார்த்தீங்களா?"

"இல்லை?"

"முதலில் அந்த ஸ்கேன் எடுக்கப்பட வேண்டும். பேஷண்டின் நிலைமை இவ்வளவு சீரியஸாய் இருப்பதற்கு காரணம் தலையில் அடிபட்டது மட்டும் இல்லை...."

"தென்...?"

"முதுகுத்தண்டு வடத்திலும் அடிபட்டிருக்க வேண்டும். அப்படி அடிபட்ட இடத்தைக் கண்டுபிடித்து ட்ரீட்மெண்ட் கொடுத்தால்தான் பேஷண்ட்டோட உயிரைக் காப்பாற்ற ஒரு வழி கிடைக்கும்..."

"இப்போதே ஸ்கேன் எடுத்து விடலாமா டாக்டர்....?"

"உடனே...."

அடுத்த சில நிமிடங்களில் தினேஷ் ஒரு ஸ்ட்ரெச்சருக்கு மாற்றப்பட்டு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் தியேட்டருக்கு கொண்டு போகப்பட்டான்.

மைத்ரேயியின் இருதயம் பதைபதைத்தது.

'காப்பாற்றி விடுவார்களோ?'

'விடக்கூடாது!'

☆☆☆

எம்.ஆர்.ஐ.ஸ்கேன் ரிப்போர்ட் அடுத்த அரை மணி நேரத்திற்குள் டாக்டர் கோஷின் பார்வைக்கு வந்தது.

ரிப்போர்ட்டைப் பார்த்து விட்டு ஒரு சின்னப் புன்னகையோடு பக்கத்தில் நின்றிருந்த மைத்ரேயியைப் பார்த்தார்.

"இனி நீங்கள் அழ வேண்டியது இல்லை. உங்கள் கணவரைக் காப்பாற்றிவிடலாம்..."

"டா.. டாக்டர்...."

"எஸ்.... உங்கள் கணவரின் முதுகுத்தண்டு வடத்தில் ஒரு டிஸ்க் மோசமான முறையில் அடிபட்டு வீங்கியிருக்கிறது. அந்த வீக்கத்தின் இறுக்கத்தால் மூளையும் ஸ்தம்பித்துப் போய் ஒரு கட்டாய கோமாவுக்கு உடம்பை கொண்டு போயிருக்கிறது. இதற்கு உடனடியாய் ட்ரீட்மெண்ட் எடுத்தால் உங்கள் கணவரைக் காப்பாற்றி விடலாம்...."

போலி பரவசத்தோடு கைகளைக்கும்பிட்டாள் மைத்ரேயி.

"டாக்டர்...! நீங்கள் எது செய்தாலும் சரி... அவர் உயிர் பிழைக்க வேண்டும். ட்ரீட்மெண்டை உடனே ஆரம்பியுங்கள்!"

"அந்த ட்ரீட்மெண்ட் கொஞ்சம் காஸ்ட்லி ட்ரீட்மெண்ட். 'எக்ஸ் லேசர் ட்ரீட்மெண்ட்' என்பது அதனுடைய பெயர். கணவரின் முதுகில் ஊசி முனையளவுக்கு சின்னதாய் ஒரு துளைபோட்டு, அந்த துளை வழியாக ஒரே ஒரு லேசர் இழையை மட்டும் உள்ளே அனுப்பி-முதுகு தண்டுவடத்தின் டிஸ்க்கில் ஏற்பட்டுள்ள வீக்கத்தை ஆவியாக்கிவிடலாம். இந்த ட்ரீட்மெண்ட்டை செய்ய கிட்டத்தட்ட இரண்டு லட்ச ரூபாய்வரை செலவாகலாம்..."

மைத்ரேயிக்கு அதிர்ச்சியாக இருந்தாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் செயற்கையாய் கம்மிப்போன குரலில் சொன்னாள்:

"டாக்டர்...! பத்து லட்சமே செலவானாலும் பரவாயில்லை. அந்த ட்ரீட்மெண்ட்டை உடனே எடுங்க..."

"இந்த ஹாஸ்பிடலில் அந்த ட்ரீட்மெண்ட்டை கொடுப்பதற்கான கருவிகள் இல்லை. இம்பாலா ஹாஸ்பிடலுக்குத்தான் பேஷண்ட்டை கொண்டுபோகவேண்டும். அதுவும் ஆபரேஷனை காலை ஆறுமணிக்குள் செய்து முடிக்க வேண்டும்."



காரியங்கள் தன்னை மீறி நடப்பதை உணர்ந்து கொண்டு மைத்ரேயி பேசாமல் இருக்க-டாக்டர் கோஷை ராமபத்ரன் ஏறிட்டார். "டாக்டர்...! பணம் ஒரு பிரச்சனையே கிடையாது. தினேஷ் உயிர் பிழைக்க வேண்டியது மிகமிக அவசியம். செலவாகப் போகும் லட்சங்களைப் பற்றி மைத்ரேயிக்கு கவலையில்லை. தினேஷை உடனடியாய் இம்பாலா ஹாஸ்பிடலுக்கு கொண்டு போயிடலாம்..."

"ஆம்புலன்சை ஏற்பாடு செய்யுங்கள். நான் இம்பாலாவுக்குப் ஃபோன் செய்து ட்ரீட்மெண்ட்டுக்கான உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்கும்படி சொல்லிவிடுகிறேன்."

டாக்டர் கோஷ் மேஜைமேல் இருந்த டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு இம்பாலா ஹாஸ்பிடலின் டெலிஃபோன் எண்களை டயலில் தட்ட ஆரம்பித்தார்.

மைத்ரேயி இறுகிப்போன முகத்தோடு தன்னைச் சுற்றி நிகழ்கிற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

* * *

விடியற்காலை ஐந்து மணி.

இம்பாலா ஹாஸ்பிடல் கட்டிடம் ஏழு மாடிகளோடு நின்றிருக்க கீழ்மாடியில் இருந்த ஆபரேஷன் தியேட்டருக்கு முன்பாய் மைத்ரேயியும், வையாபுரி மாமாவும், அத்தையும் பாலிமர் நாற்காலிகளில் சாய்ந்தார்கள்.

மைத்ரேயிக்கு ராத்திரி முழுக்க தூக்கம் கெட்டதில் கண்கள் மிளகாயைத் தீற்றிக்கொண்ட மாதிரி எரிந்தன. அதைக்காட்டிலும் வயிறு எரிந்து கொண்டிருந்தது.

'கிடைத்த ஒரு வாய்ப்பும் நழுவிப் போய்விட்டதே...!'

'பார்க்கலாம்... இந்த ஹாஸ்பிடலிலாவது ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வாய்த்தால் தீர்த்துக்கட்டிவிட வேண்டியதுதான்...!'

பக்கத்தில் உட்கார்ந்திருந்த அத்தை புலம்பிக் கொண்டிருந்தாள். "தைரியமா இரும்மா... தினேஷுக்கு ஒண்ணும் ஆகாது. நான் கிராமத்துல இருக்கிற மாரியம்மன் கோயிலுக்கு வேண்டிக்கிட்டு இருக்கேன். அந்த ஆத்தா உன்னோட மஞ்சளையும், குங்குமத்தையும் காப்பாத்துவா. நீயும் வேண்டிக்கோம்மா..."

ஆபரேஷன் தியேட்டர் கதவு திறந்தது.

டாக்டர் கோஷ் ராமபத்ரனோடு வெளிப்பட்டார். இருவர் முகங்களிலும் பெரிய பெரிய புன்னகைகள்.

மைத்ரேயி எழுந்தாள்.

கணவன் பிழைத்துக்கொண்டது மனதுக்கு தீர்க்கமாய் புரிந்தது. டாக்டர் கோஷ் பக்கத்தில் வந்தார்.

"இட்ஸ் ஏ மிராக்கிள் எஸ்கேப்! ஒரு மணி நேரம் லேட் பண்ணியிருந்தாலும் தினேஷைக் காப்பாற்றியிருக்க முடியாது...."

வேண்டுமென்றே குரல் தழுதழுத்தாள் மைத்ரேயி.

"தேங்யூ... வெரிமச் டாக்டர்..."

"நன்றியை உன்னோட ஃபேமிலி டாக்டர் ராமபத்ரனுக்குச் சொல்லுங்கள். அவர் மட்டும் எனக்கு சரியான நேரத்தில் டெலிஃபோன் மூலம் தொடர்பு கொண்டு விஷயத்தை சொல்லாமல் இருந்திருந்தால் தினேஷ் இப்போது உயிரோடு இருந்திருக்க மாட்டார்."

டாக்டர் ராமபத்ரன் சிரித்தார்.

"மைத்ரேயி! நீ நன்றியைச் சொல்ல வேண்டியது டாக்டர்களுக்கு இல்லை. அந்த கடவுளுக்கு. ஒரு நோயாளியை குணப்படுத்தக் கூடிய உண்மையான ஹீலர் டாக்டர் இல்லை. அந்தக் கடவுள் தான்!"

மைத்ரேயி கேட்டாள்.

"டாக்டர்...! நாங்க உள்ளே போய் அவரைப் பார்க்கலாமா...?"

"நோ....நோ.... இன்னும் மூணுமணி நேரத்துக்கு ஆபரேஷன் தியேட்டருக்குள்ளே யாரும் போக அனுமதியில்லை. எட்டு மணிக்குமேல்தான் தினேஷை தியேட்டரிலிருந்து கொண்டு வருவோம். நீங்க யாரும் இங்கே வெயிட் பண்ண வேண்டியது இல்லை. வீட்டுக்குப் போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்து குளிச்சு சாப்பிட்டும் வந்து டலாம்."

வையாபுரி மைத்ரேயியிடம் திரும்பினார்.

"நீயும் அத்தையும் வீட்டுக்குப் போய் குளிச்சு சாப்பிட்டு வந்துடுங்கம்மா... நான் இங்கே இருக்கேன். நீங்க வந்ததும் நான் வீட்டுக்குப் போறேன்."

மைத்ரேயி தயங்க...

டாக்டர் ராமபத்ரன் சொன்னார், "தினேஷைப் பத்திக் கவலைப்படாம போய்ட்டு வாம்மா.. மாமாதான் இருக்காரே...?"

தலையாட்டிவிட்டு மைத்ரேயி அத்தையுடன் நகர்ந்தாள். ஏமாற்றமும் ஆத்திரமும் தகிக்க காரை விரட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தபோது நேரம் ஐந்தே முக்கால்.

கிழக்குத்திசை விடிகிற பக்குவத்தில் இருந்தது. பங்களாவைச் சுற்றிலும் இருந்த மரங்கள் பறவைகளைச் சுமந்து கலகலப்பாகத் தெரிந்தன.

போர்டிகோவில் காரை நிறுத்தி பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள், மைத்ரேயியும் அத்தையும்.

"நான் கொஞ்ச நேரம் தலையைச் சாய்க்கிறேன் மைத்ரேயி! நீயும் படுத்து எந்திரி" அத்தை சொல்லிவிட்டு மாடிக்குப் போய்விட மைத்ரேயி சோபாவுக்கு சரிந்து உட்கார்ந்தாள்.

'என்ன செய்யலாம்?'

பாஸ்கரின் ஃபோன் வரட்டும். மேற்கொண்டு பேசிக்கொள்ளலாம்.

ஃபோனுக்காக காத்திருக்க ஆரம்பித்தாள் மைத்ரேயி. **(தொடர்ந்து வரும்)**

## அரங்கம்



பெயர்: கே. செல்வகுமார்,
வயது: 22
முகவரி: 146, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு-13.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், ரீ.வி.



பெயர்: எம். நஜாஹ்,
வயது: 23
முகவரி: 9, புதிய வீதி, மக்குளுவை, காலி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: கே. வெற்றி,
வயது: 28
முகவரி: P.O.BOX-34647, JEDDAH - 21478, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு, கதைப்புத்தகம்.



பெயர்: ரி. விக்னேஸ்வரி,
வயது: 16
முகவரி: சிவன் கோவில் வீதி, தோணிக்கல், வவுனியா.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.



பெயர்: ஜே. முகமட் நஸீர்,
வயது: 20
முகவரி: 318/7, முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.



பெயர்: எம். காமில்,
வயது: 28
முகவரி: P.O.BOX-40, SALALAH - 211, S.OF.OMAN.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: ஜீ. ரவ்ஸ்தீன்,
வயது: 21
முகவரி: 176/1, பள்ளிவீதி, கல்ஹின்னை, கண்டி.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். பாஸி,
வயது: 22
முகவரி: 406/5, [illegible] வீதி, வரகன்கின்னை, அக்குறணை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்.

பெயர்: கே. கணேசமூர்த்தி,
வயது: 19
முகவரி: வெதமுள்ள, இறம்பொடை.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்.

பெயர்: கே. கருணாமூர்த்தி,
வயது: 18
முகவரி: நோனா தோட்டம், கந்தப்பளை.
பொழுது போக்கு: பேனா நட்பு, கிரிக்கெட்.

பெயர்: எம். கோபால்,
வயது: 25
முகவரி: விஷ்ணு கோயில் வீதி, கல்குடா.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். அனஸ்,
வயது: 27
முகவரி: 326, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் 32

# கனவு மெய்ப்பட வேண்டும்

**இதுவரை**

சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார். சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர். கணேசனைவிட சுமதிக்கு நல்லவேலை. நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது. சுமதியை கணேசன் கொடுமைப்படுத்துகிறான். வீட்டை விட்டு அடித்துவிரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள். ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்துக் கோரி மனுத்தாக்கல் செய்கிறாள்.

**இனி.....**

"ஒருவர் அருகில் ஒருவர் இருக்கையில் நிம்மதி அடைந்தோம். சந்தோஷம் அடைந்தோம். அவர் சாப்பிட்டாரா, என்ன சாப்பிட்டிருப்பார் என்று எனக்குத் தோன்றும். சரியாக அதே நேரத்தில், அவரிடமிருந்து ஃபோன் வரும். நான் என்ன சாப்பிட்டேன் என்று கேட்பார் அவர். இரவுகளில் அவர் நினைவு, மண்ணைப் பெயர்த்துக் கொண்டு வரும் செடி வேர் மாதிரி, மனதைப் பெயர்த்துக் கொண்டு மேல் எழும்பும். இந்த உணர்வின் பேர் என்ன என்று எனக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்பேன். அவர் அதைக் காதல் என்றார்."

சுமதி பெருமூச்சு விட்டாள்.

"என்ன சுமதி?"

"எவ்வளவு அழகாகச் சிந்திக்கிறீர்கள் என்று இருந்தது வசந்தி. இப்படித்தான் பேசிப் பேசி, பேசாமல் பேசாமல் இருந்து, கால்பந்து நிறைய காற்றை அடைத்துக் கொள்வது மாதிரி, மனசு நிறைய நாம் யாரை விரும்புகிறோமோ அவரை அடைத்துக்கொண்டு, ஒருவரில் ஒருவர் வாழ்வது. எவ்வளவு பெரிய சந்தோஷம்? நீங்கள் எல்லாம் எவ்வளவு அர்த்த பூர்வமாக வாழ்க்கையை நிரப்பிக் கொண்டீர்கள். எனக்கு உங்களைப் பார்க்க சந்தோஷமாக இருக்கிறது. எனக்கு ஒரு விஷயம் தெரிய வேண்டுமே, வசந்தி. அதாவது பீட்டரை நீங்கள் முதன் முதலாக சந்தித்த நாளுக்கும், நீங்கள் ஒருவரைத் தொட்டுக்கொள்ள–அதாவது உடம்பால் அறிந்து கொள்ள நேர்ந்த நாளுக்கும் இடைப்பட்ட காலம் எவ்வளவு?"

வசந்தி யோசித்தாள். ஒரு கணம்தான். நெற்றியில் வந்து விழுந்த மயிர்க்கற்றைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அவள் சொன்னாள்.

"எண்பத்தேழாம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாம் தேதி முதன் முறையாக நான் அவரைப் பார்த்தேன் சுமதி. என் அண்ணனின் சிநேகிதர் என்ற வகையில் நாங்கள் அறிமுகம் ஆனோம். எண்பத்தெட்டாம் ஆண்டு. அதே ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி நாங்கள் நெருங்கினோம். கடற்கரையில், நாங்கள் கொண்டு சென்றிருந்த பேட்டரி டேப்ரிகார்டரில், பாலமுரளி, எம்.எஸ். பாடல்கள் சிலவற்றைக் கேட்டு முடித்து, கஜல்கள் சிலவற்றையும் கேட்டோம். எங்களை அறிந்ததால், நாங்கள் எங்களை அறியாமலேயே கிறங்கிப் போனோம். யார் முதலில் தொட்டோம், அல்லது தொட முயன்றோம் என்று நினைவு இல்லை. இருவருமே ஒருவரையொருவர் தொட முயன்றோம் என்பது தான் உண்மை. தொட்டோம். அவரும் நானும் ஒரே சமயம் முகம் நெருங்கி முத்தமிட்டுக் கொண்டோம்."

வசந்தி சுமதியின் முகத்தைப் பார்த்தவாறே சொல்லி சற்றே நிறுத்தினாள்.

"நான் தனியாக ஒரு வீட்டுப் பகுதியை வாடகைக்கு எடுத்துத் தங்க முன் வந்த போதுதான், வாரத்தில் சனியும் ஞாயிறும் ஆகிய இரண்டு நாட்கள் அவர் என்னுடன் தங்குவதற்கு என்று வரத் தொடங்கினார். இப்படியாக எங்கள் வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது."

"நாளை குழந்தை வேண்டும் என்றால்....?"

"பெற்றுக் கொள்வோம். தாலி கட்டிக் கொண்டால் தான் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டுமா, என்ன?"

"சட்டபூர்வமான குழந்தையாக ஆகாதே என்று சொல்ல வந்தேன்"

"எங்கள் குழந்தையை நாங்கள் அங்கீகரித்த பிறகு, சட்டம் அதை ஏன் அங்கீகரிக்க வேண்டும்? சட்டத்தின் அங்கீகாரம் எங்களுக்கு எதுக்கு?"

"நீ சொல்வது ரொம்ப சரிதான். வசந்தி."

"நாங்கள் மிகவும் யோசித்தே இந்த முடிவை மேற்கொண்டோம். சுமதி இப்படியே இருப்பது. விரும்பினால் பிள்ளை பெற்றுக்கொள்வது. சில காலத்துக்குப் பிறகு நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சலித்துப் போனால், கௌரவமாக விலகிக் கொள்வது. அநாவசியமாகக் கோர்ட்டுக்குப் போவது, யார் யாருக்கு முன்னாலோ நம் பலவீனங்களை வெளியிட்டு விவாகரத்து பெறுவது என்பதெல்லாம் எவ்வளவு அநாகரிகமான பழக்கங்கள். இவை மனிதர் பிறரை அவமானம் செய்கிற விஷயங்கள் அல்லவா?"

"அப்படிக் கூட நடக்கும் என்று நினைக்கிறாயா?"

"ஏன் நடக்கக்கூடாது. சுமதி! நாம் எதையும் எதிர்பார்த்துத் தயாராக இருக்க வேண்டும்தானே! சுமந்து, வலியோடு பெற்று, சொல்ல முடியாத இன்னல்கள் எல்லாம் பட்டு வளர்த்து ஆளாக்கிய குழந்தைக்கும் தாய்க்கும் மனஸ்தாபம், சண்டை வருவது எதனால்? அப்படி வரலாமா? தாய்க்கும் மகனுக்கும், தந்தைக்கும் மகனுக்குமே அப்படியெல்லாம் பிரச்சனை வரும் என்றால், எங்கோ எப்படியோ, ஏதோ ஒரு சூழ்நிலையில் வளர்ந்து ஆளான இரண்டு பேர் சேர்ந்து வாழ்வதில் என்ன என்ன இடர்பாடு வந்துவிடும்? வரத்தானே செய்யும்: அதையும் நாம் எதிர்பார்க்க வேண்டியது தானே..."



"அப்படிப் பிணக்கு ஏற்படாத உன்னதமான காதல் என்பது சாத்தியமே இல்லையா?"

"இல்லை. முத்தம் கொடுத்துப் பசியாற முடியாது சுமதி. மனிதருக்கு உணவு, உடை. சௌகர்யமான இருப்பிடம் இவை இல்லாமல் காதல் வரச் சாத்தியம் இல்லை. உடம்புக்கு என்று சில அடிப்படைத் தேவைகள் இருக்கத்தானே செய்கின்றன? அந்தத் தேவைகள் பூர்த்தியடையத்தானே வேண்டும்? கண்டதும் காதல், தெய்வீகக் காதல் என்பதெல்லாம் கற்பனைக்கு அழகும் ரம்மியமும் தரக்கூடியவையே தவிர, யதார்த்தம் ஆக முடியாது." சுமதிக்கு அவளிடம் பேசுவதில் மனம் நிறைந்தது.

□□□

ஆக, அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குப் பக்கத்தில், அதன் சுற்றுச் சுவரை ஒட்டி இருக்கிற குடிசைகளைப் பிரித்துப் போட்டு விடுவதே உத்தமம் என்பதே, அரசின் கொள்கையாக இருந்ததோ எனும்படி சூழ்நிலை அமைந்திருந்தது.

அது பற்றிய கோப்பு, சுமதியின் பார்வைக்கு வரும் போதே அவள் மிகத் தெளிவாக அது பற்றிக் குறிப்பொன்றை எழுதியிருந்தாள். "பெருகி வரும் நகரவளர்ச்சியின் பயனாக, சேரிகள் உருவாகின்றன. மத்திய தர மக்களையும், மேல்வர்க்க மனிதர்களையும், சார்ந்து வாழ்கிற சாதாரண ஜனங்களின் வாழ் இடம் சேரியாகத்தான் இருக்க முடியும். அவர்களை நகரத்தின் மையப்பகுதியில் வாழ விடாமல், தாம்பரத்துக்கு அப்பால் குடிசை போட்டுக் கொண்டு வாழச் சொல்வது மனிதாபிமான காரியமாக இருக்க முடியாது. தாம்பரத்திலிருந்து ஆறு ரூபாய் செலவு செய்து கொண்டு வந்து வேலை செய்து சம்பாதிக்கிற மக்கள் இல்லை அவர்கள். அவர்களின் ஒரு மாதத்திய வருமானமே ஆறு ரூபாயா என்று சொல்வது கடினம். வேண்டுமானால் அந்த நட்சத்திர ஓட்டலைத் தாம்பரத்துக்கு மாற்றி விடலாம். அந்த ரக ஓட்டலில் தங்குகிற மனிதருக்குத் தூரம் ஒரு பிரச்சனையாய் இருக்காது. தவிரவும், அந்த ஓட்டலில் குடிசை ஜனங்களைக் குடியேற்றிவிட்டால், சேரியை ஒழித்தது போலவும் இருக்கும்."

**பிரபஞ்சன்**

சுமதி எழுதிய இந்தக் குறிப்பு, அரசு அதிகாரிகளின் மட்டத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. குடிசை ஜனங்களை ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்க வைப்பது என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்றாக அந்த அதிகாரிகளுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

ஒரு அதிகாரி, 'இது போன்ற கம்யூனிஸ்ட்தனமான சிந்தனைகளை அரசாங்க பைல்களில் எழுதுவது முறையற்றது' என்று குறிப்பை எழுதி சுமதியிடம் விளக்கம் கேட்டார்.

"கம்யூனிஸ்ட்டாக இருப்பது ஏதோ சமூக விரோதியாக இருப்பது போன்றது என்று தாங்கள் கருதினால் அது தவறு. நான் கம்யூனிஸ்ட் இல்லை. என்னைப் போன்ற. ஜனங்கள் துயரப்படுகையில் அவர்களுக்கு ஆதரவாகச் சிந்திப்பதும், உதவுவதும் அவர்களின் போராட்டங்களில் ஆத்மார்த்தமான பங்களிப்புச் செய்வதும் கம்யூனிஸம் என்றால், அந்த அர்த்தத்தில் நான் கம்யூனிஸ்ட் என்றே ஒப்புக் கொள்கிறேன். ஐந்து நட்சத்திர ஓட்டல் போன்றவை நம் நாட்டு மக்களைக் கேவலப்படுத்துவதாகவே நான் நம்புகிறேன். சந்திக்க முடியாத வறுமையில், அறியாமையில், நோய் நொடிகளில் வாழ்ந்திருக்கிற ஜனங்கள், தொலைக்காட்சிப் பொய்களை, கம்ப்யூட்டர் ஆடம்பரங்களினால், பசி ஆறிவிட முடியாது."

சுமதியின் விளக்கம் அரசு மட்டத்தில் மேலும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

அவள் பார்வையாளர் நேரத்தைக் காலை பதினோரு மணிக்கு அமைத்திருந்தாள். சரியாக அந்த நேரத்துக்கு அவளைப் பார்க்க இருவர் வந்திருந்தார்கள். தமிழர்கள்தான். எனினும் மேல் நாட்டுப் பாணியில் உடுத்தியிருந்தார்கள். உலக அளவில் ஓட்டல்களின் மன்னர் என்று சொல்லப்படும் ஒருவரின் பெயரைச்சொல்லி, அவரின் ஏஜெண்ட் என்று தன்னை ஒருவன் அறிமுகப்படுத்திக் கொண்டான். மற்றவன் அவனுடைய உதவியாளன் என்று அறியப்பட்டான்.

"சொல்லுங்கள்?"

"மேடம். நம் ஐந்து நட்சத்திர ஓட்டல் குறித்து நீங்கள் எழுதிய குறிப்பைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டோம்."

"எந்தக் குறிப்பைச் சொல்கிறீர்கள்?"

"உங்கள் பைல் குறிப்பை."

"அது அரசாங்க இரகசியம். அதை எப்படி நீங்கள் அறிய முடிந்தது?"

"நம் அரசு அலுவலர்களின் பணத் தேவையை நீங்கள் அறிய மாட்டீர்களா?"

சுமதிக்கு அந்தப் பேச்சு அவமானமாக இருந்தது. எதிலும் யதார்த்தம் அப்படி இருந்தால் யார் என்ன செய்ய முடியும்?

"சொல்லுங்கள்."

"ஐந்து நட்சத்திர ஓட்டல், நம் தேசத்தின் பெருமை அல்லவா?"

"அல்ல. அது ஆடம்பரம். அது இந்த தேசத்தின் சூம்பிய வளர்ச்சிக்கு யானைக் கால் போல் துருத்திக் கொண்டிருக்கிறது. யானைக் கால் வளர்ச்சியாகாது. அது நோய்."

"இந்தக் கருத்தை நாங்கள் எந்த ஹோதாவில் எடுத்துக் கொள்வது?"

"என் கருத்தாக எடுத்துக் கொள்ளுங்களேன்."

"சேரிகள், அந்த இடத்தின் சுகாதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருப்பதை ஏன் மறந்து போகிறீர்கள்?"

"சுகாதாரத்தைச் சேரிகள் அழிப்பதாக நினைப்பது தவறு. சேரிகள் உருவாவதே ஒரு தேசத்துக்குச் சுகாதாரமானது என்று நான் கருதவில்லை."

"அந்தச் சேரியை நீங்கள் ஒழிக்கப் போவதில்லை"

"ஏன் ஒழிக்க வேண்டும்?"

"அரசாங்கமே சேரிகளை ஒழிக்க வேண்டும் என்கிற கருத்தை வைத்துள்ளது. அதற்காகத்தானே சேரிகளை ஒழித்துவிட்டு, மாடிக்கட்டடங்களைக் கட்டித் தருகிறார்கள்."

"நானும் அதைத் தான் சொல்கிறேன. முதலில் அவர்களுக்கு மாடிக்கட்டடங்களைக் கட்டிக் கொடுத்த பின், அப்புறம் அங்கிருந்து அவர்களைக் காலி பண்ணச் சொல்லலாம் தானே!"

"அதற்கு அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் காலம் ஒரு தலைமுறை ஆகிவிடுமே....?"

"அதற்கு நான் பொறுப்பில்லை."

"மேடம். தாங்கள் எங்கள் குரூப் தலைவனை ஸ்டேட்ஸில் சந்திக்கலாம். ஸ்டேட்சுக்கும் மற்றும் லண்டன், ஃபிரான்ஸ், ஜப்பான், முதலான உலக நாடுகள் பலவற்றுக்கும் தாங்கள் பயணம் செய்யலாம். எங்கள் செலவில் அதற்கு ஏற்பாடு செய்யட்டுமா?"

"இது நீங்கள் எனக்குத் தர நினைக்கும் லஞ்சம் என்று நினைக்கிறேன். என்னை உங்களால் விலைக்கு வாங்கிவிட முடியாது."

"சரி, உங்கள் விலை என்னவென்று தான் சொல்லுங்களேன்."

**(தொடர்ந்து வரும்)**

# குடியைக் கெடுக்கும்....

கலா காதலித்தே மாதவனைக் கல்யாணஞ்செய்திருந்தாள். அதுவும் படிக்கும் காலத்திலேயே அவர்களுக்குள் காதல் பிறந்தது. அப்போது கலா ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தாள்.

கலாவின் வகுப்புத்தோழி ஒருத்தியிடம் மாதவன் தூது அனுப்பினான். தனக்கு அப்படியான எண்ணங்கள் இப்போது இல்லை என்றும் முடிந்தால இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்குப்பிறகு யோசிக்கலாம் என்றும் கலா மாதவனுக்குச் சொல்லி அனுப்பினாள்.

கலாவின் பதிலினால் அவன் அமைதியாகி படிப்பிலேயே கவனம் செலுத்த ஆரம்பித்தான். இதன் விளைவாக உயர்தரப்பரீட்சையில் முதல் மாணவனாகத் தேறினான் மாதவன். இதனால் அவனுக்குப் பல்கலைக்கழகம் புகும் வாய்ப்புக் கிட்டியது.

அப்பொழுது மாதவன் கலாவை ஒருமுறை நேரிலே சந்தித்தான். "என்னைப் பற்றி உங்களுக் குத்தெரியும். உங்களின் மேல் நான் நிறையப் பாசம் வைத்திருக்கிறன். அதைவிட உங்களையே கல்யாணஞ் செய்ய வேணும் என்று உறுதியாகவும் இருக்கிறன். இதை நீங்கள் புரிந்துகொள்ள வேணும். அதுக்காக என்னுடன் சுற்ற வேணும், திரியவேணும் என்று கேட்கவில்லை. என்னுடைய பட்டப்படிப்பு முடியும்வரை எனக்காக நீங்கள் காத்திருக்க வேணும். அதற்காக எனக்கு நீங்கள் ஒரு உத்தரவாதம் தரவேணும்!" தனது மனதிலுள்ள ஆதங்கத்தை மாதவன் கலாவிடம் தெரியப்படுத்தினான்.

அவனின் நேர்மையையும், தன்மேல் வைத்துள்ள உண்மையான பாசத்தையும் மாதவனின் பேச்சுக்களிலிருந்து கலா உணர்ந்துகொண்டாள். "இனிமேல் எத்தனை வருடம் போனாலும் உங்களுக்காக நான் காத்திருப்பேன்!" என்று அவள் தனது உறுதிமொழியை அறிவித்தாள்.

காலச்சக்கரம் விரைவாகச் சுழன்று நான்கு வருடம் பறந்தோடி விட்டது. மாதவன் பட்டப் படிப்பு முடிந்து பட்டதாரியாக வெளியே வந்தான். பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் மாதவனுக்கும் கலாவிற்கும் திருமணம் நிகழ்ந்து முடிந்தது.

இந்தத் தம்பதியினர் தனியாகக் குடித்தனம் நடத்த ஆரம்பித்தார்கள். தனியாகக் குடித்தனம் போன நேரம், மாதவனுக்கு அரசாங்கத்தில் ஒரு உத்தியோகமும் கிடைத்தது.

கைநிறையப் பணம், செல்வாக்கு என்பன அவனைத்தேடி வந்தன. எப்படித்தான் பணம், பொருள், வசதி, வாய்ப்பு இருந்தாலும் குடும்பத்தில் நிம்மதியென்பது நிரந்தரமாகத் தேவைப்படும் ஒன்று. அந்த நிம்மதி அவர்கள் குடும்பத்தில் தள்ளாட்டம் காணத் தொடங்கியது.

இதற்கு மாதவன்தான் முழுப்பொறுப்பாளியாக இருந்தான். அவன் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது பழகிய மதுப்பழக்கம் தான் காரணமாக இருந்தது.

'களவையும் கற்றுமற' என்பார்கள். ஆனால் அங்கு பழகிய பழக்கத்தை அவனால் எங்கும் நிறுத்த முடியாமல் போயிற்று. தினமும் குடித்துவிட்டு வீட்டுக்குவர ஆரம்பித்தான். எடுக்கும் சம்பளத்தில் முக்கால்பங்கை குடிப்பதற்கே செலவு செய்தான்.

கலாவிற்குக் குடும்பச் செலவிற்கு பணம் கொடுப்பதும் அரிதாகிக்கொண்டு வந்தது. இரு குழந்தைகளுடன் அவள்பாடு மிகவும் திண்டாட்டமாகப்போனது. குழந்தைகளுக்குப் பால்மாவிற்குக்கூட பணமில்லாமல் சிரமப் படுவாள். இத்தனைக்கும் அவன் குடிப்பதுபற்றி அவன் வாய் திறக்கவேகூடாது.

"ஏன் இப்படிக் குடித்து உடம்பையும் கெடுத்து காசைக் கரியாக்குகிறீர்கள்?" என்று தான் ஒரு நாள் கேட்டாள்.

"நீ கொண்டுவந்த சீதனப் பணத்திலேயா நான் குடிக்கிறன்?" என்று சொல்லி, அவள் ஏழை என்பதைச் சுட்டிக்காட்டி, சீதனம் கொண்டு வரவில்லையென்பதை ஞாபகப் படுத்தி அவள் வாயை அடக்கிவிட்டான்.



கஞவாஞ்சிக்குடி யோகன் - அவுஸ்திரேலியா

கலா வாயில்லா ஜீவனாகவே வாழப் பழகிக் கொண்டாள். அவளுக்கு ஓர் உண்மை மட்டும் புரிந்துபோனது. மனைவியை மறந்தாலும் இவர் இந்த மதுவை மறக்கமாட்டார் என்று அவள் தெரிந்துகொண்டாள்.

அன்றையப்பொழுது சமைப்பதற்கு அடுக்களையில் எதுவும் இருக்கவில்லை. கணவர் வேலை முடிந்து களைப்பாக வருவாரே என்று பக்கத்து வீட்டில் அரிசி கடன் வாங்கி சமைத்து வைத்திருந்தாள் கலா.

இரவு ஏழரைபோல் மாதவன் வேலை முடிந்து வந்தான். வரும்போது இரண்டு போத்தல்களுடன்தான் வந்தான். குளித்துவிட்டு உடுப்பை மாற்றி சமயல் அறையை ஆராய்ந்தான் அவன். அங்கு ஒரு மரக்கறிதான் சமைக்கப்பட்டிருந்தது. "என்ன இன்றைக்கு மீன் சமைக்கவில்லையா"? கேள்வி பலமாக எழுந்தது.

"நீங்கள் பணம் தந்தால்தானே நான் மீன் வாங்கிச் சமைக்கமுடியும்?" என்று கலா சொன்னாள். "என்னடி வாய் நீள்கிறது?" என்று மீன் சமைக்காத ஆத்திரத்தில் சமையலறைச் சாமான்களை நொறுக்கினான் மாதவன். உள்ளே இருந்த பாத்திரங்கள் எல்லாம் சுக்குநூறாய் உடைந்து போயின. குழந்தைகள் அழுதும், கொடுக்காமல் வைத்திருந்த சோறும் கறியும் நிலத்திலே சிந்தியது. இதைப் பார்த்த கலாவால் தாங்கமுடியவில்லை.

"இந்தக் குடிக்கு மட்டும் உங்களுக்குகாசு வந்து சேர்ந்திடும்." என்று மாதவன் வாங்கி வந்த இருபோத்தல்களையும் தூக்கி எறிந்தாள். அவை உடைபட்டு உள்ளேயிருந்த திரவம் வெள்ளம்போல் நிலத்திலே ஓடியது. போத்தல் உடைபட்டதும் மாதவனுக்கு ஆத்திரம் உச்சத்திற்கு ஏறியது. அவன் கலாவின் மேல் கை வைத்தான். "அப்பா" என்று அழுதுவந்த குழந்தைகளைக் கூட கவனிக்காமல் அவளை அடித்தான். அடித்ததன் மூலம் அவனது ஆத்திரம் அடங்கியிருக்கவேணும். உணவும் இல்லாமல் குடியும் இல்லாமல் போய்ப் படுத்துக்கொண்டான் மாதவன்.

அதிகாலை ஐந்து மணியிருக்கும்; அவனது தூக்கம் கலைந்து போயிற்று. வழமையாக வேலைக்குப் புறப்பட எழும்பும் நேரமாகையால் அவன் கண்களை விழித்துக்கொண்டான். அப்போது பக்கத்து வீட்டில் மரண ஓலம் கேட்டுக்கொண்டிருந்தது.

சட்டென கதவைத்திறந்து வெளியேறி வாசலுக்கு வந்தான். இப்போது சகல திசைகளிலும் அழுகை ஒலிகளும், கூச்சல் சத்தங்களும் கேட்டபடியிருந்தன. என்னவென்று தெரியாமல் பதறிப்போனான் மாதவன். அவனுக்கு உடலெல்லாம் உதறியது.

படலையைத் திறந்துகொண்டு பக்கத்து வீட்டுக்கு விரைந்தான். நவநாதபிள்ளை ஒவசியர் பிணமாகக் கிடந்தார். சொந்தங்களெல்லாம் கதறிய வண்ணம் குழுமியிருந்தனர்.

"தவறணைச் சாராயத்தில் விஷம் ஏறிப்போயிற்றாம்; அதைக் குடித்தவர்களெல்லாம் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கிறார்களாம்." என்று இறந்தவர்களின் பெயர்களையும் இறக்கப்போபவர்களின் பெயர்களையும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மாதவனுக்குப் பொறி தட்டிப் போயிற்று.

ராத்திரி கலாமட்டும் அந்த இரண்டு போத்தல்களையும் உடையாமல் விட்டிருந்தால் தனது நிலமை என்ன ஆகியிருக்கும் என்று நினைக்க உடம்பெல்லாம் வெலவெலத்துப்போனது. 'இனிமேல் வேண்டாம்; ஜென்மத்திற்கும் இந்தக் குடி வேண்டாம்' என்று கலாவை எழுப்ப ஓடினான்.

கலா குழந்தைகளை அணைத்தவாறு உறங்கிக்கொண்டிருந்தாள். தட்டி எழுப்பினான். அவள் அசையவில்லை. குழந்தையை அணைத்திருந்த கைகளை விலத்திவிட்டு அவளை நிமிர்த்தினான் மாதவன்.

வாயிலிருந்து நுரை தள்ளியவண்ணம் கலாவின் உயிர் பிரிந்திருந்தது. "கலா"... என்று கதறி அந்த உடலை அசைத்தபோது தலைப்பக்கம் கிடந்த விஷ வெற்றுப் போத்தல் உருண்டோடிக்கொண்டிருந்தது. ■



வாரமலர் தினமுரசு

ஒக்.12–18,1997

படிப்பகம்

www.padippakam.com

# எப்ப கல்யாணம்?

கா ஞ்சனாவும், விஜயசேகரும் ஐம்பதுஇன்ச் இடைவெளிவிட்டு அமர்ந்திருந்தனர். இடம் கடற்கரை.

"செல்வி காஞ்சனா அவர்களே...! நம் திருமணம் குறித்து..." என்று செயற்கையான கரகரப்புக் குரலில் விஜய் ஆரம்பிக்க காஞ்சனா போலியாகக் கோபித்தாள்.

"இந்தக் கிண்டல்தானே வேண்டாம்ங்கிறது?"

"பின்ன என்ன காஞ்சனா..? பொதுவாக காதலிதான் காதலன்கிட்ட 'எப்பங்க நம்ம கல்யாணம்னு' நச்சரிப்பா... இங்கே கதையே தலைகீழா இருக்கு. நம்ம கல்யாணத்துக்காக நான் உன்னை நச்சரிக்கவேண்டியிருக்குகேன்..."

"உங்களுக்கென்ன, நீங்க ஆம்பளை... உங்க வீட்டுல தைரியமா நம்ம காதலைச் சொல்லியிருப்பீங்க. ஆனா என்னால அப்படி முடியுமா? எங்கப்பா கிட்ட சந்தர்ப்பம் பார்த்து பக்குவமாத்தான் எடுத்துச் சொல்லணும்..."

அந்த 'டச்சிங்' ஜோடிகளிடையே இவர்கள் வித்தியாசமாகத் தெரிந்தனர். சில ஜொள்ளர்கள் இவர்களை வினோதமாகப் பார்த்தனர். 'ஊடல் ஜோடி' என நினைத்துக் கொண்டனர்.



"என்னிக்கானாலும் ஒரு நாள் தெரிய வேண்டிய விஷயம்தானே இது? டமால்னு போட்டு உடைச்சிட வேண்டியதுதானே?"

"ஐயோ எங்கப்பா கோபக்காரரு.. எனக்கு பயம்ப்பா..." உடலைச் சிலிர்த்துக் கொண்டாள் காஞ்சனா.

இளம் ஜோடிகள் சில அவர்களைக் கடந்து சென்றன. ஒருவரோடு ஒருவர் உரசிக் கொண்டு.... தேய்த்துக்கொண்டு, முகர்ந்து கொண்டு, தோளில் தொங்கிக் கொண்டு...

அந்த 'டச்சிங்' ஜோடிகளிடையே இவர்கள் வித்தியாசமாகத் தெரிந்தனர்.

சில 'ஜொள்'ளர்கள் இவர்களை வினோதமாகப் பார்த்தனர். 'ஊடல் ஜோடி' என நினைத்துக் கொண்டனர்.

காஞ்சனா-விஜயசேகர் ஜோடிக்கு இருபதடி தள்ளி ஒருமாதிரி சரிந்து படுத்து, தலையைத் திருப்பிய நிலையில் ஜொள்ளாசனம் போட்டபடி ஓர் அரைக்கிழம் இவர்களையே கவனித்துக் கொண்டிருந்தது.

"அப்பா கிட்ட என்ன பயம் காஞ்சனா? உங்கப்பாதானே அவரு... அவர் கிட்ட தைரியமா பேசு.. சம்மதம்னா வீட்டுல கல்யாணம். இல்லைனா இருக்கவே இருக்கு ரெஜிஸ்டர் ஆபீஸ்..."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தோளில் தட்டப்பட்டான்:

"மிஸ்டர்..."

திரும்பிப்பார்த்தான். போலிஸ் இன்ஸ்பெக்டர் நின்றிருந்தார்.

"என்ன மேன், யாரு இது உன் ஒய்ப்பா?"

"இப்ப இல்ல சார்... ஆனா சீக்கிரமே. எனக்கு ஒய்ஃப் ஆயிடுவா..." என்றான் விஜயசேகர்.

"தள்ளிட்டு வந்த கேசா...?"

"சார்... மரியாதையா பேசுங்க சார். நான் ஒரு கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன்..." சற்றே சூடானான்.

"கல்யாணம் ஆகாத ஒரு பெண்ணை பீச்சுக்கு தள்ளிட்டு வர்றதுதான் கவுரவமான செயலா? சபாஷ்..."

"சார்... தப்பான வார்த்தையை உபயோகிக்காதீங்க...." விஜயசேகரின் குரலில் வெப்பம் இன்னும் அதிகரித்தது.

காஞ்சனா அவன் கையை இரகசியமாய் தட்டினாள். "ஷ்...ப்ச்.." என்று ஒலி எழுப்பினாள்.

"சும்மாரு காஞ்சனா... இவரு போலிஸ் அதிகாரியா இருக்கலாம். அதுக்காக ஒரு பப்ளிக்கிட்ட இப்படி எல்லாமா தரக்குறைவா பேசறது...?" என்றவன் அவளை அலட்சியப்படுத்திவிட்டு அந்த இன்ஸ்பெக்டரிடம் திரும்பினான்.

"சார் நாங்க ஒண்ணும் திருட்டுத்தனமா வரலை. நாங்க கல்யாணம் பண்ணிக்க போறவங்க... கொஞ்சம் ஒவ்வா, கொஞ்சம் ஃப்ரீயா உட்கார்ந்து பேசலாமேன்னு கடற்கரைக்கு வந்தோம்..."

"நிச்சயதார்த்தம் எல்லாம் முடிஞ்சிட்டுதோ?"

"இல்ல சார்... ஆனா கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டோம்..."

"லவ் மேரேஜா?"

"ஆமா சார்..."

"ரெண்டு வீட்டுலயும் சம்மதிச்சாச்சா?"

"எங்க வீட்டுல ஓகே சார். இவங்க வீட்டுல சொல்லத்தான் இவ பயப்படறா... இவ அப்பா ரொம்ப கோபக்காரராம்..."

"ஓகே... இந்தப் பொண்ணோட அப்பா இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலைன்னா?"

காஞ்சனா அவனைக் கிள்ளினாள்; சட்டையைப் பிடித்து மெல்ல இழுத்தாள்.

"சீ... நீ சும்மா இரு..." என்று அவளிடம் சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டரிடம் பேசினான்.

"அவர் சம்மதிக்கணும் சார்... நானும், இவளும் ரெண்டு பேருமே மேஜர். எங்க திருமணத்தைப் பொறுத்தவரை எங்கள் விருப்பப்படி முடிவெடுக்க எங்க ரெண்டு பேருக்குமே சட்டரீதியான உரிமை இருக்கு..."

"ஸோ... அவங்க வீட்டுல சம்மதிக்கலைனா ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்குவீங்களாக்கும்?"

"மாட்டோம் சார்... அவங்க வீட்டுல முறைப்படி பெண் கேட்பேன். அவங்க அப்பா ஒத்துக்கலைனா, நேரடியா அவர் கிட்ட சொல்லிட்டு ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்குவோம். நாங்க ஒண்ணும் தப்பான ஜோடி இல்லை சார்... மனப்பூர்வமா இணைஞ்சு, அறிவுபூர்வமா சாதக பாதகங்களை ஆராய்ஞ்சு பார்த்து, எங்கள் ரசனைகளும், ஆர்வங்களும் ஒத்துப் போனதால் கல்யாண முடிவு எடுத்தவங்க நாங்க... எங்களுடையது டீசண்ட் லவ்..."

விஜயசேகர் சொல்ல, காஞ்சனா சங்கடமாக நெளிந்தாள்.

அந்த இன்ஸ்பெக்டர் அவளைப் பார்த்து புன்முறுவல் செய்தார்.

**எல்.ஆர். குமார்தாசன்**

"பரவாயில்லம்மா... நீ சரியான இளைஞனைத்தான் உன் துணையா தேர்ந்தெடுத்திருக்கிற... இதை நான் உன் அப்பாவா சொல்லலை, இன்ஸ்பெக்டர் பாரதிவேலா சொல்றேன்.... பொது இடத்துல காதல் ஜோடிகளைப் பிடித்து விசாரிச்சா, ஆம்பிளை பெரும்பாலும் நழுவிட்டு ஓடத்தான் பார்ப்பான். ஆனா, இவன் உறுதியா நின்னு தைரியமா பேசறான். இந்தத் துணிச்சல் எனக்குப் பிடிச்சிருக்கு... தவிர எந்த ஆபத்து வந்தாலும், உன்னைக் காப்பாற்ற போராடுவான்ங்கிற நம்பிக்கையும் எனக்கு வந்திருக்கு..." என்றார் இன்ஸ்பெக்டர் பாரதிவேல்.

இவர் காஞ்சனாவின் அப்பாவா? திகைப்பு அவனுக்கு.

"சார்...சார்...வந்து..."

"நான் சார் இல்ல... மாமா..." என்றார் பாரதிவேல் சிரித்து.

அந்தச் சிரிப்பு விஜயசேகரையும், காஞ்சனாவையும் தொற்றிக் கொண்டது.

---

அ ந்த சாம்பல்தீவு பாதுகாப்பு முகாமை நோக்கி, ஓடிவந்த சனங்களைக் கண்டதும் முகாம் பொறுப்பதிகாரிக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'ஏதோ விபரீதம் நடந்துவிட்டது.' என்ற திடமான நம்பிக்கையோடு சற்று கவனத்துடனும், உசார் நிலையிலும் உற்று நோக்கினார் பொறுப்பதிகாரி.

'பயப்பட ஒன்றும் இருக்காது! தலைவர் வேலாயுதத்தின் தலைமையில் தானே சனங்கள் ஓடிவருகின்றார்கள்.'- இது பொறுப்பதிகாரியின் தருணத்திற்குத் தக்க சாத்வீக எண்ணம்.

"ஐயா! புலி... ஊருக்குள்ள- வந்திருக்கு பிடிபட்டிருக்கு." தலைவர் வேலாயுதத்தார் கீழ் மூச்சை வேகமாய் வாங்கியதால் சொற்கள் தறிக்கப்பட்டு வந்தன. அவரின் பின்னால் நின்ற உதயன் "எப்படியாவது சுட்டுப்போடுங்கோ" பொறுப்பதிகாரிக்கு உற்சாக மூட்டினான். இவை எதையுமே பொறுப்பதிகாரி காதில் போட்டுக் கொள்ளவில்லை.

# காருண்யம்



**கனகசபை தேவகடாட்சம்**

வேலாயுதத்தாரின் வசனத்தில் வெளிவந்த அந்த 'சொல்' ஒன்றே அவருக்கு உத்வேகத்தையும், தேசியப்பற்றையும் ஊட்டி விட்டது. முற்றுகைக்காக ஒரு படையே ஆயத்தப்பட்டது.

சனங்களின் வழிகாட்டலில் படைநகர்ந்தது. குறித்த இடத்தை அடைந்ததும் பொறுப்பதிகாரியின் 'மக்கள் எம் பக்கம்' என்ற கற்பனைக் கோட்டை கவிழ்ந்தது! முகம் சிவப்பேறியது!

பயிர்களை நாசம் செய்யும் காட்டுப் பன்றிகளுக்காக வைத்த கண்ணி வலையில் சிறுத்தைப் புலி ஒன்று சிக்கி அறுக்கும் தறுவாயில் நின்று கறுவியது.

"ஐயா! எப்படியாவது சுட்டுப் போடுங்கோ. அறுத்து வந்தால் எல்லோரையும் சரிக்கட்டிப் போடும்" தேசிய மொழி இரண்டும் இணைந்த சனங்களின் கூப்பாடு அது.

தீச்சுவாலையாக வெளிவந்த ஆத்திரத்தை அடக்கியவாறு பொறுப்பதிகாரி பதிலளித்தார்.

'இந்த புலியைச் சுட எங்களுக்கு சட்டமில்லை."

"இந்த கஷ்டம் தாற நாலுகால் புலியை சுட சட்டமில்லை. ஆனால், ஆதாரம் இல்லாம இரண்டு கால்.... அதுக்கு.... சட்டமிருக்கு!"

சனங்கள் ஒருவருக்கொருவர் மெதுவாக 'கிசுகிசுத்'துக் கொண்டனர்.

(யாவும் கற்பனையல்ல)

---

இ ன்று எனக்கு பதினாறாவது பிறந்தநாள். காலையிலிருந்தே வீட்டில் ஒரே பரபரப்பு. அம்மாவும், அப்பாவும் போட்டி போட்டுக் கொண்டு என் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தனர்.

மாலையில் என் நண்பர்கள் பட்டாளம் வந்தது. அவர்களைப் பார்த்த என் தாயின் முகம் கேள்விக்குறியானது. "என்னடி இது? வெறும் ஆம்பிளைப் பசங்களா வந்திருக்கானுங்க," என்றாள் அம்மா.

நான் அதைக் கண்டுகொள்ளவில்லை. 'இந்த அம்மா எப்பவுமே இப்படித்தான். சரியான பத்தாம் பசலி,' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே வந்தவர்களை உபசரிப்பதில் ஈடுபட்டேன்.

# தலைமுறைகள்



இரவு நேரம்-

பார்ட்டி எல்லாம் முடிந்து எல்லாரும் சென்றபின், "என்னங்க! ஒங்க பொண்ணு பண்றது எதுவும் எனக்கு பிடிக்கல," என்றாள் அம்மா.

"அப்படி என்னத்தப் பண்ணிட்டா?"- இது அப்பா.

"எல்லாம் அவ ஒரே பொண்ணுன்னு நீங்க குடுக்கற செல்லம்: கண்ட பசங்களையும் வீட்டுக்கு கூட்டிட்டு வர்றா. நீங்களும் பார்த்துக்கிட்டு பேசாம இருக்கீங்க."

"அதெல்லாம் நம்ம பொண்ணு எந்தத் தப்பான காரியமும் செய்யமாட்டா," என்றார் அப்பா. எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே அறையில் படுத்திருந்தேன் நான்.

**கா**லம் உருண்டது. அமெரிக்காவில் வேலை பார்க்கும் மாப்பிள்ளைக்கு என்னை திருமணமும் முடித்து விட்டனர் என் பெற்றோர். இப்போது நான் இரு பெண் குழந்தைகளுக்குத் தாய். எங்கள் மூத்த மகள் சசிக்கு பதினைந்து வயது. சின்னவள் ஜானுக்கு பதிமூன்று.

சசிக்கு இன்று பதினாறாவது பிறந்த நாள். காலையில் அவளுக்கு 'கிஃப்ட்' கொடுப்பதற்காக ரூமிற்கு சென்றேன். "அம்மா! சசி பார்ட்டிக்கு போகிறேன் என்று சொல்லி அதிகாலையிலேயே சென்றுவிட்டாள்," என்று ஜானு சொன்னதும், எனக்கு தாங்க முடியவில்லை. பிறந்தநாளும் அதுவுமாய் இந்தப் பெண் சொல்லாமல், கொள்ளாமல் கிளம்பி விட்டாளே என்று வருத்தமாய் இருந்தது. ஒன்றும்பேசாமல் மாலையில் பார்ட்டிக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றேன்.

மாலையில்தான் சசி வந்தாள். வரும் போதே இரண்டு அமெரிக்க பையன்களின் தோளில் கைபோட்டு தொங்கிக் கொண்டு வந்ததைப் பார்த்ததும் பதறிப்போனேன். "ஆன்ட்டி.... இன்னிக்கு சசி ரொம்ப ஓவர். எப்பவுமே நிதானம் தவறிய தில்லை: இன்று தான் இப்படி.," என்றனர்.

என்மகள் கண் விழித்துப் பார்த்தாள். "ஓ..வீடு வந்திடுச்சா?" என்று கேட்டபடியே தன் நண்பனுக்கு 'தேங்ஸ் யா' என ஒரு முத்தம் கொடுத்தாள். மகளை இப்படி பார்த்த அதிர்ச்சியில் நான் சிலையானேன்!

**ஜி. வீணாகுமாரி**

பார்ட்டி கேன்சலானது!

சசிக்கு நினைவு வந்ததும், "என்னடா சசி, இப்படியெல்லாம் பண்ணிட்ட?" என்றேன் சாந்தமாக. அதைக்கேட்டதும் அப்படியொரு கோபம் வந்தது என் மகளுக்கு. "என்னம்மா நீ? இன்னும் சரியான பத்தாம் பசலியாவே இருக்கிறே: சே..." என எரிந்து விழுந்தாள். எனக்கு, என் தாயாரின் ஞாபகம் வந்தது.

---

"எ க்ஸ்க்யூஸ் மீ," இனிமையான குரல் கேட்டது.

அறையினுள் நுழையவும் மறந்து திரும்பிப் பார்த்தான் வினோத்.

வனஜா நின்றுகொண்டிருந்தாள். கார்டன் சாரியில் கொள்ளை அழகாக இருந்தாள். டிசைன் பிளவுஸ் அவள் இளமை செழிப்பை வடிவமைத்துக் காட்டியது. பியூட்டி பார்லருக்கு போய்விட்டு வந்திருப்பாள் போலிருக்கிறது. புருவங்கள் அழகாக வில் போல் திருத்தப்பட்டிருந்தன.

எவ்வளவு தடவை பார்த்தாலும் இன்னமும் பார்த்துக் கொண்டே இருக்க மாட்டோமா என்கிற ஏக்கத்தை உண்டு பண்ணும் அழகான தாமரை போன்ற சரோஜாதேவி முகம் வனஜாவுக்கு.

"வாங்க! வாங்க!" என்று அவளை சிரித்தபடி வரவேற்றான் வினோத்.

"ஒரு உதவி செய்யணும் நீங்க," என்றாள் வனஜா.

"சொல்லுங்க!" என்றான் வினோத் உற்சாகமாக.

"நானும், அம்மாவும் கடைவீதிக்குப் போயிருந்தோம்..."

'நாமும் கடைவீதிக்குப் போயிருந்தால் ஏகப்பட்ட விளக்கு வெளிச்சத்திலே வனஜாவை பார்த்து பரவசப்பட்டு இருக்கலாமே?' என்று எண்ணினான் வினோத்.

"நிறைய கடைகள் ஏறி இறங்கினோம்."

'அந்த கடைகளில் வேலை செய்திருக்கக் கூடாதா?' என வருந்தினான் வினோத்.

"ஒவ்வொரு கடையிலும் மணிபர்சைத் திறந்து, திறந்து பணம் எடுத்து எடுத்து கொடுக்க வேண்டியிருந்திச்சு. அப்போ மணி பர்சில் வச்சிருந்த வீட்டுச் சாவி எங்கோ தவறி விழுந்துடிச்சு. வீட்டுக்கு வந்து பூட்டை திறக்க சாவியை மணிபர்சிலே தேடினா காணோம்..." என்றாள் வனஜா.

"இப்போ பூட்டைத் திறந்து நீங்க வீட்டினுள் போகணும், அவ்வளவுதானே!" வினோத்.

"ஆமாம்!" என்றாள் வனஜா.

"கவலையை விடுங்க!"

"உங்ககிட்டே கொத்துச் சாவி இருக்கா?"

"எதுக்கு?"

"கொத்துச் சாவி இருந்தா அதிலே ஒரு சாவியாலே எங்க வீட்டு பூட்டைத் திறந்துடலாமே!" என்றாள் வனஜா.

"பூட்டைத் திறக்க கொத்துச்சாவி ஏன்? சாவிதான் வேணுங்கறது இல்லே!"

"பின்னே?"

பதில் சொல்லாமல் அறையினுள் நுழைந்து, மேஜை டிராயரை திறந்து அதில் எதையோ தேடினான் வினோத்.

"வேற சாவி ஏதாச்சும் இருக்கான்னு பாக்கிறீங்களா?"

"இல்லை."

"பின்னே?"

"கம்பியை..."

"கம்பியையா?"

"ஆமாம்!"

"கம்பி எதுக்கு?"

"உங்க வீட்டு பூட்டை திறக்கத்தான்!"

"கம்பியால பூட்டை திறக்கமுடியுமா?"

"கம்பியால எத்தனை பூட்டுக்களை திறந்திருக்கேன் தெரியுமா?" என்றான் வினோத் ஒரு கம்பியை கையில் எடுத்துக் காட்டி.

வனஜா அதிர்ந்தாள்.

"வாங்க, உங்க வீட்டுக்கு போகலாம்!" என்று வனஜாவை அழைத்துக் கொண்டு அவள் வீட்டிற்குச் சென்றான் வினோத்.

எதையோ யோசித்தபடி அவன் பின்னால் சென்றாள் வனஜா. வருகிற பொழுதிருந்த உற்சாகம், சந்தோஷம் இப்பொழுது அவளிடமிருந்து சுத்தமாக வடிந்து விட்டிருந்தது.

பூட்டை ஒருமுறை அப்படியும், இப்படியும் திருப்பிப் பார்த்தான் வினோத். பிறகு, "பழைய காலத்து அலிகார் பூட்டு," என்றான்.

"அப்போ திறக்க முடியாதா தம்பி?" என்று கவலையாக கேட்டாள் வனஜாவின் அம்மா.

"கஷ்டம்தான்!" என்றான் வினோத்.

'அப்படி எல்லாம் சொல்லாதீங்க. ப்ளீஸ்... எப்படியாவது பூட்டை திறந்துடுங்க..! எவ்வளவு நேரம்தான் தெருவிலே நிக்கிறது? ப்ளீஸ்..' என்று வனஜா கெஞ்சுவாள் என்று எதிர்பார்த்தான் வினோத்.

வனஜாவோ இரு கைகளையும் மார்பின் குறுக்காகக் கட்டிக்கொண்டு பேசாமல் நின்றுக் கொண்டிருந்தாள்.

கம்பியின் நுனியைக் கொஞ்சம் வளைத்து பூட்டு துவாரத்துக்குள் செலுத்தினான் வினோத். அப்படியும், இப்படியும் கம்பியைத் திருகினான். பூட்டு திறந்து கொள்ளாமல் சண்டித்தனம் செய்தது. தன் அறைக்கு ஓடிப்போய் தேங்காய் எண்ணை பாட்டிலைக் கொண்டுவந்து பூட்டினுள் கொஞ்சம் எண்ணையை விட்டு விட்டு கம்பியை பூட்டினுள்விட்டு அப்படி இப்படி திருகினான் வினோத். பூட்டு 'மளக்' என்ற சப்தத்துடன் திறந்து கொண்டது. கையை கர்சிப்பில் துடைத்துக் கொண்டு வனஜாவை பெருமையாகப் பார்த்தான் வினோத்.

அவன் சாதனையை, சாமர்த்தியத்தை பெரிதாக எடுத்துக் கொள்ளாதவள் போல வீட்டினுள் செல்ல பைகளைக் கையில் எடுத்துக்கொள்ள ஆரம்பித்தாள் வனஜா. 'எவ்வளவு பூட்டுகளை கம்பியால் திறந்திருக்கிறேன் தெரியுமா?' என்று சொன்னானே, பெரிய திருடனாக இருப்பானோ? என்று

# காதலுக்கு ஒரு பூட்டு



எண்ணிற்று அவள் மனம். இவனை போய்க் காதலிக்க இருந்தோமே என்றும் எண்ணிற்று அது.

"நீ பூட்டை திறந்து கொடுத்திருக்காட்டா நாங்க ராப்பூரா வீட்டு வாசல்லேயே நிக்கும்படி ஆகியிருக்கும் தம்பி," என்றாள் வனஜாவின் அம்மா நன்றியுடன்.

"ஒருத்தருக்கு, ஒருத்தர் உதவிக்காட்டா என்னம்மா பிரயோசனம்?" என்றான் வினோத்.

**ராஜ்யஸ்ரீ**

"அது எப்படி தம்பி? கம்பியாலே பூட்டை திறந்தீங்க?" என்று வியப்போடு கேட்டாள் வனஜாவின் அம்மா.

"குழந்தை பாட்டி வீட்டுக்கு போயிடுச்சுன்னு, அப்பா அம்மா வீட்டை பூட்டிட்டு வெளியிலே போயிட்டாங்க... ஆனா, குழந்தை வீட்டுக்குள்ளேதான் இருந்துச்சு.... அழ ஆரம்பிச்சிடிச்சு... அதைக் காப்பாத்த எல்லாரும் பூட்டைத் திறக்க முயற்சி பண்ணினாங்க... முடியலே... நான் குழந்தையை காப்பத்தணும் என்கிற முயற்சியிலே கம்பியை போட்டு பூட்டை திறந்தேன். அழுது அழுது சோர்ந்து மயக்கமாயிட்ட குழந்தையை காப்பாத்தினேன். அப்புறம் ஒரு வாட்டி பாருங்க..." என்று சொல்லிக் கொண்டே போன வினோத்தை வியப்போடு பார்த்தாள் வனஜா.

ஓர் உயிரை காப்பாற்றத்தான் பூட்டை கம்பிபோட்டு திறந்து இருக்கிறானா?

"உள்ளே வாங்க... காப்பி சாப்பிட்டுட்டு போகலாம்," என்று அவள் வினோத்தை பார்த்துச் சொன்னாள்.


படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

## தருவது ரசிகன்



# காதலில் ஒரு உத்தி

"துள்ளித் துள்ளி வந்தேனடி
அள்ளி அள்ளித் தருவாயோ?
பள்ளி கொள்ளும் பெண்பூவே
கிள்ளி எடுத்துக் கொள்ளட்டுமா?"

மன்னன் குலோத்துங்கன்
பட்டத்து ராணியிடம்
தன் கொட்டம் அடங்கி நின்றான்!

"நாடாளும் மன்னனுக்கு
நங்கையை ஆளும் ஆசை!
வாள்வீசும் கரங்களுக்கு
பெண் தோள் தழுவ ஆசை!"

பட்டத்து ராணி
பரிகாசம் செய்தாள்!

"வெற்றிக் கனிபறித்த கரங்களுக்கு
விளையாடக் கனி வேண்டாமா?
வெற்றித் திலகம் கண்ட நெற்றிக்கு
பட்டத்து ராணியின் முத்திரை வேண்டாமா?"

குலோத்துங்கன் மீசைக்குள்
குறும்புநகை ஒளிர்ந்தது!

"போர் என்றால் உங்களுக்கு
யார் நினைவும் இருக்காது
போய்வந்த பின்னர் மட்டும்
பேய் போல ஆசை வரும்!"

"பேய் என்றா சொன்னாய்
பேஷ் பேஷ் பேஷ்!
என் முருங்கைமரம் நீதானே
தாவட்டுமா, தழுவட்டுமா?"

பட்டத்து ராணியை
மோகவலையாய் சுற்றின
குலோத்துங்கன் கரங்கள்.

கல்லாக நடித்தவள்
கனியாக கனிந்துபோனாள்.

குறுக்கே திரையாக நின்ற ஆடை
வெறுப்பாக விலக்கப்பட
செருக்காய் முன் நிமிர்ந்த எழில்கள்
போருக்காய் அழைத்தன அவனை!

பசி இருந்தது மனதிலே
புசிக்க கனி இருந்தது தோப்பிலே
தடுக்க அவள் கரமிருந்தும் பயனில்லை
கொடுக்க மனம் துடித்து நின்றாள் தடையில்லை!

கண்ணோடு கண் நோக்க
கனி இதழை இதழ் தேட
கரம் நீண்டு கனி தேட
காலோடு கால் தேயத் தேய
போர்க்களமாய் பள்ளியறை மாறும்
பூவோடு வண்டு அங்கு ஆடும்!

சுரக்கும் ஆசை சுரக்கும்
சிறக்கும் காதல் சிறக்கும்
விரிக்கும் சிறகு விரிக்கும்
மனம் எல்லையின்றி பறக்கும்!

கண்கள் போதையில் நிரம்பும்
கனியிதழ் போதையை வழங்கும்

கொடியிடை கரத்தில் துவளும்
பிடிபட இரு கனி மகிழும்!

கொதிக்கும் தேகங்கள் கொதிக்கும்
குளிக்க வா என அழைக்கும்.
தகிக்கும் எண்ணங்கள் தகிக்கும்
தணிக்க வா என அழைக்கும்!

யாகம் மாயம் யாகம்
தேகம் கூடும் யாகம்

இரத்தம் புதிதாய் ஊறும்
சித்தம் புதிதாய் மாறும்
பித்தம் தீரும் வரைக்கும்
முத்தச் சத்தம் ஒலிக்கும்!

உறக்கம் கண்களில் பறக்க
இன்ப உலகக் கதவுகள் திறக்க
இரவு மடியும் வரைக்கும்
இனிய உறவுப்பாடம் நடக்கும்!

திருநாள் இன்பம் வரும் நாள்
பெருநாள் இன்பம் பெறும் நாள்
வருமோ தினமும் திருநாள்
தருமோ சுகமும் தருமோ?

குலோத்துங்கன்
சிந்தை தாகத்தில் துடித்தது!

கலிங்கத்துப் பரணி கண்ட
கலங்காத பெரும் மன்னன்
கட்டழகு தழுவி
தொட்டு விளையாடும் களத்தில்
எழில் கண்டு பயந்தான்
வேல் விழிகண்டு மிரண்டான்
காணக் காண மருண்டான்.

முதல்நாள் தயக்கம்
மறுநாள் பறக்கும்.
முதல்நாள் அச்சம்
மறுநாள் அகலும்
புரிந்த புதிர்கள்
புதுக்கதை புகட்ட
புரியாத புதிரையெல்லாம்
மறுநாள் அறிய
மன்னன் தவித்தான்!

"தினமும் எதற்கு?
அடங்கட்டும் மனது!"
பட்டத்து ராணி மறுத்தாள்

"கணமும் உன்னை பிரியாத
தினமாய் கழியாதா பொழுது?"
மன்னன் தாபம் சொன்னான்.

"ஒருநாள் தாங்காத
மனமா உமக்கு?
இதுநாள் வரைக்கும்
எப்படிக் காய்ந்தீர்?"

சந்தேக வினா
ராணியின் இதழில்!

"ஏன் இந்த மௌனம்
மேனகை எவளோ
ஊன் என வந்தாளோ?"

"உன் தேகமும்
சந்தேகமும்
கூடிப் பிறந்தது மெய்தானோ?"

கேலியாய் மன்னன்
கேள்வி வீசினான்.

"அந்தப்புரத்து
சொப்பன சுந்தரிகள
அரச குலத்து வாடிக்கைதானே!"

இடக்காய் பேசி
மன்னனைக் கிளறினாள்.
"கைப்பிடித்தவனின்
கைப் பிடிக்குள் இருப்பவன் நான்.
சொப்பன சுந்தரிகளை
சொப்பனத்தில்தான் காணவேண்டும்."

பதில் பிடித்தமாயிருந்தது.
எனினும் ஒரு குறை பிடித்தாள்.
"கனவில்கூட காணும் ஆசை
நினைவில் வந்தால்
நெருங்காதீர் என்னை!"

"ஐயோ தேவி, அப்பாவி நானடி
இப்பாவிக்கு சொர்க்கம்
உன்னை அன்றி யாரடி?"

அணைத்தான்-வளைத்தான்
உணர்ந்தான்-உணரப்பட்டான்

"முதற் கோணல் முற்றும் கோணல்
என்பது பொய்யாச்சு
முதல் மறுப்பு முற்றிலும் மறுப்பல்ல
என்றாச்சு" என்றான்.

புரியாமல் பார்த்தாள்-விரலால்
இதழ் வருடியவன் பதில் சொன்னான்
"முதலில் ஊடினாய், முறுகினாய்
பின்னர் நாடினாய், முயங்கினாய்
எண்ணத்தில் களிவெறி ஊட்டினாய்"

ராணி நகைத்தாள்
மனதுக்குள் மட்டும் அந்த
குறள் நினைத்தாள்.
சுவை கெட்டுப் போம் என்று
மன்னனுக்கு மறைத்தாள்.

"ஊடுவதும் ஊடலை உணர்ந்து
பின்னர் கூடுவதும்
கூடுதல் இலாபம் இன்பத்துக்கு!

ராணி மனதில் நினைத்ததும்
மன்னனுக்கு மறைத்ததும்
குறளில் உள்ள உத்தியைத்தான்!

"ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்"
குறள்-1109. அதிகாரம்-111

ஸ்போர்ட்ஸ்

## வீசத்தொடங்கியுள்ள வங்கப் புயல்



தற்போது இந்தியக் கிரிக்கெட் அணியில் பிரகாசிக்கும் வங்கப்புயல் சௌரவ் கங்குலி. இவ்வருடம் 31 ஒருநாள் போட்டிகளில் கலந்துகொண்டு 29 இன்னிங்ஸ்களில் விளையாடி 1050 ஓட்டங்களை எடுத்துள்ளார். இந்த 1050 ஓட்டங்களில் ஒரு சதமும், 7 அரைச் சதங்களும் அடங்கும்.

இதே போன்று இவ்வருடம் 1000 ஓட்டங்கள் எடுத்து புதிய சாதனை படைத்துள்ளார், முன்னாள் இந்திய அணித்தலைவர் முகமட் அஸாருதீன். இவர் 26 இன்னிங்ஸ்களில் மட்டும் விளையாடி 1000 ஓட்டங்களை எடுத்தார். இதில் ஒரு சதமும், 9 அரைச் சதங்களும் அடங்கும்.

கடந்த வருடம் ஒருநாள் போட்டிகளில் 1000 ஓட்டங்களை எடுத்த வீரர்களும், அவர்கள் விளையாடிய. இன்னிங்ஸ்கள் பற்றிய விபரங்களும் இதோ:

| வீரர் | நாடு | ஓட்டங்கள் | இன்னிங்ஸ் |
|---|---|---|---|
| 1. சச்சின் டெண்டுல்கர் | இந்தியா | 1611 | 32 |
| 2. சயிட் அன்வர் | பாகிஸ்தான் | 1595 | 36 |
| 3. கேரி கேர்ஸ்டன் | தென்னாபிரிக்கா | 1442 | 28 |
| 4. இஜாஸ் அகமட் | பாகிஸ்தான் | 1283 | 36 |
| 5. அரவிந்த டி சில்வா | இலங்கை | 1168 | 29 |
| 6. அமிர் சொஹைல் | பாகிஸ்தான் | 1080 | 30 |
| 7. மார்க் வோவ் | அவுஸ்திரேலியா | 1059 | 25 |
| 8. டரில் கல்லினன் | தென்னாபிரிக்கா | 1034 | 25 |

## முன்னேறும் மொஹந்தி



தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வந்த இந்தியக் கிரிக்கெட் அணிக்கு, சஹாராகோப்பை வெற்றி ஒரு புதுத்தெம்பை அளித்துள்ளது. இந்த வெற்றியில் புதிய வேகப்பந்து வீச்சாளர் மொஹந்திக்கும் பங்குண்டு.

இந்தப் போட்டித் தொடரில், இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் 45 ஓவருக்குள் 116 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இது பாகிஸ்தான் அணி ஒருநாள் போட்டிகளில் எடுத்த இரண்டாவது குறைந்த எண்ணிக்கை ஆகும். இதற்கு மொஹந்தியின் துல்லியமான பந்துவீச்சும் முக்கிய காரணம். இப்போட்டியில் மொஹந்தி 7 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சஹாரா கோப்பைப் போட்டித் தொடரில் மொஹந்தி வீழ்த்திய விக்கெட்டுக்கள் மொத்தம்-8.

ஆறடி உயரமுள்ள இந்த வேகப்பந்து வீச்சாளரைப்பற்றி, இங்கிலாந்தின் முன்னாள் பிரபல துடுப்பாட்ட வீரரும் வர்ணனையாளருமான சேர் ஜெஃப்ரி போய்கொட், இரண்டாவது போட்டி ரி.வி. வர்ணனையின் போது சொன்னது இது:

"நானாயிருந்தால் இவர் பந்தை எதிர் கொள்ளத் தயங்குவேன். எவ்வளவு சிறந்த அணியாக இருந்தாலும், இந்த மனிதர் அதற்கு ஒரு தலைவலியாகத்தான் இருப்பார்."

இந்தியாவின் ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள ஜகத்சிங்பூர் தான் தெபஷிஷ் மொஹந்தியின் சொந்த ஊர். இவரது தந்தை சப்ரேஸ்வர் மொஹந்தி. ஒரிஸ்ஸா மாநிலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அலுவலராகப் பணிபுரிகிறார்.

## சிந்தியா பதில்கள்

* டியர் சிந்தியா! இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் நமது குரல் காதில் விழவே விழாதா?

வி. பாலேந்திரன், மட்டக்களப்பு.

கூட்டரசாங்க கட்சிகளின் கூச்சல்கள் மத்தியில், இந்தியப் பிரதமர் குஜ்ரால் காதில் நம் குரல் கேட்க வாய்ப்பில்லை. அமெரிக்க அதிபர் கிளின்ரனுக்கு சென்றவாரம்தான் காது கேட்கும் மெசின் பூட்டியிருக்கிறார்கள்.

* சிந்தியா! அரசின் புதிய யோசனைகள் பற்றி என்ன சொல்கிறீர்?

சி. அம்பலவாணர், கொழும்பு-13.

புதிய மொந்தையில் பழைய கள். இது அதிகமாகவே வெறிக்கச் செய்யும். மயக்கும். படுக்கையில் தள்ளிவிடும்!

* தீர்வுப் பொதி இறுதியாக இப்படியாகி விட்டதே?

எஸ். வாசன், திருமலை.

இப்படித்தான் ஆகும் என்று உங்கள் 'முரசு' ஆரம்பத்தில் இருந்தே ஆணித்தரமாக புட்டுப் புட்டு வைத்துக்கொண்டுதானே இருந்தது!

* சில பந்துவீச்சாளர்கள் ஒரே ஆட்டக்காரரை தொடர்ந்து ஆட்டம் இழக்கச் செய்கிறார்களே?

என். ஷாஜகான், கண்டி.

உண்மைதான். இந்திய கிரிக்கெட் வீரர் கவாஸ்கரையும்- இங்கிலாந்தின் வீரர் அண்டர்வுட் 12 தடவைகள் ஆட்டமிழக்கச் செய்திருக்கிறார்.

* ஏ.ஆர். ரகுமானின் 'வந்தே மாதரம்' எப்படிச் சிந்தியா?

ஆர். இரகுநாதன், சிலாபம்.

இந்தியாவின் தேசிய கீதத்தை இளம் தலைமுறையின் உதடுகளில் உட்காரவைத்திருக்கிறார். அதற்காக பழைய கீதத்தை தூசு தட்டி வர்ணவேலைப்பாடுகள் செய்திருக்கிறார்.

* 'டீன் ஏஜ்' என்றால் என்ன அர்த்தமுங்க?

பி. தேவராணி, மாத்தளை.

அது வந்துங்க, தேர்டீன்... ஃபோர்டீன் என்று ஆரம்பித்து நைன்டீன் வரை உச்சரித்துப் பாருங்க, எல்லாம் டீன் தானுங்களே! அதுதானுங்க 13-19 வயதுவரைக்கும் 'டீன் ஏஜ்' என்று சொல்றாங்கோ. நீங்க எத்தனையாம் டீனுங்க?

* இந்தியாவின் புதிய பந்துவீச்சாளர் ஹர்விந்தர் சிங் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எம். முரளி, வவுனியா.

பதினெட்டு வயது இளம் சிங்கம். இப்போதும் கல்லூரியில் படிக்கிறார். இவரை இந்திய அணிக்கு சிபாரிசு செய்தவர் முன்னாள் கப்டன் ஸ்ரீகாந்த். இவரது மானசீக குரு கபில்தேவ்.

* சயீத் அப்ரிடியின் ஆட்டம் எப்படி?

கே. சையத், கல்முனை.

அபாரம்! ஆனால், இப்போதும் 16 வயது என்று காண்பித்துக் கொண்டிருப்பது தான் அநியாயமப்பா!

* தாங்கள்தான் பெரியவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பற்றி என்ன சொல்கிறீர்?

செல்வி கே. ராசிதா, தெல்தோட்டை.

அப்படி நினைக்கும் சிலரால்தானே துண்டு துண்டாகிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு தடவை மூக்குக்கும், கண்ணுக்கும் இடையே 'மூக்குக் கண்ணாடி' விடயத்தில் சண்டை.

"மூக்காகிய என் மேல்தான் மூக்குக் கண்ணாடி அமர்ந்திருக்கிறது. அதனால் எனக்குத்தான் சொந்தம்!" என்றது மூக்கு.

"எனக்குத்தான் உபயோகப்படுகிறது. எனவே எனக்குத்தானே சொந்தம்?" என்றது கண்.

கண்ணும், மூக்கும் இப்படி உரிமை கொண்டாடி சண்டை போட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த காது என்ன சொன்னது தெரியுமா?

"ஏன் முட்டாள்தனமாகச் சண்டை போடுகிறீர்கள்? மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டிருப்பது நான்தானே? எனக்குத்தான் சொந்தம்!" என்றது.

* காதலர்கள் எப்படி இருக்க வேண்டும்?

ஏ. யூடிற்றா, நீர்கொழும்பு.

செருப்புக்கள் போல இருக்கவேண்டும். அவை ஒன்றைப்பிரிந்து ஒன்று வாழ்வதில்லையல்லவா?

* மக்களின் உணர்வுகளை மதிக்காதவர்களை மக்கள் ஏன் மதிக்கிறார்கள்?

ஜி. ராகவன், நாரைதீவு.

மதிப்பார்கள் என்று யார் சொன்னது? ஃபிரான்ஸ் புரட்சி நடப்பதற்கு முன்னால் மக்கள் பட்டினியில் அலைந்தார்கள். அப்போது ஆட்சி புரிந்த மன்னரின் பிரதிநிதியான கவர்னர் ஒருவர்: "புல்லைத் தின்னுங்கள்!" என்று கேலியாகச் சொன்னார்.

சில ஆண்டுகளின் பின்னர் ஃபிரான்ஸ் புரட்சி வெடித்தது. கொடுங்கோல் மன்னனையும், அதிகாரிகளையும் புரட்சியாளர்கள் வெட்டிக் கொன்றனர்.

அந்தக் கவர்னரையும் வெட்டப். போனார்கள். அப்போது ஒருத்தன் ஓடி வந்து "நிறுத்துங்கள்!" என்று தடுத்தான்.

ஏன் தடுக்கிறான்? என்று எல்லோரும் கோபமாகப் பார்த்தார்கள்.

அவன் மள மளவென்று கவர்னரின் வாயில் ஒரு கட்டுப் புல்லைத் திணித்தான். பின்னர் "சரி இப்போது வெட்டுங்கள்!" என்றானாம்.

* சிலரிடம் பணம் இருக்கிறது என்பதற்காக அவர்கள் குணம் அறியாமல் புகழ்கிறார்களே?

எஸ். புஸ்பராணி, ஹெந்தலை.

ஒரு கோடீஸ்வரன் வீட்டில் ஓர் ஏழை. ஏழையாக இருந்தாலும் தன்மானம் கொண்டவன். ஊரில் இருப்பவர்கள் பலர் தன்னைப் புகழ்ந்தாலும் அவன் மட்டும் புகழ்வது இல்லையே என்று கோடீஸ்வரனுக்குக் கவலை.

ஒருநாள் ஏழையை தனியாக அழைத்தான்: "என்னிடம் நூறு பவுண் தங்கம் இருக்கிறது. அதில் ஐந்து பவுண் தருகிறேன். என்னைப் புகழ்வாயா?" என்று கேட்டான்.

"ஆக, ஐந்து பவுண்தானா? இது சரியான பங்கு இல்லையே? நீ என்னை சரியாக கௌரவித்தால்தான் புகழமுடியும்?" என்றான் ஏழை.

"சரி, பாதியளவு தங்கம் தருகிறேன். புகழ்வாயா?"

"இரண்டு பேரும் சமமான பின்னர் ஒருவரை ஒருவர் புகழ முடியுமா?"

"அப்படியா, சரி, என்னிடம் உள்ள தங்கம் அனைத்தையும் தருகிறேன். நன்றிக்கடனாக புகழலாம் அல்லவா?" என்று கேட்டான் கோடீஸ்வரன்.

அதற்கு ஏழை சொன்னான்:

"எல்லாத் தங்கமும் என்னிடம் வந்தால் நான் மற்றவனை ஏன் புகழவேண்டும்? மற்றவர்கள் அல்லவா என்னைப் புகழ வேண்டும்!"

* சிந்தியா, ஞானம் பெறுவது எப்படி?

கே. உஷா, கொழும்பு-06.

அனுபவமே ஆசான்! அந்த ஆசான் கற்றுத்தருவதே ஞானம்!

பொறுமையைப் பற்றி தன் சீடர்களுக்கு போதித்தார் ஒரு குரு. "பொறுமையாக இருந்தால், தண்ணீரைக்கூட ஒரு சல்லடையிலே எடுத்துச் செல்லலாம்," என்றார்.

சிஷ்யர்களுக்கு ஒரே குழப்பம்.

"எப்படிக் குருவே?"

குரு சொன்னார்:

"அது உறையும் வரையில் பொறுத்திருக்க வேண்டும்!"

* பார்த்திபனின் 'அபிமன்யு' அசத்தல்தானே?

பி. சக்தீஸ்வரன், புத்தளம்.

பாவம்! ரவளியைத்தான் சரியாக உபயோகிக்காமல் சந்தன சோப்பை தண்ணீரில் கரைத்தது போல வீணடித்துவிட்டார்கள்.



* ரம்பா-குஷ்பு இடை அழகிப் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள்?

ஆ. மாறன், கொழும்பு-10

எடையழகிப் போட்டி வைத்தால் குஷ்பு



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 103

இராமபிரான் நினைவிழந்து ஒரு கற்பாறையில் சாய்ந்திருந்தார். அவருடைய திருப்பாதங்களைப் பிடித்தபடி இலக்குவன் தரையில் புரண்டார். ஆஞ்சநேயர் சோர்வடையவில்லை. அவருடைய அங்கங்கள் அனைத்தும் அடக்க முடியாத சினத்தால் துடித்தன. கண்களை மூடியவண்ணம் ஸ்ரீ இராம மந்திரத்தையே முணுமுணுத்துக் கொண்டிருந்தார். சுக்கிரீவன் முதலான ஏனைய வானரவீரர்களும் தாங்கொணாத் துயரத்தால் துடித்துக்கொண்டிருந்தனர்.

'சீதாப்பிராட்டியாரைச் சிறை மீட்பதற்காகவே இலங்காபுரி நோக்கிப் படையெடுத்து வந்தோம்! எண்ணற்ற அரக்கர் படையினரைக் கொன்று குவித்தோம். அதே போன்று எம் வீரர்கள் பல இலட்சம்பேரைப் பறிகொடுத்தோம். இனி என்ன செய்வது? போரிட்டும் என்ன பயன்? சீதாப்பிராட்டியார் இல்லையேல் இராமபிரானும் இல்லை; இளைய பெருமாள் இலக்குவனும் இல்லை. இந்நிலையில் நாம் தான் உயிருடனிருந்து என்ன லாபம்?' என்று வானரவீரர்கள் அனைவரும் கருதினர். கடலிலே சென்று விழுவதா, மலைச் சிகரங்களிலிருந்து குதித்து மண்டைகளைப் பாறைகளில் மோதவிட்டுச் சாவதா? என்று ஒவ்வொருவரும் எண்ணி வருந்திக் கொண்டிருந்தனர்.

இலங்காபுரியிலிருந்து திருச்சடை தன் தந்தையாரான விபீடணரைச் சற்று



முன்னர்தான் காண வந்திருந்தார். தந்தையும் மகளும் பிரிந்து பல நாட்களாகியிருந்தமையினால் பல விடயங்களையும் பரிமாறிக் கொள்வதற்காக இருவரும் வேறோர் புறத்திலிருந்தனர். மகளுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு விபீடணர் இராமபிரானை நோக்கி வந்து கொண்டிருந்தார். சீதாப்பிராட்டியார் அசோகவனத்தில் எவ்வாறு இருக்கிறார் என்பதனையும் மகளிடமிருந்து அறிந்தமையினால் அத்தகவலையும் இராமபிரானிடம் கூறும் நோக்குடன் வந்த விபீடணர் அங்கு கண்டகாட்சி அவரைக் கலக்க முறவைத்துவிட்டது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை சமுத்திரம்போல் பரவியிருந்த வானரவீரர்கள் அனைவரும் துயரம் தோய்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

## சந்தேகமும் தெளிவும்

இராமபிரானும் இலக்குவனும் நினைவிழந்த நிலையில் கிடப்பதைக் கண்ட விபீடணர் ஒரு கணம் பெருங்குழப்பமடைந்தார். சுக்கிரீவன் ஓடோடி வந்து விக்கி விக்கி அழுது, "சீதாப்பிராட்டியாரின் சிரசை இந்திரசித்து துண்டித்துவிட்டான். இரத்த வெள்ளத்தில் உடல் வேறு தலைவேறாக பிராட்டியாரின் சடலம் போர்க்களத்தில் கிடக்கிறது." என்று பலமாக அழுதபடி கூறினான்.

விபீடணருக்கு இத்தகவல் எத்தகைய பாதிப்பையும் தரவில்லை. அவருடைய முகத்தில் புன்னகை அரும்பியது. இதனைக் கண்ட சுக்கிரீவனுக்கு மட்டுமல்ல, அங்கு நின்றிருந்த ஏனையோருக்கும் விபீடணர் மீது சந்தேகப் புயலைக் கிளப்பி விட்டது. 'இராவணனுக்குத் தம்பி அல்லவா? இவரும் துரோக எண்ணங்களுடன்தான் இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்ததாக நாடகமாடியிருக்கிறார் போலும்!' என்றே அங்கிருந்த பலரும் ஐயப்பட்டனர்.

விபீடணர் நேராகச் சென்று இராமபிரானின் தாளிணைப் பற்றினார். ஆஞ்சநேயர் கண்களை அப்போது திறந்திருந்தார். அவரை அருகில் அழைத்த விபீடணர், "ஐயா மாருதி! சகல ஞானமும் கைவரப்பெற்ற தாங்களுமா இந்திரசித்துவின் மாயவிளையாட்டுக்களை உண்மை என்று கருதிவிட்டீர்கள்? அன்னை ஜானகிக்கு எதுவும் நேரவில்லை. மாயாஜால வித்தையில் விண்ணனான இந்திரசித்து பிராட்டியாரைப் போன்ற மாயத் தோற்றத்தை உங்கள் முன்னிலையில் காட்டி அதன் தலையைச் சீவியிருக்கிறான். உண்மையாகவே சீதாப்பிராட்டியாரின் தலையைச் சீவியிருந்தால் அத்தலை எங்கே? அந்த உடல் எங்கே? சிந்தப்பட்ட இரத்தம்தான் எங்கே? பிராட்டியார் மீது மோகம் கொண்டு கடத்தி வந்த அண்ணன் இராவணன்தான் பிராட்டியாரைக் கொன்று விட அனுமதிப்பானா?" என்று சற்றுப் பலத்த தொனியில் கூறினார். மயக்க முற்றிருந்த இராமபிரான் மற்றும் இலக்குமணன் ஆகிய அனைவருக்கும் விபீடணரின் குரல் கேட்டது. தூக்கத்திலிருந்து எழுபவர் போல் அனைவரும் எழுந்திருந்தனர். இராமபிரான், இவ்வாறு மோசம் போய் விட்டதைவிட்டுத் தன்னைத்தானே நொந்து கொண்டார்.

☆☆☆

பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்துவதற்குரிய கிரியைகளைச் செய்வதற்கு இந்திரசித்துக்கு அவன் செய்த மாயலீலையின் மூலம் அவகாசம் கிடைத்தது. அதில் தன் முழுக்கவனத்தையும் செலுத்தலானான்.

இத்தனை தூரம் தம்மை ஏமாற்றிவிட்டவனை இனிமேல் விட்டுவைக்கக்கூடாதென வெகுண்டெழுந்தார் இலக்குவன். இதற்கிடையில் அரக்கர் படைகள் மென்மேலும் போர்க்களத்தில் வந்து மொய்த்தன. வானரவீரர்களும் அணி அணியாகச் சென்று அரக்கர் படைகளுடன் மோதினர். இரு தரப்பினரும் ஏராளமாக மாண்டு வீழ்ந்தனர். ஆஞ்சநேயர், இலக்குவன், சுக்கிரீவன், அங்கதன் போன்றோர் மிக மூர்க்கத்தனமாக மோதி அரக்கர்படைத் தளபதிகள் பலரையும் கொன்று குவித்தனர்.

## மகோதரனின் மாயாஜாலம்

இதற்கிடையில் அரக்கர் படையைச் சேர்ந்த மகோதரன், இந்திரனைப்போல் வடிவெடுத்துப் போர்க்களம் புகுந்தான். இந்திரனின் வாகனம் ஐராவதம் போன்ற யானை யின் மீது அவன் வர, அரக்க வீரர்களுடைய தோற்றங்களையும் தேவர்கள், முனிவர்கள் போல் மாற்றிக் கொண்டான். 'தேவர்களும் முனிவர்களும் இராவணன் படையில் இணைந்து எம்முடன் பொருத வருகின்றனரே' என்று வானரவீரர்களும் தளபதிகளும் அஞ்சி அஞ்சி நடுங்கலாயினர். இக்காட்சி இலக்குவனையும் கலக்கி விட்டது. ஆஞ்சநேயரை தன் அருகே அழைத்து, "தேவேந்திரன், தேவர்களுடனும் முனிவர்களுடனும் கொண்ட பெரும் படையுடன் எம்மை எதிர்த்துப் போரிட வருகின்றாரே! இத்தனைக்கும் நாம் என்ன பிழை செய்தோம்?" என்று வினவினார்.

அனுமன் வாள் முகம் நோக்கினன்
ஆழியை அகற்றித்
தனுவலம் கொண்ட தாமரைக்
கண்ணவன் தம்பி
முனிவர் வானவர் முனிந்து வந்து
எய்த யாம் முயன்ற
துனி இது என் கொலோ சொல்லுதி
விரைந்து எனச் சொன்னான்.
(யுத்த காண்டம்:-2551)

**பொருள்:**

தாமரை போன்ற கண்களை உடைய இராமபிரான், தனது சக்கராயுதத்தை விட்டுவிட்டு வில்லினை ஏந்தியிருக்கிறார். அவருடைய தம்பியாகிய இலக்குமணன், ஒளிபொருந்திய முகம் கொண்ட அனுமனைப் பார்த்து, "தேவர்களும் முனிவர்களும் இணைந்து நம்முடன் போரிட வந்திருக்கிறார்களே! இவ்வாறு இவர்களுக்குக் கோபம் தரக்கூடிய பாபங்கள் எவற்றையாவது நாம் செய்திருக்கிறோமா? இதனை அறிந்து விரைவாகச் சொல்ல வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார்.

இந்திரனுடன் தேவர்களையும் முனிவர்களையும் போர்க்கோலத்தில் கண்ட வானர வீரர்கள் பலர் அஞ்சி நடுங்கினர். சிலர் களத்தை விட்டோடவும் முற்பட்டனர்.

இந்திரசித்து வேண்டுமென்றே இத்தகையதொரு சூழ்ச்சியைச் செய்தான். வானரப்படை அணிகளையும் தளபதிகளையும் இவ்வாறு

## பிரம்மாஸ்திரத்தால் வீழ்ந்த இலக்குமணன்

திக்குமுக்காடச் செய்துவிட்டு மேக மண்டலத்துள் தாவி மறைந்து கொண்டான். அங்கிருந்தவாறே பிரம்மாஸ்திரத்தை எடுத்து உரியமந்திரங்களை ஜெபித்த வண்ணம் இலக்குவனையும் ஏனைய படைவீரர்களையும் நோக்கிச் செலுத்தினான். அந்தக் கொடிய பாணம் பல இலட்சத்து கொடிய கணைகளுக்கும் மேலாக சக்தி வாய்ந்தது. இக்கணை பட்டதும் இலக்குவனின் உடலெங்கணும் ரணங்கள் ஏற்பட்டன. குருதி வெள்ளம் கரை புரண்டோடியது. அடியற்ற மரம்போல் சாய்தார்.

இலக்குவன் வீழ்ந்ததைக் கண்ட ஆஞ்சநேயர் திகைத்தார். "இந்திரனே இந்தக் கணையைத் தொடுத்து, இந்த இணையிலா வீரனைச் சாய்த்திருக்கிறான். அவனை இன்று நான் சும்மா விட்டுவிடப்போவதில்லை!" என்று சங்கற்பம் செய்வதற்கு முன்னரே அவர்மீது ஏதோவொரு இனந்தெரியா அலை வீசியது. அவரும் தரையில் வீழ்ந்தார். சுக்கிரீவன், அங்கதன் போன்றோரும் தரையில் வீழ்ந்தனர். வானரப் படைகளின் சைனியமும் சூறாவளியில் அகப்பட்ட மரங்கள்போல சாய்ந்தது.

## இராஜதாரன்

## இராமரடைந்த பெருந்துயரம்

இராமபிரான் தேவர்களுக்கு முறைப்படி பூசைகளை முடித்துக் கொண்டிருந்தமையினால் போர்க்களத்தில் நடைபெற்ற அனர்த்தங்களை அறிந்திருக்கவில்லை. பூசைகள் முடிவடைந்ததும் எழுந்து வந்து போர்க்களத்தைப் பார்த்தார். பல வகையான ஒலிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் அவ்விடத்தில் பேரமைதி நிலவுவதை அவதானித்தார். அதே நேரத்தில் இலங்காபுரி கோட்டைக்குள் மகிழ்ச்சி ஆரவாரங்கள் எழுந்த வண்ணம் இருப்பதையும் கண்டார். ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்தவராக வேகமாக நடக்கலானார்.

இராமபிரானுடைய கண்களில் சுக்கிரீவன்தான் முதன் முதலில் தென்பட்டான். அவனுடைய உடல் முழுவதும் சிறுசிறு காயங்கள் காணப்பட்டன. குருதி முழுவதும் வெளியேறி, காய்ந்து போய்க்கிடந்தான். சுக்கிரீவன் நிலைகண்டு இராமபிரான் பெருந்துயரடைந்தார். அருகருகே அங்கதன் மற்றும் தானைத் தளபதிகளின் உடல்கள் வீழ்ந்து கிடப்பதையும் கண்டார். அவருடைய கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வெள்ளம் காரைபுரண்டோடியது. அவருடைய பார்வையில் ஆஞ்சநேயர் தென்பட்டார். அவரருகில் ஜாம்பவனும் கிடந்தார்.

அனுமனின் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. இராமபிரான் ஓடிச் சென்று ஆஞ்சநேயரின் அருகே அமர்ந்த வண்ணம் அவரின் தலையை எடுத்துத் தன் மடிமீது வைத்தார். அவருடைய வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளைக் கேட்டார். "இராம ஜெயம்... இராம ஜெயம்..." என்ற மந்திரமே ஆஞ்சநேயரின் மூச்சோடு கலந்து ஒலித்துக் கொண்டிருந்தது. "மாருதி! இதோ நானே உன்னுடன் இருக்கிறேன்! கண்களைத் திறந்து பார்!" என்று இராமபிரான் கூறியதும் அனுமன் தன் கண்களை அகல விரித்து இராமபிரானின் திருமுகத்தைப் பார்த்தார். துள்ளி எழுந்து இராமபிரானின் தாளினைத் தொட்டு வணங்கினார். அவருடைய உடலில் காணப்பட்ட ரணங்கள் எல்லாம் மறைந்துவிட்டன.

ஆஞ்சநேயர் மயக்கம் நீங்கி எழுந்ததைப் போல, அதே கணத்தில் சுக்கிரீவன், அங்கதன் போன்றாரும் எழுந்து கொண்டனர். ஆஞ்சநேயர் இலக்குவன் கிடந்த பக்கமாகத் தன்பார்வையைச் செலுத்தினார். இராமபிரானும் அவ்வண்ணமே அத்திசையை நோக்கினார். ஆஞ்சநேயரைப் போன்ற மயக்க நிலையிலில்லாமல், இலக்குவன் நீண்ட உறக்கத்தில் கிடப்பதைக் கண்டு இராமபிரான் கோவெனக் கதறிக் கொண்டு ஓடிச்சென்றார். அவரைத் தொடர்ந்து ஏனையோரும் அங்கு சென்றனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 101**

**சரியானவிடை:- புலத்திய மாமுனிவர்.**

1. ந.நிரஞ்சன், பண்டாரத்துறை, கரணவாய்மத்தி.
2. தி.மங்கள கௌரி, பிரதான வீதி, இறத்தோட்டை.
3. எஸ்.ரேணுகா, 25, டிம்புலர் வீதி, அட்டன்.
4. செல்வி கே.ஜெயவாணி, பிரதான வீதி, காவத்தை.
5. எஸ்.எம்.எ.கரீம், 201, காலிவீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

**போட்டி இல. 103** கேள்வி:- **மகோதரன் யாருடைய வடிவத்தை எடுத்தான்?**

ஒக்டோபர் 18 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.103, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# பூதம் வந்தாச்சு

## காதிலை பூ கந்தசாமி

கிணறுவெட்டப் பூதம் கிளம்பிய கதைதான் நடந்திருக்கிறது என்று சென்றவார முரசத்தில் தெரிவிக்கப்பட்டதை படித்த காதிலை பூ கந்தசாமியார் உடனே சர்ரென்று கிளம்பிப் போய், பூதத்தை பேட்டி கண்டுவிட்டாராம்.

**கா.பூ.க:** (அண்ணாந்து பார்த்து பிரமிக்கிறார்) அப்பப்பா, அம்மம்மா.. அக்கக்கா...

**பூதம்:** ஹாஹாஹா.. ஹோஹோஹோ.. என்ன பிறந்தநாள் வாழ்த்துப் படிக்கிறீரா?

**கா.பூ.க:** அல்ல அல்ல அல்ல, வியந்ததால் வந்த வார்த்தைகள். சிறந்த நாள் இன்று சிறந்தநாள் தொல்லைகள் சூழ பூதம் வந்து கிளர்ந்த நாள்.

**பூதம்:** யோவ்! நீர் போற்றுகிறீரா? அல்லது தூற்றுகிறீரா...

**கா.பூ.க:** அபத்தம்! அபத்தம்! தங்களைத் தூற்றும் உரிமை யாருக்கு இருக்கிறது? போற்றமட்டும்தானே வாயைத் திறக்க வேண்டும்!

**பூதம்:** ஆமாம்! தூற்றினால் நீர் மன்னிப்புக் கேட்க வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் உமது மண்டை பிளந்துவிடும்!

**கா.பூ.க:** ஜனநாயகப் பூதம் அய்யா நீர்!

**பூதம்:** ஹாஹாஹா ஹோஹோஹோ

**கா.பூ.க:** அப்படிச் சிரிக்காதீர், அகிலமே குலுங்குவது மாதிரி இருக்கிறது!

**பூதம்:** குலுக்கல், கலக்கல், குழப்பல் மூலம் பறித்தல், கிழித்தல், கெடுத்தல் செய்யவே யான் அவதரித்தேன்!

**கா.பூ.க:** பேஷ் பேஷ் புனிதமான தொழில்!

**பூதம்:** தொழில் அல்ல தொண்டு!

**கா.பூ.க:** தொண்டல்ல குண்டு!

**பூதம்:** ஹா ஹோ ஹீ... என்ன சொல்கிறீர் நீர்?

**கா.பூ.க:** ஹீரோசிமா, நாகசாக்கியில் அமெரிக்காக்காரன் அணுக்குண்டு போட்டான். இங்கும் போட்டுவிடுவானோ என்று பயந்துகொண்டிருந்தோம், நல்லவேளையாகப் போடவில்லை, ஆனால்...

**பூதம்:** ஹா ஹோ ஹீ... என்ன ஆனால்?

**கா.பூ.க:** தாங்கள் அடிக்கடி கிளம்பிவந்து போடும் குண்டுகள் அணுக்குண்டுகளை விட ஆபத்தானவையாக உள்ளன. ஆனால் ஒரு வித்தியாசம்?


**பூதம்:** ஹா ஹோ ஹீ.. என்ன வித்தியாசம் என்று இயம்பும்?

**கா.பூ.க:** அமெரிக்காக்காரன் போட்ட அணுக்குண்டின் பின்னர் உலக யுத்தம் நின்று போனது. நீர் போட்ட குண்டுகளால்தான் இங்கு யுத்தமே தோன்றி வளர்ந்தது!

**பூதம்:** ஹாஹா ஹோஹோ ஹீஹீ..

**கா.பூ.க:** ஏனய்யா இப்படி கொக்கரிக்கிறீர்?

**பூதம்:** எப்போதெல்லாம் நான் கிளம்பி வந்




தேனோ, அப்போதெல்லாம் கையில் இருந்த ஒப்பந்தங்களையெல்லாம் எவர் எவர் எப்படியெல்லாம் வீசியெறிந்து விட்டு ஓட்டம் பிடித்தார்கள் என்று நினைத்துப் பார்த்தேன், சிரிப்பு பிய்த்துக் கொண்டு வந்துவிட்டது!

**கா.பூ.க:** நாடு பற்றி எரிகிறது, நீர் நகைத்துக் கொண்டிருக்கிறீர்?

**பூதம்:** ரோம் நகர் பற்றி எரிந்துகொண்டிருக்க பிடில் வாசித்துக்கொண்டிருந்தான் நீரோ மன்னன்.

**கா.பூ.க:** அவன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான். நீர் அறிக்கையொன்றை கையில் பிடித்து வாசித்துக் கொண்டிருக்கிறீர்!

**பூதம்:** கூத்தாடிகள் ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரோ கண்ணா?

**கா.பூ.க:** ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிகளுக்கு கொண்டாட்டம்தானே!

**பூதம்:** ஹாஹா ஹோஹோ.. குட்டையைக் குழப்பினால்தானே மீன் பிடிக்கலாம்! தீயை வளர்த்தால்தானே குளிர் காயலாம்!

**கா.பூ.க:** ஏனய்யா உமக்கு நல்ல புத்தியே வராதா?

**பூதம்:** ஹாஹாஹா.. புத்தியைத் தீட்ட வேண்டியவர்கள்தானே பின்னால் நின்று என் கையில் கத்தியைத் தந்து அனுப்பியிருக்கிறார்கள்!

**கா.பூ.க:** நாட்டை பிணக்காடாக்குவதுதான் உமது நோக்கமா?

**பூதம்:** எனக்கென்று ஒரு நோக்கமும் கிடையாது! என்னை கிளம்ப வைத்தவர்களும், என்னை வளர வைப்பவர்களும் என்ன நோக்கம் கொண்டிருக்கிறார்களோ அது தான் என் நோக்கம்!

**கா.பூ.க:** ஓஹோ பொது நலப் பூதம் போல் இருக்கிறது!

**பூதம்:** நீர் என்ன எதிர்க்கட்சியா? அல்லது ஆளும் கட்சிக்குள் உள்ள எதிரிக்கட்சியா?

**கா.பூ.க:** ஏன் அப்படிக் கேட்கிறீர்?

**பூதம்:** அவர்கள்தான் அடிக்கடி இரகசியமாக வந்து காதோடு காதாகப் புகழ்ந்து தள்ளிவிட்டுப் போகிறார்கள்! ஹா ஹா ஹா.. ஹோஹோஹோ!

**கா.பூ.க:** இரகசிய உறவோ?

**பூதம்:** அவசிய உறவு! ஹாஹாஹா..

**கா.பூ.க:** பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார்கள்.

**பூதம்:** அப்படியானால்தானே ஆட்சிக் கட்டிலில் அமர முடியும்!

**கா.பூ.க:** மக்களுக்கு மரணக் கட்டில்தானா?

**பூதம்:** சதுரங்கத்தில் வெட்டப்படும் காய்களுக்காக யாரும் வேதனைப்படுவதில்லை!

**கா.பூ.க:** முடிவுதான் என்ன?

**பூதம்:** ஹாஹாஹா.. முடிவே கிடையாது, அவ்வப்போது முடிகள் சூடும் தலைகள் மட்டும் மாறிக்கொண்டிருக்கும்!

**கா.பூ.க:** நீரும் அடிக்கடி வந்து மிரட்டிக் கொண்டே இருப்பீராக்கும்!

**பூதம்:** நானாக எப்போதப்பா வந்தேன்? தாமாக கிணறுவெட்டி என்னை கிளம்ப வைக்கிறார்கள்! கிளம்பி வந்தபின் நாட்டைக் குழப்பாமல் நான் போகலாமா?

**கா.பூ.க:** போனால் என்னவாம்?

**பூதம்:** என்னையும் புலி என்று முத்திரை குத்திவிடுவார்கள்! ஹாஹாஹா

**கா.பூ.க:** பொல்லாத பூதம் என்று உன்னைத் தூற்றப்போகிறார்கள்?

**பூதம்:** அப்படிச் சொன்னவர் ஒருவர் படும் பாட்டைப் பார்த்துவிட்டு, சொல்ல நினைத்தவர்கள்கூட கொல்லைப் புறத்தில் ஓடி ஒளிந்துவிட்டார்களாம். ஹோஹோஹோ கொக்கரக்கோ... கோ.கோ..

**கா.பூ.க:** மதிப்புக்குரிய பூதமே! சமாதானத்தைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

**பூதம்:** உப்பில்லாப் பண்டம்! அதைப் போடும் குப்பையிலே!

**கா.பூ.க:** குப்பை என்றால் உமக்குத்தான் கோபம் வருமாமே?

**பூதம்:** எனக்கு வராது, என்னை நம்பும் அடியார்களுக்குத்தான் கோபம் வரும்!

**கா.பூ.க:** உமது திருவிளையாடலுக்கு எல்லையே இல்லையா?

**பூதம்:** ஏன் இல்லை, ஒன்றே இனம், ஒன்றே மொழி, ஒன்றே மதம் என்றாகும்போது என் திருவிளையாடலும் நின்று போகும்!

**கா.பூ.க:** மதம் பிடித்திருக்கிறது உமக்கு!

**பூதம்:** ஆமாம் ஒரே ஒரு மதம்தான் பிடித்திருக்கிறது!

**கா.பூ.க:** உம்மைத் தோளில் தூக்கிச் செல்ல காத்திருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் யார்?

**பூதம்:** முகமூடியை கழற்றிப் பார்த்தால் நீரே மூச்சித்துப் போவீர். போர்வைகளை விலக்கிப் பார்த்தால் நீரே பொறி கலங்கிப்போவீர்! பல அணிகளில் இருந்தும் தனித் தனியாக வந்து தோள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! வெற்றிக்கனி நான் பறித்துக் கொடுத்தால் பகிர்ந்து கொள்ளும்போது மட்டும் சண்டையிட்டுக் கொள்வார்கள்! ஹாஹாஹா

**கா.பூ.க:** உமக்காக எதுவும் செய்வார்கள் போலிருக்கிறது!

**பூதம்:** ஹாஹாஹா இப்போது என்னைத் தோளில் தூக்கிக்கொண்டு உலா நடத்துவார்கள். வரவேற்பு இருப்பதாக தெரிந்தால் என்ன செய்வார்கள் தெரியுமா?

**கா.பூ.க:** என்ன செய்வார்கள்?

**பூதம்:** என் தோளிலேயே ஏறி நின்று முதலில் செல்வாக்குத் தேடுவார்கள்! பின்னர் தேர்தலில் வாக்குத் தேடுவார்கள்!

**கா.பூ.க:** சுயநலவாதிகள் என்கிறீர்களா?

**பூதம்:** அரசியல்வாதிகள் எப்போதப்பா பொது நலவாதிகளாக இருந்திருக்கிறார்கள்?

**கா.பூ.க:** உமக்கே இல்லையோ நம்பிக்கை?

**பூதம்:** நம்பிக்கை, தும்பிக்கை... ஹாஹாஹா எல்லாமே சுயநலக் கை! என்னைப் போல் பூதங்கள் கிளம்ப கை கொடுக்கும் கையாக இருப்பதால், என்பங்குக்கு நானும் கொடுக்கிறேன் கை! ஹா ஹா ஹா. ஹோ ஹோ ஹோ....

**கா.பூ.க:** உம்மை வரலாற்றின் குப்பைத் தொட்டியில் தூக்கிவீச இங்கே நீளாதோ பல கை!

**பூதம்:** பலகை எதற்கு, பேச்சுவார்த்தைக் கதவு செய்யவா? நான்தான் கூடாரத்தையே தகர்க்கப் போகிறேனே, இனி எதற்கு கதவு?

**கா.பூ.க:** நான் சொன்னது பல கைகளை, கை,கை..

**பூதம்:** என்ன துணிச்சல்... யாரங்கே.. ஓடிவாருங்கள்....

(காதிலை பூ கந்தசாமியார் காணாமல் போகிறார்)



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.
www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# கனவு

சின்னம் சிறு கிளியே
கண்ணம்மா
சேராத இடம் ஏன் சேர்ந்தாய்?
பக்கிங்ஹாம் மாளிகை
என்ற தங்கக் கூண்டுக்குள்:
நீயாக ஏன் போய் சிறைப்பட்டாய்?





தருவது வியோடெ




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு.

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


உலகைக் கவர்ந்த ஜோடிப் பொருத்தம்தான். கிட்டத்தட்ட 40 இலட்சம் மக்கள் சாள்ஸ்-டயானா திருமணக் காட்சியைத் தொலைக் காட்சிகளில் கண்டு களித்தனர்.

யார் கண்பட்டதோ என்பார்களே; ஆனால், சாள்ஸ், டயானா ஜோடி பிரிய யார் கண்பட்டதும் காரணமல்ல. சாள்ஸ் கண்கள் பிற அழகிகள்மீது பட்டதுதான் பிரிவுக்கு முதற்காரணம்.

↓ தென் துருவத்தில் பனிபடர்ந்த பிரதேசத்தில் வாழும் பென்குயின் பறவைகள் விசித்திரமானவை. எந்தப் பிராணியும் சீவிக்க முடியாத அக்கடுங்குளிரில் இவை மட்டும் உல்லாசமாக வாழ்கின்றன. இங்கு வாழும் பென்குயின்களின் எண்ணிக்கை 4 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மார்ச் மாத ஆரம்பத்தில்தான் தென் துருவத்தில் கடும் குளிர் காலம் ஆரம்பமாகும். இக்காலத்தில்தான் பென்குயின்களின் காதல் களியாட்டம் ஆரம்பமாகும். ஒரு வாரம் வரை தாங்களாகவே தேர்ந்து எடுத்துக்கொள்ளும் துணையுடன் கொஞ்சிக்குலவும். பெண் பென்குயின் ஒரேயொரு முட்டையை இட்டு ஆண் பறவையை அடைகாக்க விட்டுவிட்டு வடக்கு நோக்கி-சற்று வெப்பமான இடத்துக்கு தன்னைப் போன்ற ஏனைய 'பெண்'களுடன் சென்றுவிடும்.

ஆண் பென்குயின்கள் 65 நாட்கள் அடைகாக்கும் குஞ்சு பொரிக்கும்போது குளிரின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்குமாதலால் தன் பாதங்களிலேயே குஞ்சுகளை வைத்து, அதனுடைய நீளமான கம்பளி அங்கி போன்ற தோலால் மூடிவைத்துக் கொள்ளும். எத்தனை பொறுப்பான ஆண் பென்குயின்கள் பார்த்தீர்களா!

இவ்வாறு இரண்டு மாதங்கள் கழிந்தபின் தாய் பென்குயின் நன்றாக உணவு உண்டு கொழுத்து தன் ஆண் துணையையும் குஞ்சினையும் தேடிவரும். இத்தனை காலமும் உண்ண உணவு எதுவுமின்றி, கடும் குளிரில் கதிரவனை முற்றிலும் காணாத இருள் சூழ்ந்த நிலையில் இருந்த ஆண் பென்குயின் சற்று மகிழ்ச்சி அடையும்.

தன் கால்களுக்குள்ளிருந்த வண்ணம், தன் உடல் கொழுப்பிலிருந்து உணவைப் பெற்று வளர்த்துவிட்ட குஞ்சுக்கு அப்போதுதான் அதன் தாய்ப் பென்குயினை ஆண் பறவை அறிமுகம் செய்துவைக்கும்.

↓ மனிதத் தலை ஒன்றை வெட்டி வைத்தது போல் இருக்கிறதல்லவா. மத்திய அமெரிக்காவில் மெக்சிக்கோ வளைகுடாவில் இந்தவகை சிவப்பு மீன்கள் காணப்படுகின்றன.

மெக்சிக்கோ வளைகுடாப் பகுதியில் எண்ணெய் வளம் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மெதேன் எனப்படும் வாயுவும் அங்கு கடலில் கொப்பளிக்கிறது. அந்த வாயுவை உட்கொண்டு வாழ்வதற்கு அங்குள்ள உயிரினங்கள் பழக்கப்பட்டுள்ளன. மெதேன் வாயுவை விட்டால் வேறு உணவும் அங்கு கிடையாது. ஏனெனில் அக் கடலில் தாவரங்கள் எதுவும் கிடையாது. அதனால்கிடைப்பதை வைத்து சீவிக்க வேண்டியதுதான்.

அக் கடலில் இந்த சிவப்பு மீன்கள் மட்டுமல்ல, விலாங்கு மீன்களும், சிப்பிகளும் மெதேன் எரிவாயுவை உண்டுதான் சீவியம் நடத்துகின்றன.

எண்ணெய்வள ஆராய்ச்சியின்போது இந்த சிவப்பு மீனைக் கண்டதும் மகா ஆச்சரியப்பட்டுப்போனார்கள் ஆய்வாளர்கள். நமக்கும்தான் ஆச்சரியம்.

# கட்டுப்பாடு



# அபூர்வம்



↓ இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்குமிடையில் எப்போதும் பிரச்சனைகள் தொடர்ந்த வண்ணமே இருந்து வருகின்றன. இரு தரப்பினரையும் சமதானமாக வாழவைக்க அவ்வப்போது பேச்சவார்த்தைகள் நடைபெறும். அதனால் கிட்டும் அமைதி நீடிப்பதில்லை. "இஸ்ரேலை உலகப் படத்திலிருந்து நீக்கியே தீருவோம்" என்று 1967ம் ஆண்டு எகிப்து போர் தொடுத்தது. ஆறே நாட்கள் இடம்பெற்ற போரில் இஸ்ரேல் பெரு வெற்றி கண்டது. பாலஸ்தீனத்துக்குரிய காஸா எனும் பிரதேசத்தையும் மேற்குக் கரையையும் ஆக்கிரமித்துக்கொண்டது இஸ்ரேல்.

முப்பது வருட இஸ்ரேலின் ஆதிக்கத்தின் பின் இப்பிரதேசங்களில் பாலஸ்தீன தன்னாட்சிக்கான ஏற்பாடுகள் இடம் பெற்றன. யாசீர் அரபாத்தின் விடா முயற்சியினால் ஓரளவு நிம்மதி ஏற்பட்டது.

காஸாவில் வாழ்ந்த பாலஸ்தீன இளைஞர்கள் எப்போதும் ஆயுதங்களுடன் தான் உலாவருவார்கள். சுயாட்சிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் ஆயுதங்களுக்கு முத்தமிட்டு விடைகொடுத்தனர்.

ஆனால் அந்தப் பிரிவு நீடிக்கவில்லை. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோபாவமும், முரண்டு பிடித்தலும் மறுபடியும் பாலஸ்தீன இளைஞர் யுவதிகளை ஆயுதங்களை நாடச் செய்துள்ளன. இப்போது ஆயுதங்களுக்கு முத்தமிடுவது பிரியா விடை கொடுக்க அல்ல. அதன் மீதுள்ள பிடிப்பைக்காட்ட. தான் மட்டுமல்ல தன் குழந்தைக்கும் பிடிப்பை ஏற்படுத்துகிறார். சமாதான முயற்சிகள் ஒரு தரப்பை அவமதிப்பதாக அமையுமானால் ஆயுதங்களுக்குத்தான் மரியாதை.

பெண் பறவை தான் தன் வாயில் பத்திரப்படுத்தி வைத்திருந்த (மீன்) உணவை முதன் முதலில் தன் குஞ்சுக்கு ஊட்டிவிடும். குஞ்சை அதன் தாயிடம் ஒப்படைத்துவிட்ட ஆண் பென்குயின் சுதந்திரமாகத் தன் பயணத்தைத் தொடங்கும்.

பென்குயின்கள் அனைத்துமே எவ்வளவு வித்தியாசமுமின்றி ஒரே மாதிரியாகவே தோற்றமளிக்கும். ஆனால் இவற்றின் குரல்களில்தான் வித்தியாசம் இருக்குமாம். தன்னுடைய இணையைக் கண்டு பிடிக்க குரலில் தென்படும் அடையாளம்தான் உதவுகிறது.

படத்தில் தங்கள் குழந்தைப் பென்குயின்களை தங்கள் பாதங்களில் வைத்தவாறு-மூடி மறைத்துப் பாதுகாக்கும் தந்தைப் பென்குயின்களைக் காணலாம்.

பென்குயின்களின் உடல் வெப்பம் மனிதருடைய வெப்பத்தின் அளவானதே! இந்தப்படத்தினைப் பிடிப்பதற்குச் சென்ற தென் துருவ ஆய்வாளர் (அவுஸ்திரேலியா) கிரஹாம் ரொபட்சன் 10கிலோ எடையுள்ள கம்பளி உடையினைத் தரித்தாக வேண்டியிருந்தது.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



ஜோன்சன் (நிரோஜ்)

20.09.97

பம்பலப்பிட்டி இல.07, நந்தன கார்டனில் வசிக்கும், எஸ். ஜெயக்குமார் -அனோசா தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஜோன்சன் (நிரோஜ்) முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் 20.09.97 அன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். இவரை, இவரது அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அருத்மாவத்தை மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, ஜெர்மன் மாமா, அத்தை, யாழ்ப்பாணம் அத்தை, சித்தப்பா, சித்தி, ஆகியோா இயேசுநாதரின் அருளுடன், ஆயகலைகளும் பெற்று பல்லாண்டு நீடூழி வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்- ஜெயகுமார்(அப்பா)



வாரமலர் தினமுரசு

# வாரிசு



படிப்பகம்